REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ThinakaranLk / ThinakaranLK

2024 ஜூலை 25 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 176 | Thursday 25, July, 2024 | 20பக்கங்கள் | 50/-




# IGP ஆக செயற்படுவதற்கு தென்னகோனுக்கு தடை

## உயர்நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு

தேசபந்து தென்னகோன், பொலிஸ் மாஅதிபர் பதவியிலிருந்தும், பொலிஸ் மாஅதிபர் பதவியில் பணியாற்றுவதிலிருந்தும், அந்தப் பதவி தொடர்பான அதிகாரங்களைப் பயன்படுத்துவதிலிருந்தும் இடைக்காலத் தடை விதித்து உயர் நீதிமன்றம் நேற்று (24) உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த இடைக்கால உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில், பொலிஸ் மாஅதிபரின் பணிகளை மேற்பார்வையிட சட்டத்தின் பிரகாரம் பொருத்தமான அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டது.

பொலிஸ் மாஅதிபராக தேசபந்து தென்னகோனை நியமித்தமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 09 அடிப்படை உரிமை மனுக்களை விசாரணை செய்வதற்கு அனுமதி வழங்கி, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



இந்த அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணை நிறைவடைந்து தீர்ப்பு அறிவிக்கப்படும் வரை இந்த இடைக்கால உத்தரவு அமுலில் இருக்கும்.

யசந்த கோதாகொட, அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு ஏகமனதாக இந்த உத்தரவுகளை பிறப்பித்துள்ளது.

இந்த மனுக்கள் தொடர்பான அடிப்படை உண்மைகளை முன்னர் பரிசீலித்ததன் பின்னர், மனுக்கள் விசாரணைக்கு எடுக்கப்படுமா? இல்லையா? என்பது தொடர்பான உத்தரவுகளை அறிவிக்க சம்பந்தப்பட்ட மனுக்கள் அழைக்கப்பட்டபோது, நீதியரசர் குழாம் தலை வர் நீதியரசர் யசந்த கோதாகொட திறந்த நீதிமன்றத்தில் உரிய உத்தரவை அறிவித்தார்.

இந்த மனுக்கள் தொடர்பில், மனுதாரர் மற்றும் பிரதிவாதி தரப்புகளுக்கு தமது உண்மைகளை முன்வைக்க நீண்ட கால அவகாசம் வழங்கப்பட்டதாக

06

### பொலிஸ் மாஅதிபர் தொடர்பில் உயர்நீதிமன்ற உத்தரவில் சட்ட சிக்கல்;

# அமைச்சரவையில் விரிவாக ஆராய்ந்த பின்னர் தீர்மானம்

## விசேட அமைச்சரவை கூட்டத்தில் நேற்று முடிவு



பொலிஸ் மாஅதிபர் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் இடைக்கால தடை உத்தரவில் உள்ள சட்ட அம்சங்களை ஆராய்ந்து, அடுத்த இரண்டு நாட்களுக்குள் அமைச்சரவையின் பதிலை அறிவிப்பதற்கு நேற்று (24) கூடிய அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் இந்த விசேட அமைச்சரவை கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

பொலிஸ் மா அதிபர் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இதில் பல சட்டச் சிக்கல்கள் இருப்பதாக அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவில் உள்ள சட்ட சிக்கல்கள் தொடர்பில் ஆழமாக ஆராய்ந்த பின்னர், அமைச்சரவையின் பதிலை எதிர்வரும் இரு தினங்களில் வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பொலிஸ் மாஅதிபர் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் நேற்று பிற்பகல் அமைச்சரவைக்கு கிடைத்துள்ளதால், அது தொடர்பான சட்ட சிக்கல்களை முழுமையாக ஆய்வு செய்வதற்கு கால அவகாசம் தேவை என்பதே அமைச்சரவையின் நிலைப்பாடு என அமைச்சரவை பேச்சாளர் கூறினார்.

இதற்கமைவாக அமைச்சரவையின் பதிலை எதிர்வரும் இரண்டு தினங்களில் அறிவிப்பதே சிறந்தது என்பது அமைச்சரவையின் ஏகோபித்த தீர்மானம் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

# புதிய கல்வி முறைக்கு அமைய தரம் 01,06,10 வகுப்புகளுக்கு நூல்கள்



புதிய கல்வி முறைக்கு அமைவாக, 2025 முதல் தரம் 01, 06, மற்றும் 10ஆம் வகுப்புகளின் மாதிரி வடிவமைப்பு வகுப்பறை கல்வி நடவடிக்கைகளுக்கு பாடநூல்கள் தயாரிக்கப்படுமென, கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த, தெரிவித்தார்.

ஹோமாகமவில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

2025ஆம் ஆண்டில் முதல் இரண்டு மாதங்களில் கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சை நடத்தப்படும். உயர் தர பரீட்சை உள்ளிட்ட ஏனைய பரீட்சைகளை சம காலத்தில் நடத்தி பரீட்சை நேர அட்டவணை

06

# இந்திய வரவு செலவுத் திட்டத்தில் இலங்கைக்கான நிதி அதிகரிப்பு

## 95 கோடி ரூபாவால் அதிகரித்ததாக நிர்மலா சீதாராமன் அறிவிப்பு



இந்தியாவின் 2024-2025 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வெளிவிவகார அமைச்சுக்கான ஒதுக்கீட்டின் கீழ் இலங்கைக்கான நிதியை இந்தியா அதிகரித்துள்ளது.

இந்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், அந்நாட்டின் பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாயன்று சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டத்தின் கீழ், வெளிவிவகார அமைச்சுக்கான நிதியே இவ்வாறு அதிகரித்து ஒதுக்கப்பட்டுள்ளது. நேபாளம்

06

# தொழில்வாய்ப்புக்களை உருவாக்கும் பொருளாதார முறைமைகள் அவசியம்

## கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரியின் 106 ஆவது ஆண்டு விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு



வெளிநாடுகளில் நமது இளைஞர்கள் வேலை தேடிச் செல்வதற்குப் பதிலாக உள்நாட்டிலேயே வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் திட்டத்தை பத்து வருடங்களில் செயற்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இவ்வாறு செய்யாவிடின், கல்விக்காக பெருமளவு பணத்தைச் செலவு செய்யும் அரசாங்கத்தின் அர்ப்பணிப்புக்கான பலன் நாட்டுக்கு கிடைக்காது போகும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரியின் 106 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று (24) இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே

06

# தோட்ட தொழிலாளர் சம்பளத்தை அதிகரிப்பதில் அரசு உறுதியாகவே உள்ளது

## முதலாளிமார் நீதிமன்றம் சென்றதாலேயே தாமதம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் உள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்தும் தலையிட்டு வருவதாக தெரிவித்த அமைச்சர்,

06

# விவசாயிகளை தொடர்ந்தும் அரசியல் கையாட்களாக மாற்ற முடியாது

## பயறு பயிரிடும் திட்டமும் ஆரம்பம்



உள்நாட்டு விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக தற்போதைய அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டமிடப்பட்ட விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தை வைத்து, விவசாயிகளை அரசியல் கையாட்களாக்க முடியாதென கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

06

# பெருந்தோட்டத் தொழிலாளருக்கான ரூபா 1,700 சம்பள வர்த்தமானி இரத்து



பெருந்தோட்டத் தொழிலாளருக்கு நாளாந்த சம்பளமாக 1,700 ரூபா வழங்கப்பட வேண்டுமென தெரிவித்து தொழில் அமைச்சின் செயலாளர் வெளியிட்டிருந்த அதிவிசேட வர்த்தமானி, இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மே, 21 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானியே இவ்வாறு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரிவித்துள்ள தொழில் அமைச்சின் செயலாளர் ஆர்.பி.ஏ. விமலவீர, இம்மாதம் 10ஆம் திகதியிடப்பட்ட புதிய அதிவிசேட

06

# புதிதாக வாங்கிய, விற்ற வாகனங்களின் விபரங்களை அறிவிப்பது கட்டாயம்

## மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவிப்பு



புதிதாக வாங்கிய வாகன விபரங்களை Whats App ஊடாக உடனடியாக தெரிவிக்குமாறு மோட்டார் போக்குவரத்து திணைக்களம் பொதுமக்களை கேட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தலைமையில் நேற்று, தகவல் திணைக்களத்தில் விசேட செய்தியாளர் மாநாடு நடைபெற்றது. இது தொடர்பாக அவர் ஊடகவியலாளர்களிடம் தெரிவிக்கையில் ,

வாகனத்தை வாங்குபவர் மற்றும் விற்பவர் இரு தரப்பினரும் வாகனங்கள் தொடர்பான

06

# லிட்ரோ சமையல் எரிவாயு தட்டுப்பாடு நீக்கப்பட்டது



நாட்டின் சில பகுதிகளில் நிலவிய சமையல் எரிவாயு தட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளதாக, லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

நாட்டில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவுவதாக பாவனையாளர்கள் தெரிவித்திருந்தனர். இதையடுத்து, இது தொடர்பாக லிட்ரோ நிறுவனம் ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளது. தற்போது இந்நிலைமை சீர்செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாகப் போக்குவரத்து பிரச்சினைகள் காரணமாகச் சில இடங்களுக்கு லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் முதல், இந்நிலைமை சீர் செய்யப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

### த பினான்ஸ் நிதி நிறுவனத்தின்

# 6,400 வாடிக்கையாளரின் பணம் மீள கையளிக்கப்பட வேண்டும்

## சபையில் சாணக்கியன் எம்.பி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

த பினான்ஸ் நிதி நிறுவனத்தில் தமது பணத்தை வைப்பிலிட்டுள்ள 6400 வாடிக்கையாளர்களினதும் பணத்தை மீளப்பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தாமதிக்காது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி இராசமாணிக்கம் சாணக்கியன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள்

06

# நேபாளத்தில் விமான விபத்து; பயணிகள் சகலரும் பலி



நேபாளத்தில் 19 பயணிகளுடன் புறப்பட்ட விமானம் விபத்துக்குள்ளானதில் 19 பேரும் உயிரிழந்துள்ளனர்.

காத்மாண்டுவில் உள்ள திரிபுவன் சர்வதேச விமான நிலையத்தில் நேற்று காலை 19 பேருடன் இந்த விமானம் புறப்பட்டது. காலை 11 மணியளவில் புறப்பட்ட இந்த விமானத்தில், விமான ஊழியர்கள் உட்பட குறைந்தது 19 பேர் இருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விமானம் விழுந்து நொறுங்கியதில் விமானம் முழுவதும் தீயில் கருகியுள்ளது. இந்த நிலையில் முதல்கட்டமாக 19 பேர்,

06

# நிலையான வைப்பு, கடன் வட்டி வீதங்கள் குறைப்பு



மத்திய வங்கியின் நிலையான வைப்பு வசதி வீதம் Standing Deposit Facility Rate (SDFR) மற்றும் நிலையான கடன் வசதி வீதம் (Standing Lending Facility Rate (SLFR) ஆகியவற்றை முறையே 25 அடிப்படை புள்ளிகளால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் நாணயச் சபை கூட்டத்தில் நேற்று முன்தினம் (23) நடைபெற்ற கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

06

# 'கிளப் வசந்த' படுகொலை: மேலும் இருவர் கைது

## துப்பாக்கிதாரிகளுக்கு உதவியதாக தெரிவிப்பு



அத்துருகிரிய 'கிளப் வசந்த' உட்பட இருவர் படுகொலை செய்யப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கு உதவிய சந்தேகத்தில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல்மாகாண தெற்கு குற்றத் தடுப்பு பிரிவின் அதிகாரிகள், இச்சந்தேகநபர்களை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதுருகிரியவில் பச்சை குத்தும் நிலையத்தில் இடம்பெற்ற கடந்த ஜூலை (08) துப்பாக்கிச்சூட்டில் இருவர் கொல்லப்பட்டு, 04 பேர் படுகாயமடைந்தனர்.

06

# ஜனாதிபதியின் தலைமைத்துவம் தொடர்ந்தாலேயே பொருளாதாரத்தை வெற்றிகரமாக கட்டியெழுப்ப முடியும்



## வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் வலியுறுத்தல்

கடந்த காலத்தில் இலங்கை எதிர்கொண்ட பாரிய பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதில் ஜனாதிபதியின் திறமையே முக்கிய பங்களிப்பை வழங்கியதாக வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பில் புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்பை பாராட்டும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விகமணிக ஹரசற எனும் நிகழ்ச்சி குருநாகல் சத்தியவாடி மைதானத்தில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்றது.

நிகழ்வின் முக்கிய அதிதிகளில் ஒருவராகக் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் தொடர்ந்து கருத்து வெளியிடும்போது குறிப்பிட்டதாவது:

"கடந்த 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டது. நாட்டின் வரலாற்றில் அன்றைய அரசாங்கத்தின் தலைவரான ஜனாதிபதி பதவி விலகும் நிலைமை ஏற்பட்டது. அத்தியாவசியப் பொருட்களுக்கான பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டது. பொதுமக்கள் நாட்கணக்கில் வரிசைகளில் காத்திருந்து எரிபொருள் உள்ளிட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. அவ்வாறான நிலையில் இந்த நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கான அந்நிய செலாவணியை ஈட்டிக்கொள்வதில் புலம்பெயர் தொழிலாளர்கள் மீது நம்பிக்கை வைத்தார். அவரின் நம்பிக்கை வீண்போகவில்லை. இன்று இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டித் தரும் முக்கிய துறையாக புலம்பெயர் தொழிலாளர்களைக் குறிப்பிடலாம்

இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளைத் திறமையாக சமாளித்தது போன்றே, எதிர்காலத்தில் அவ்வாறான ஒரு நிலை மீண்டும் ஏற்படுவதைத் தடுக்கும் வகையிலும் மிக முக்கியமான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ளார்.

அவர் ஆரம்பித்து வைத்துள்ள இந்த நடவடிக்கைகளை தொடர்ந்தும் வெற்றிகரமாக முன்னெடுக்க அவரது தலைமைத்துவத்தினால் மட்டுமே முடியும். அந்த வகையில் எதிர்வரும் காலத்திலும் அவரது தலைமைத்துவம் தொடர்ந்திருப்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாகும். ஏனெனில் மீண்டுமொரு தடவை அத்தியாவசியப் பொருட்களுக்காக வரிசைகளில் காத்திருக்க பொதுமக்கள் தயாராக இல்லை".

இவ்வாறு ஆளுநர் நஸீர் அஹமட் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் தொழில் உறவுகள்,வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் ஜகத் புஷ்பகுமார, ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, கால்நடை வளத்துறை இராஜாங்க அமைச்சர் டீ.பி.ஹேரத், முன்னாள் அமைச்சர் அகில விராஜ் காரியவசம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.







## நதீரா மடுகல்ல எழுதிய

# 'பார்லிமேந்துவே பலஹத்காரய' நூல் வெளியீடு



### பாராளுமன்றத்தின் பாரம்–பரியம் மற்றும் ஜனநாயக உரிமைகள் குறித்தும் பார்லிமேந்துவே பலஹத்–காரய (பாராளுமன்றத்தின் பலவந்தம்) நூலின் ஊடாக மக்களுக்கு எடுத்துரைக்–கப்பட்டுள்ளது –பிரதமர் தினேஷ் குணவர்தன

நதீரா மடுகல்ல எழுதிய பார்லிமேந்துவே பலஹத்காரய ('பாராளுமன்றத்தின் பலவந்தம்_ பொலிஸ் அழைக்கப்பட்டு அவையிலிருந்து வெளியேற்றப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்') என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் (23) ஜனாதிபதி அலுவலகத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்க ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

நதீரா மடுகல்ல தனது 20 வருட அனுபவத்தினாலும், திரட்டிய அறிவினாலும் வாசகர் உலகிற்கு கொண்டு வரும் 'பாராளுமன்றத்தின் பலவந்தம்' நூலானது பாராளுமன்ற வரலாற்றை பிரதிபலிக்கும் கண்ணாடியாகும்.

இந்நூலின் ஊடாக இலங்கைப் பாராளுமன்றத்தில் ஊடகங்களுக்கும் சமூக ஊடகங்களுக்கும் தென்படாத உண்மைகளை நாட்டுக்கு வெளிப்படுத்த ஊடகங்களின் வாயிலாக முயற்சித்துள்ள நூலாசிரியர் இந்நூலின் ஊடாக மேலும் ஒரு அடியை முன்னோக்கி எடுத்து வைத்துள்ளார்.

நதீரா மடுகல்ல களனி பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறை தொடர்பான பட்டம் பெற்றுள்ளார். எழுத்து மற்றும் வெகுஜனத்துறை தொடர்பில் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா பெற்றுள்ள அவர் வானொலி,தொலைக்காட்சி, மற்றும் பத்திரிகை துறையில் பிரபல ஊடகவியலாளராவார். அவர் தற்போது ஜனாதிபதி ஊடகப் பிரிவில் பாராளுமன்ற விவகாரங்களுக்கான பணிப்பாளராக கடமையாற்றி வருகின்றார்.

இந்நூலின் முதற் பிரதி நதீரா மடுகல்லவினால் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் வழங்கி வைக்கப்பட்டு, பின்னர் அமைச்சர்கள் தலைமையிலான முக்கியஸ்தர்களுக்கும் பெற்றோருக்கும் நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன. நூல் வெளியீட்டு விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் பிரதான உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் தினேஷ் குணவர்தன, "பாராளுமன்ற பாரம்பரியம் மற்றும் ஜனநாயக உரிமைகள் குறித்து 'பாராளுமன்றத்தின் பலவந்தம்' நூல் சுவாரஸ்யமாக மக்களை சென்றடையும் வகையில் எழுதப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

இந்நூலின் ஊடாக பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பில் நல்லதொரு கருத்தை சமூகத்திற்கு வழங்குவதற்கு எழுத்தாளர் நதீரா மடுகல்ல முயற்சித்துள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய பிரதமர் தினேஷ் குணவர்தன மேலும் தெரிவித்ததாவது:

"நதீரா மடுகல்லவின் 'பாராளுமன்றத்தின் பலவந்தம்' வெளியீட்டு நிகழ்விற்கு என்னை அழைத்தமைக்கு நன்றி. இது மிகவும் சுவாரஸ்யமான மற்றும் ஆக்கபூர்வமான வெளியீடாகும். இலக்கியம் , மொழிகள் மற்றும் கலைகளால் இலக்கியம் வளர்க்கப்படுகிறது. நதீரா மடுகல்ல வெளியிட்டிருக்கும் இந்தப் படைப்பை இலக்கியத்தை மேலும் செழுமைப்படுத்தும் படைப்பாகவே நான் பார்க்கிறேன். இவரது மொழி கையாளுதல் மற்றும் ஆக்கபூர்வமான முன்வைப்பு காரணமாக இலங்கை பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான வரலாற்று நிகழ்வுகள் மக்களிடம் அழகாக முன்வைக்கப்பட்டுள்ளன. அவரது இந்த முதல் புத்தகத்தின் மூலம், பாராளுமன்ற விவகாரங்கள் பற்றிய விளக்கத்தை சமூகத்திற்கு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனாலேயே இலங்கை பாராளுமன்றத்தில் நடந்த பல நிகழ்வுகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

பாராளுமன்றத்தின் பன்முகத்தன்மை காரணமாக, இலங்கையின் இலக்கியத்துறை மேலும் போசிக்கப்பட்டுள்ளது. அதனால் எழும் சுவாரசியமான விடயங்களிலும் இந்நூல் இணைக்கப்பட்டுள்ளன. பாராளுமன்ற மரபைப் பாதுகாத்து ஜனநாயக பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்நூல் சிறந்த உதாரணம். பாராளுமன்றத்தின்



தகவல்களை மக்களிடம் கொண்டு சேர்த்ததற்காக ஆசிரியர் நதீரா மடுகல்லவுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என பிரதமர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன:

"பாராளுமன்றம் என்பது ஜனநாயகத்தின் ஒரு பகுதியாகும். இலங்கையிலும் உலகிலும் பாராளுமன்றத்தை சமூகம் தான் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இறையாண்மை அதிகாரத்தால், குடிமகன் தன்னை பிரதிநிதித்துவப்படுத்த பாராளுமன்றத்திற்கு ஒரு பிரதிநிதியை நியமிக்கிறார். இந்தப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் செயல்படும் விதம் மாறலாம். உதாரணமாக விஜயானந்த தஹநாயக்க பாராளுமன்றத்திற்கு துண்டொன்றை கட்டிக் கொண்டு பாராளுமன்றத்திற்கு வந்தார். சபாநாயகரின் அறிவிப்புக்கு செவிசாய்க்காததால் சிலரைப் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நூலில் 'பலவந்தம்' என்ற வார்த்தையைப் பல்வேறு விதத்திலும் பயன்படுத்த முடியும். 88_89 காலகட்டத்தின் பலவந்தம் பற்றி சமூகம் வேறுபட்ட கருத்தைக் கொண்டுள்ளது. உயிர்களை பறிக்கும் மட்டத்திற்கு பலவந்தம் பயன்படுத்தப்பட்டது. ஆனால் பாராளுமன்றத்தின் பலவந்தம் என்பது ஜனநாயகத்துடன் தொடர்புபட்டது என்றே கூற வேண்டும்".

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத்:

"வெகுசன ஊடகங்கள் மற்றும் பாராளுமன்ற ஜனநாயகம் ஆகியவற்றில் விசேட ஆர்வம் கொண்டவர் என்ற வகையில், இங்கு உரையையாற்ற முடிந்ததை பெரும் பாக்கியமாக கருதுகிறேன். இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலான விடயங்கள் இந்நாட்டில் நடந்தவை.

இந்தக் கதவு வழியாகத்தான் அனைத்து உறுப்பினர்களும் பலவந்தமாக வெளியே அழைத்துச் செல்லப்பட்டனர். இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் அரசியலில் இருந்த நல்லெண்ணம் கொண்ட அரசியல்வாதிகள் பற்றியும் இந்நூல் குறிப்பிடுகிறது. அந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நாட்டுக்காக சிறந்த பணிகளை செய்திருக்கிறார்கள்".

1956 ஆம் ஆண்டு சிங்கள மொழியை அரசகரும மொழியாக்கும் சட்டம், தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கும் சட்டம், போன்ற நாட்டிற்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சட்டங்களின்போது இந்த பலவந்தம் இடம்பெற்றன. எனவே, இந்நூல் இச்சட்டங்களைப் பற்றி ஆராயும் ஆர்வத்தை மக்களிடம் ஏற்படுத்தியிருக்கிறது. இந்நூலைப் படித்த பிறகு, சம்பந்தப்பட்ட சட்டங்கள் தொடர்பான ஹன்சார்ட் அறிக்கைகளைப் படிக்க வாசகருக்கு ஆர்வம் ஏற்படும்".

ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் நதீரா மடுகல்ல:

"இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் பிரஜை என்ற ரீதியில் ஒரு கடமை இருக்கிறது என்று நான் நம்புகிறேன். அதுதான் அவர்களின் நாட்டைப் பாதுகாப்பது. அந்தக் கடமையை பிரஜை நிறைவேற்றாவிட்டால், நம் தாய்நாடு பாதுகாப்பற்றதாகிவிடும். இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டுமானால் நெருக்கமும் ஒழுக்கமும் மிக முக்கியம்.

உலகின் பல்வேறு நாடுகளில் அரசியலைப் பற்றி வெவ்வேறு முறைகள், கருத்துகள், எண்ணக்கருக்கள் மற்றும் அணுகுமுறைகள் உள்ளன. இவற்றில் ஜனநாயகம் என்பது மிக முக்கியமான எண்ணக்கரு. எந்தவொரு நாடும் தனது குடிமக்களுக்கு பாதுகாப்பாக இருக்க, அதில் ஜனநாயகம் இருக்க வேண்டும், அதை மக்கள் உணர வேண்டும். ஆனால் அந்த ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டியது பாராளுமன்றம் மட்டும் அல்ல. அங்கு குடிமக்களாகிய உங்களுக்கும் எனக்கும் பெரும் பொறுப்பு உள்ளது. நான் பிரஜை என்ற கடமையையே செய்கிறேன்.

இந்த நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பது எனது கடமையாகக் கருதி 'பாராளுமன்றத்தின் பலவந்தம்' என்ற தலைப்பில் எனது முதல் புத்தகத்தை வெளியிடுகிறேன். 20 ஆண்டுகளுக்கும் மேலாக பாராளுமன்றத்தில் செயற்பட்ட அனுபவத்தையும் அறிவையும் பயன்படுத்தி இந்தப் படைப்பு ஆய்வு நூலாக வெளியிடப்பட்டுள்ளது."

அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, டிரான் அலஸ், இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான பிரேமநாத் சி. தொலவத்த, எரான் விக்கிரமரத்ன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (ஓய்வு பெற்ற) ஜெனரல் கமல் குணரத்ன, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு...





# நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே தேர்தலில் மக்களின் பெரும்பான்மையான ஆதரவு கிடைக்கும்

வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் (23) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க இதனைக் குறிப்பிட்டார்.

இராஜாங்க அமைச்சர் மேலும் கூறியதாவது:

"வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட நாடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் 'இரண்டு வருடங்கள்' என்ற குறுகிய காலத்திற்குள் மீட்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க எமது அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் நட்டமடையும் நிலையைத் தவிர்த்து இலாபம் ஈட்டும் நிலைக்கு வந்துள்ளன.

உலகில் கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள ஏனைய நாடுகள் இவ்வளவு குறுகிய காலத்தில் பொருளாதார ஸ்திரத்தன்மையை எட்டவில்லை. இந்த ஸ்திரத்தன்மையை பேணுகின்ற அதேவேளை, பொருளாதாரத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு அனைத்துத் தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

## ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க



மேலும், அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் கடந்த காலத்தில் கொண்டு வரப்பட்ட வரித் திருத்தங்கள் குறித்தும் மக்கள் மத்தியில் சில எதிர்ப்புகள் எழுந்தன.

ஆனால், அந்த முடிவுகளின் நன்மைகளை மக்கள் பெறும்போது, அந்த எதிர்ப்பு மறைந்துவிடும். உலகில் உள்ள ஏனைய நாடுகள் நம் நாட்டை விட அதிக சதவீத வரிகளை வசூலிக்கின்றன என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

கடந் த நெருக்கடியின் போது, மக்களிடம் பணம் இருந்தது.ஆனால் வாங்குவதற்கு பொருட்கள் பற்றா க்குறையாக இருந்தன. ஆனால் தற்போது அவ்வாறான நிலைமை இல்லை. எனினும், இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டின் நிலைமையை நாம் யாரும் மறந்துவிடவில்லை. எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எமது ஆதரவை வழங்குவோம். மேலும் கட்சி பேதமின்றி ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க மக்களும் தீர்மானித்துள்ளனர்.

அரசியல்வாதிகள் பல்வேறு கட்சிகளில் இணைந்திருந்தாலும், வாக்காளர்கள் மாறப் போவதில்லை என்பதையும் சொல்ல வேண்டும். வரவிருக்கும் தேர்தலில் வாக்காளர்கள் தனிநபரை பார்க்காமல் வேலைத்திட்டத்தைப் பார்த்தே செயற்படுவார்கள் என்பதைக் குறிப்பிட வேண்டும். குறிப்பாக அடுத்த தேர்தலில் பதுளை பிரதேசத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிக வாக்குகளைப் பெறுவார் . நமது நாட்டு மக்கள் செய்நன்றி மறக்காமல் நன்கு சிந்தித்து பணியாற்றுவார்கள் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்".

ஜனாதிபதி ஊடகப் பிரிவு...

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்

THINAKARAN

2024 ஜுலை 25 வியாழக்கிழமை


**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.42
ளுஹர் - 12.18
அஸர் - 03.42
மஃரிப் - 06.31
இஷா - 07.46

**இன்றைய சுபதினம்**

குரோதி வருடம் ஆடி 09

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 7.32 - 9.02வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



கடன் மறுசீரமைப்பின் பின்னர்,

# நுவரெலியா கொத்மலை நிறுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் மீள ஆரம்பம்

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன,

சர்வதேச ஆதரவுடன் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றும் திறன் கொண்ட ஒரே தலைவ,ர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே. அமைச்சர் தொண்டமான் தலைமையிலான எமது அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே போட்டியிடுவாரென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வேண்டுகோளுக்கிணங்க 120 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட, டன்சினன் பூண்டுலோயா வீதியை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஆயிரம் கிலோமீட்டர் கார்பெட் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் 4.2 கிலோமீட்டர் முதல் 9.6 கிலோமீட்டர் வரையிலான 5.4 கிலோமீட்டர் பகுதி மீண்டும் கார்பட் இடப்பட்டு செப்பனிடப்பட்டுள்ளது.

வீதியை திறந்து வைத்த பின்னர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன வைபவத்தில் உரையாற்றினார். தேவைகளை நிறைவேற்றவும் பெரும் பிரச்சினையாக இருந்தது.

06



# அத்தியாவசிய பாடங்களின் கீழ் தொழில்நுட்பம், அழகியற் கலை

## கல்வி அமைச்சர் சுசில் சபையில் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



தகவல் தொழில்நுட்பம் மற்றும் அழகியற் கலை ஆகிய பாடங்கள் அத்தியாவசிய பாடங்களின் கீழ், கொண்டுவரப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பரீட்சை நெருக்கடிகள் சம்பந்தமான மதிப்பீடுகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டாலும் பாடங்களில் குறைபாடு இல்லாத வகையில் மேற்படி இரண்டு பாடங்களும் அத்தியாவசிய பாடங்களின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

அந்த வகையில் புதிய பரிந்துரைகளுக்கு அமைய எந்த ஒரு பாடமும் குறைக்கப்படவில்லை என்பதையும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மாணவர்கள் அதிக பரீட்சைகளை எதிர்கொள்ள நேர்ந்துள்ளதால் அந்த முறைமையிலிருந்து அவர்களை மீட்டெடுப்பதற்காக கல்வியில் மாற்றங்களை கொண்டு வர வேண்டியுள்ளது. சகல மாணவர்களும் 11ஆவது வகுப்புக்கு பின்னர் அவர்கள் கற்றுக் கொண்ட அனைத்து பாடங்களுக்கும் சான்றிதழ்களை பெற்றுக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அந்த சான்றிதழ்கள் மூலமே உயர் கல்வி தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



இந்தியாவுக்கான இலங்கை துணை உயர் ஸ்தானிகர் டி. வெங்கடேஷ்வரன் அண்மையில் பின்னணி இசையமைப்பாளர் இளையராஜாவை சென்னையிலுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்தபோது பிடிக்கப்பட்ட படம். இதன்போது இளையரா ஜாவை இலங்கைக்கு வருமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

# அதிக புகை வெளியிடும் வாகனங்களை 0703500525 WhatsApp ஊடாக அறிவிக்கவும்



அதிக புகையை வெளியிடும் வாகனங்களைக் கண்டால் அவ்வாறான, வாகனம், இடம்,நேரம், நாள்,வாகன இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு, மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வாட்ஸ்அப் இலக்கத்துக்கு புகைப்படம் அல்லது காணொளியை அனுப்புமாறு வாகன புகை பரீட்சித்தல் நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் தசுன் கமகே தெரிவித்தார்.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் எதிர்கால வேலைத்திட்டம் மற்றும் தற்போதைய வேலைத்திட்டம் தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (24) நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதற்கமைவாக குறிப்பிட்ட வாகனங்களின் விபரங்களை மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் 070 3500525 என்ற வாட்ஸ்அப் எண்ணுக்கு பொது மக்களால் அனுப்ப வசதி செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

06

# சிலாபம் தெதுறு ஓயா ஆற்றினுள் ஆட்களை கடித்துக் குதறும் மீன்

(புத்தளம் மாவட்ட குறூப் நிருபர்)



சிலாபம், தெதுரு ஓயா ஆற்றில் ஆட்களை கடித்துக் குதறும் புதிய வகை ஆபத்தான மீனொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தெதுரு ஓயா ஆற்றுக்குள் நீராடச் சென்ற இளைஞர் ஒருவரை இப்புதிய வகையான இராட்சத மீன் கடித்து குதறியதில் 16 தையல்கள் போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக தெதுரு ஓயாவின் இரு புறங்களிலுமுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஆற்றுக்குள் இறங்க அச்சமடைந்துள்ளனர். சில நாட்களுக்கு முன்பு இந்த மீன் ஆரியகம என்ற பிரதேசத்தில் நபர் ஒருவரை கடித்து குதறியுள்ளது. பலத்த காயங்களுக்குள்ளான இவர், சிலாபம் வைத்தியசாலையில் ஒருவாரம் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார். இவருக்கு 16 தையல்கள் போடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. மீனவர் ஒருவரின் வலையில் சிக்கிய இந்த மீன் சுமார் 4 அடி நீளமும், 25 கிலோ எடையும் உள்ளதென கிராம மக்கள் தெரிவித்தனர். இவ்வாறு பிடிக்கப்படும் மீன்கள் அலிகேட்டர் வகை மீனாக இருக்கலாமென்றும் கிராம மக்கள் தெரிவித்தனர்.




தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 09ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 18

### குறள் தரும் சிந்தனை



நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது

*உறுதியான உள்ளமும், அத்துடன் ஆர்ப்பாட்டமற்ற அடக்க உணர்வும் கொண்டவரின் உயர்வு, மலையைவிடச் சிறந்தது எனப் போற்றப்படும்.*

## உரிய காலப் பகுதியில் தேர்தல்கள் நடத்தப்படும்

இலங்கையில் இவ்வருடத்தின் பிற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக் குழு முன்னெடுத்துள்ளது.

இவ்வருடத்தின் பிற்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். அதே நேரம் இத்தேர்தலுக்கென பத்து பில்லியன் ரூபா வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் ஓரிரு எதிரணிக் கட்சிகள் பாராளுமன்றம் விரைவில் கலைக்கப்படவிருப்பதாகவும் பொதுத் தேர்தல் நடத்தப்பட இருப்பதாகவும் கூறியுள்ளன. ஆனால் அரசியலமைப்பின் பிரகாரம் இவ்வருடத்தின் பிற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல்தான் நடத்தப்படும். அதற்குத்தான் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நிதியொதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

இதைவிடுத்து இவ்வருடம் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்துவது தொடர்பில் எந்தவித உத்தியோகபூர்வ அறிவிப்பும் இற்றைவரையும் விடுக்கப்படவில்லை. அத்தோடு பொதுத்தேர்தலுக்கான நிதியொதுக்கீடு மேற்கொள்ளப்படவும் இல்லை. இது மிகவும் தெளிவானது. அப்படியிருந்தும் பொதுமக்களை தவறாக வழிநடத்தும் நோக்கிலேயே இவ்வாறான கதை பரப்பப்படுகிறது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இருந்த போதிலும் இவ்வருடம் பாராளுமன்றம் கலைக்கப்படுமா? பொதுத்தேர்தல் நடத்தப்படுமா என்ற கேள்வி பரவலாக எழுந்துள்ளது.

இவ்வாறான சூழலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படும். பாராளுமன்றம் கலைக்கப்படாது. பொதுத்தேர்தலும் நடத்தப்படாது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அதுதான் உண்மை. அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்றத்துக்கு இன்னும் பதவிக் காலம் உள்ளது. அதேநேரம் அரசியலமைப்பின் பிரகாரம் நடத்தப்பட வேண்டிய தேர்தல்கள் அனைத்தும் முறைப்படி நடத்தப்படும் என்று ஏற்கனவே குறிப்பிட்டிருக்கின்றார்.

இவ்வாறு ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பும், ஏற்பாடுகளும் தெளிவாக இடம்பெற்றுவரும் சூழலிலும் பாராளுமன்றம் கலைக்கப்படவிருப்பதாகவும் பொதுத் தேர்தல் நடாத்தப்படவிருப்பதாகவும் கூறப்படுவதானது அற்ப அரசியல் இலாபம் தேடிக் கொள்வதற்கான நோக்கிலாகும். ஜனாதிபதி தேர்தலுக்கு முகம்கொடுக்கத் திராணியற்ற கட்சிகளின் முகவர்கள் ஊடாகவே இவ்வாறான வதந்திகள் பரப்பப்படுகின்றன.

ஆனால் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில் மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் உள்ளது. அதனால் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவரும் இந்தச் சூழலில் பாராளுமன்றம் கலைக்கப்படப் போவதாகவும் பொதுத்தேர்தல் நடத்தப்படப் போவதாகவும் கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை. அதனை அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்தனவே தெளிவாக அறிவித்துள்ளார்.

நாடு கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்தது. அவ்வாறான நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கட்சி அரசியல் நலன்களுக்கு அப்பால் நாட்டையும் மக்களையும் மீளக் கட்டியெழுப்பும் வகையில் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை ஆரம்பித்தார். அதன் ஊடாக கட்டம் கட்டமாக மீட்சி பெற்று பொருளாதார மறுமலர்ச்சி பாதையில் நாடு பிரவேசித்து இருக்கிறது. அதன் பயனாக பொருளாதார நெருக்கடிக் காலத்தில் நாடும் மக்களும் முகம்கொடுத்திருந்த நெருக்கடிகளும் அசௌகரியங்களும் பெரும்பாலும் நீங்கிவிட்டன. ஆனபோதிலும் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களை முழுமையாக நீக்கும் வகையில் பொருளாதார மேம்பாட்டுக்கான வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாடு பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி மீட்சி பெற்று இருக்கும் தற்போதைய சூழலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டிய காலம் வந்துள்ளது. அதனால் அத்தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியொதுக்கீடு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கின்றது. பொருளாதார வீழ்ச்சியில் இருந்து இப்போதுதான் மீட்சி பெற்றுள்ளோம். அதனால் தேர்தலொன்றை நடத்துவதற்கு போதிய நிதியில்லை எனக் குறிப்பிடவோ அத்தேர்தலை பின்போடவோ எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. என்னதான் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்து மீட்சி பெற்றுள்ள போதிலும் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதிலும் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதிலும் உச்சபட்ச கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு இந்நிதியொதுக்கீடு நல்ல எடுத்துகாட்டாகும்.

இவ்வாறான சூழலில், பாராளுமன்றம் கலைத்து பொதுத்தேர்தல் நடத்தப்படவிருப்பதாகக் கூறுவதன் ஊடாக மக்கள் மத்தியில் தவறான தகவல்களைப் பரப்பி அற்ப அரசியல் இலாபம் பெறுவதற்கான முயற்சிக்கப்படுவது நன்கு தெளிவாகிறது. ஆனால் மக்கள் இவ்வாறான அற்ப முயற்சிகளின் பின்புலத்தையும் அதன் ஊடான எதிர்பார்ப்புக்களையும் அறியாதவர்கள் அல்லர். அதனால் இந்த முயற்சிகள் ஒரு போதும் மக்களிடம் எடுபடப் போவதில்லை. வெற்றிபெறப் போவதுமில்லை. ஜனாதிபதி அறிவித்துள்ளபடி, உரிய நேர காலத்தில் தேர்தல்கள் நடத்தப்படும் என்பது உறுதியானது.

editor.tkn@lakehouse.lk

# பா.ஜ.கவின் கூட்டாளிகளை திருப்திப்படுத்தும் பட்ஜட்

## இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் எதிர்ப்புப் போராட்டம்!




இந்திய மத்திய வரவுசெலவுத் திட்டத்தில் மாநிலங்களுக்கு இடையே பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகக் கூறி நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் நேற்று (புதன்கிழமை) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

மக்களவையில் நேற்றுமுன்தினம் (ஜூலை 23) நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மத்திய வரவுசெலவுத் திட்டத்தை தாக்கல் செய்தார். இதையடுத்து, பட்ஜட் குறித்த விவாதத்துக்காக நேற்றுக் காலை நாடாளுமன்றம் கூடியது. முன்னதாக, நாடாளுமன்ற வளாகத்தில் கூடிய இந்தியா கூட்டணி எம்பிக்கள், மத்திய பட்ஜட்டைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற காங்கிரஸ் குழு தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, திமுக எம்.பிக்கள் கனிமொழி, திருச்சி சிவா, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பட்ஜட்டுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, “இந்த பட்ஜட் பா.ஜ.கவின் கூட்டாளிகளை திருப்திப்படுத்துவதற்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது. அவர்கள்( பா.ஜ.க) யாருக்கும் எதுவும் கொடுக்கவில்லை.

இது பாரபட்சமான பட்ஜட். இந்த பட்ஜட்டை நாங்கள் தொடர்ந்து எதிர்ப்போம்” எனக் குறிப்பிட்டார். சமாஜ்வாதி கட்சி எம்.பி அகிலேஷ் யாதவ், “விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை கிடைக்க வேண்டும் என்று நாங்கள் அனைவரும் கோரியிருந்தோம். ஆனால் விவசாயிகளை விட தங்கள் அரசாங்கத்தை காப்பாற்றும் கூட்டணிக் கட்சிகளுக்கு ஆதரவு விலை கொடுக்கப்பட்டுள்ளது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை" என்று கூறினார்.

பா.ஜ.கவின் இரண்டு முக்கிய கூட்டாளிகள் ஆட்சி புரியும் மாநிலங்களான பீஹார் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு ஆதரவாக பட்ஜட் இருப்பதாக பல எதிர்க்கட்சித் தலைவர்கள் விமர்சித்தனர்.

ஆந்திரப் பிரதேசத்தின் புதிய தலைநகர் அமராவதியின் வளர்ச்சிக்கு நிதியமைச்சர் ரூ.15,000 கோடி ஒதுக்கி இருந்தார். இதேபோல், பிஹாரில் பல்வேறு வீதி இணைப்புத் திட்டங்களுக்காக ரூ.26,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.

# கல்குடா வலய சுங்கான்கேணி அ.த.க. பாடசாலை வலம்புரி விநாயகர் வித்தியாலயமாக பெயர் மாற்றம்

## பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்



கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட சுங்கான்கேணி அ.த.க. பாடசாலையானது, சுங்கான்கேணி வலம்புரி விநாயகர் வித்தியாலயம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன் புதிய பெயர்ப்பலகை திறப்புவிழாவும், பரிசளிப்புவிழாவும் பாடசாலையின் அதிபர் த.கேந்திரராஜா தலைமையில் நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரும், கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பாடசாலை பெயர்ப்பலகையினை திறந்து வைத்ததோடு, சாதனையாளர்களுக்கான பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

இதன் போது கல்வி, கலை கலாசாரம் மற்றும் விளையாட்டுத் துறைகளில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், நடன நிகழ்வுகளும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

பாடசாலையில் புதிதாக க.பொ.த உயர்தர வகுப்பினை நடத்துவதற்கு அனுமதி பெற்றுக்கொள்ள உதவியமைக்கும், பாடசாலை அபிவிருத்திக்கு உதவியமைக்கும் பாடசாலை சமூகத்தின் சார்பில் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் வலயக்கல்வி பணிப்பாளர் த. ஆனந்தரூபன், பிரதிக் கல்விப் பணிப்பாளர், நிர்வாகம் றிஸ்மியா பானு, பிரதி கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி ந.நேசகஜேந்திரன், பிரதி கல்விப் பணிப்பாளர், திட்டமிடல் சி.இதயகுமார், பிரதி கல்விப் பணிப்பாளர், முகாமைத்துவமும் தாபனமும் சி.தயாசீலன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் அ.ஜெயக்குமணன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் அருண் திருநாவுக்கரசு, முன்னாள் அதிபர் மு.மகேந்திரன், ஆசிரிய ஆலோசகர் அ. சந்திரகாந்தன் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், கிராம சேவை உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், ஸ்ரீ வலம்புரி சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு மற்றும் ஆலய நிர்வாக சபையினர், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஏ. ஸ்ரீதர்
வாழைச்சேனை தினகரன் நிருபர்



# அனைத்து இன மக்களையும் சமமாக நேசித்து பணியாற்றியவர் மர்ஹூம் அஷ்ரப் ஹுஸைன்



மர்ஹூம் அஷ்ரப் ஹுஸைன் சமூகப்பணியில் களம் அமைத்தவர் ஆவார். அவர் காலமாகி ஏழு வருடங்கள் சென்றுள்ளன. கொழும்பில் வாழும் காலத்தில் இனமத நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களை அவர் மேற்கொண்டார்.

கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் வறிய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் ஏழைகளின் ஜீவனோபாயத்திற்கும் ஸதகா எனும் பெயரில் நிதி தானதர்மங்களை அவர் வழங்கியுள்ளார். வீட்டுக்குத் தேடி வரும் ஏழைகளுக்கு உதவுவதில் மர்ஹூம் அஷ்ரப் ஹுஸைன் அரவணைக்கும் பண்பாளர்.

அதேபோல் அவரது மனைவி (தற்போது காலமாகி விட்டார்) மற்றும் அவரது பிள்ளைகள் உதவி புரிவதில் ஆர்வலர்களாக இருந்தார்கள்.

மர்ஹூம் அஷ்ரப் ஹுஸைன் அவர்களிடத்தில் விருந்தோம்பும் பண்பு காணப்பட்டது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நண்பர்கள், உறவுக்காரர்கள் என பலரையும் ஜும்ஆ தொழுகைக்குப் பின்னர் வரவழைத்து பகல் உணவு வழங்குவார்.

ரமழானில் நோன்பு துறக்கும் இப்தார் நிகழ்வை ஏற்பாடு செய்வது அவரது வழக்கம். உலமாக்கள், ஊடகவியலாளர்களை அவர் நேசிப்பார். அவர்களில் யாராவது பாதிக்கப்பட்டு இருந்தால் உடனடியாக அவர்களுக்கு உதவி புரிந்து ஆறுதல்படுத்துவார்.

ரமழான் வருவதற்கு முன்பதாக கொழும்பு நகரிலும் சுற்றுப்புறங்களிலும் உள்ள நோன்பாளிகளுக்கு மின்சாரம் தண்ணீர் குறைவின்றி ஏற்பாடு செய்யுமாறு வேண்டுகோள் முன்வைப்பார். கொழும்பில் வாழும் சகல இனமத மக்களுக்கும் அமைப்புகளுக்கு நிதி மற்றும் உலருணவு வழங்குவார்.

மர்ஹூம் அஷ்ரப் ஹுஸைன் மாதம் ஒருமுறை 'மில்லத்' எனும் பெயரில் பத்திரிகையொன்றின் ஆசிரியராக இருந்து அதனை வெளியிட்டார்.

மௌலவி எஸ்.எம்.எம். முஸ்தபா பலாஹி

# அநுராதபுரத்தின் முதலாவது உலமா மௌலவி ஏ.சி மஹ்பூப் (மிஸ்பாஹி)



அநுராதபுரத்தின் முதல் உலமா மௌலவி ஏ.சி மஹ்பூப் (மிஸ்பாஹி) கடந்த 23 ஆம் திகதி காலமானார். அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் பெருந்திரளான மக்கள் மத்தியில் அநுராதபுரம் திஸாவெவவ முஸ்லிம் மையவாடியில் இடம்பெற்றது.

மௌலவி மஹ்பூப் அநுராதபுரத்தைச் சேர்ந்த நாஹுர் மீரா ,அஹமது முத்து (சின்ன பிள்ளை) தம்பதியரின் புதல்வராவார். இவர் தென்னிந்தியா நீடூர் மிஸ்பாஹில் ஹுதா அரபுக் கல்லூரியில் பயின்று மௌலவி பட்டம் (1973_1979) பெற்றவர்.

மௌலவி ஏ.சி.மஹ்பூப் (மிஸ்பாஹி) கடந்த ஐம்பது வருடங்களாக அநுராதபுரம் பிரதேசத்தில் மார்க்க கடமையோடு, சமூக சேவையிலும் முழுமையாக ஈடுபட்டு வந்தார்.

புத்தளம் ஸாஹிராக் கல்லூரி, அநுராதபுரம் புனித வளனார் கல்லூரி ஆகியவற்றில் இவர் பயின்றுள்ளார். அநுராதபுரத்தில், உலமாக்கள் இல்லாதிருந்த சந்தர்ப்பத்தில் இவரது தாயாரினதும் மூத்த சகோதரர்களினதும் உதவியால் 1973ஆம் ஆண்டு தமிழ்நாடு ரீடுர் மிஸ்பாஹில் ஹுதா அரபுக் கல்லூரியில் 1979ஆம் ஆண்டு அக்கல்லூரியின் முதன்மை மாணவராக தேறி மௌலவி பட்டத்தை பெற்றுக் கொண்டார்.

கல்லூரியிலும் அப்பிரதேசத்திலும் இவரது பேச்சாற்றல் காரணமாக மார்க்க போதனைகளுக்கும் வைபவங்களுக்கும் அழைக்கப்படும் ஒருவராக இருந்தார். கலாசாலை விடுமுறை காலங்களில் தனது பிறந்த மண்ணுக்கு வந்து நோன்பு கால தொழுகை உட்பட மார்க்கப் பணிகளில் ஈடுபட்டு வந்தார்.

இவரது தாயாரும் தந்தையாரும் பொதுப்பணிகளில் ஈடுபாடு உள்ளவர்களாக இருந்தனர். 1980 களில் அநுராதபுரம் மொஹிதீன் ஜும்ஆ பள்ளிவாசலில் கடைமையாற்றிய பின்னர், அங்கு பெற்ற பல அபிவிருத்தி பணிகளின் பின்புலத்தில் இவர் செயற்பட்டார். மயிலகஸ் சந்தி, திலா வெல குருகாகல் வீதி. மீராவி போன்ற பகுதிகளில் பள்ளிவாசல், மத்ரஸாக்கள், தக்கியாக்கள் அமைய இவரது முயற்சி காரணமாக இருந்தது.

குருநாகல் வீதி, நீராவி போன்ற பள்ளிவாசல்களிலும் இவர் பேஷ் இமாமாக கடமையாற்றி இருந்தார். 2018 ஆம் ஆண்டு துரதிர்ஷ்டவசமாக இவர் கண் பார்வையை இழந்த நிலையில் அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள அரபுக் கல்லூரிகள் பலவற்றுக்கு உதவிகள் பெற்றுக் கொடுத்துள்ளார்.

ஏ.ஆர.எம். ரபியுதீன்
(திறப்பனை தினரகன் நிருபர்)

# அரச நிறுவனங்களின் சொத்துக்களை முறையாக நிர்வகிக்க அரசாங்கம் தயார்

## அரச சொத்துக்கள் முகாமைத்துவ சட்டமூடாக ஏற்பாடு



அரச சொத்துக்கள் முகாமைத்துவ சட்டத்தினூடாக நாட்டிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களின் சொத்துக்களையும் ஆராய்ந்து, முறையான முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வருவதற்கு தயாரென நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனங்கள் சுமார்1,600 க்கும் மேற்பட்டவை உள்ளதாகவும், அவற்றின் சொத்துக்கள் சரியான முறையில் நிர்வகிக்கப்படவில்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அந்த நிறுவனங்களில் சுமார் 91,000 வாகனங்கள் இருப்பதாகவும் நிலையான சொத்துக்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தி, அவற்றை முறையாக முகாமைத்துவம் செய்து மக்களுக்கு பயனுள்ள சேவையை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நிதி அமைச்சர் என்ற வகையில் முன்வைக்கப்பட்ட இது தொடர்பான சட்டமூலத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதேவேளை, பாராளுமன்றத்தில் முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட பொருளாதார மாற்றத்துக்கான சட்டமூலம் மீதான விவாதம் நேற்று (25) விவாதிக்கப்பட்டது. மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார சீர்திருத்தம் தொடர்பான சட்ட கட்டமைப்புகள் காலத்துக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்படுமெனவும், ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரம் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு சாதகமான சூழல் அமையுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி தேர்தல்: கட்டுப்பணம் அதிகரிக்கப்படுவது அவசியம்

## கட்சி வேட்பாளருக்கு 25 இலட்சம் சுயேச்சை வேட்பாளருக்கு 30 இலட்சம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தில் திருத்தங்களை மேற்கொண்டு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி வேட்பாளரின் கட்டுப்பணத்தை 25 இலட்சமாகவும், சுயேச்சை வேட்பாளரின் கட்டுப்பணத்தை 30 இலட்சமாகவும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென டளஸ் அழகப்பெரும எம்.பி. பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அப்போது தான் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையை வரையறுக்க வாய்ப்பு ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை திருத்தம் செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு, முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்தது. இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கியுள்ளது.

1981, 15 ஆம் இலக்க தேர்தல் சட்டத்துக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி வேட்பாளரிடமிருந்து 50 ஆயிரம் ரூபாவும் சுயாதீன வேட்பாளரிடமிருந்து 75 ஆயிரம் ரூபாவும் கட்டுப்பணமாக அறவிடப்படுகிறது.

அந்த வகையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி வேட்பாளரிடமிருந்து அறவிடப்படும் கட்டுப்பணத்தை 25 இலட்சமாகவும், சுயாதீன வேட்பாளரின் கட்டுப்பணத்தை 30 இலட்சமாகவும் திருத்தம் செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியது.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.



இரண்டு வேட்பாளர்களைத் தவிர ஏனைய வேட்பாளர்களின் கட்டுப்பணம் அரசுடமையாக்கப்பட்டது. எவ்விதமான வரையறைகளும் இல்லாமல் வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுவதால் அரசாங்கத்தின் நிதியே வீண் விரயமாக்கப்படுகிறது.

41 ஆண்டுகளுக்குப் பின்னரே கட்டுப்பணம் தொடர்பில் திருத்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் அவசரமாக கொண்டு வரப்பட்டுள்ளது. அதேபோன்று கட்டுப்பணம் விவகாரத்திலும் கவனம் செலுத்தி திருத்தமொன்றை முன்வைக்குமாறு வலியுறுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு எழுந்து பதிலளித்த சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்தை அவசரமாக கொண்டு வரவில்லை. சட்டத்தையோ அல்லது சட்ட திருத்தத்தையோ விரைவாக கொண்டு வர முடியாது. கட்டுப்பணம் தொடர்பான திருத்தத்தை இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு முன்வைக்க முடியாது. இதற்கான காலவகாசம் போதாது. 2029 ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் இவ்விடயம் குறித்து கவனம் செலுத்தலாம் என்றார்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு: 200 நிறுவனங்களின் உரிமங்கள் தடை



முறைகேடாக நடந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் சிலவற்றின் உரிமங்களை ரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் முதற்கட்டமாக இருநூறு நிறுவனங்களின் உரிமங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. மேலும் நானூறு நிறுவனங்களின் உரிமங்களை இடைநிறுத்தியுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார (23) பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மனுஷ நாணயக்கார நேற்று முன்தினம் (23) பாராளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்கிரமசிங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இத்தகவலை தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு முதல் 4,64,132 பெண் தொழிலாளர்கள் வெளிநாடு சென்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இவர்களில் மூன்று இலட்சத்து 1,188 பேர் வீட்டு வேலைக்காகவும் மற்றும் ஏனைய ஒரு இலட்சத்து 61 ஆயிரத்து 944 பேர் வேறு வேலைகளுக்காகவும் சென்றுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் மூன்று இலட்சத்து 62,904 பேர் பயிற்றப்பட்ட தொழிலாளர் மற்றும் ஒரு இலட்சத்து 199 பேர் பயிற்றப்படாத தொழிலாளர் எனவும் அவர் தெரிவித்தார்.






அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டி, செய்த்தூனா அல் அஹ்சா அஹதியா அரபுக்கல்லூரியின் முதலாவது மௌலவியா பட்டமளிப்பு விழா அண்மையில் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் அஸ்ஷெய்க் கே.எல்.நைசர் (நளீமி) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கலாசார பேராசிரியர் அஸ்ஷெய்க் எஸ்.எம்.எம்.மசாகிர் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு அரபு மொழியும் மற்றும் இஸ்லாமிய கற்கைகள் நெறியும் (டிப்ளோமா) பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கிவைத்தார். **அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**

# தபால் மூல வாக்களிப்புக்கு ஊடகவியலாளரையும் அனுமதிக்கவும்

## சபையில் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதித் தேர்தலின் போது தபால் மூல வாக்களிப்புக்கு ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி வழங்க வேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு இவ்விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும் எனவும் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் ஓரிரு மாதங்களில் நடைபெறவுள்ளது. தேர்தல் காலங்களில் ஊடக நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு வாக்குரிமை மறுக்கப்படுகிறது. நாட்டில் 17 பதிவு செய்யப்பட்ட தொலைக்காட்சி நிறுவனங்கள் உள்ளன. அதேபோன்று 52 வானொலி அலைவரிசைகளும் உள்ளன. தேர்தல் காலத்தில் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பு, அறிக்கையிடல் மற்றும் ஒளிபரப்பு பணிகளில் ஈடுபடுவதால் அவர்களுக்கு வாக்களிப்பதற்கான வாய்ப்பு மறுக்கப்படுகிறது. அந்த வகையில் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டைகளைக் கொண்டுள்ள ஊடகவியலாளர்களுக்கு தபால் மூல வாக்களிப்புக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

தேர்தல்கள் ஆணைக்குழு இவ்விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, இதற்கான அனுமதியை வழங்க வேண்டும். பாராளுமன்றத்தின் ஊடாக இதற்கான யோசனையை முன்வைப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மாணவர்கள் கற்பதற்காக புலமைப்பரிசிலை அறிமுகப்படுத்தியவர் ஜனாதிபதி ரணிலே

## பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன

**வெலிகம தினகரன் நிருபர்**

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்ற பின்னர் வரலாற்றிலே எந்தவொரு ஜனாதிபதியும் செய்யாத வேலையை அதாவது, பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு புலமைப் பரிசில் திட்டமொன்றை அமுல்படுத்தியுள்ளாரென பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், இந்நாட்டு பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்திக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாடசாலை மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காக இவ்வாறான புலமைப் பரிசில் நிதிகளை வழங்குவது பாரிய சேவையாகும். இதன் மூலம் மாணவர்கள் உச்சகட்ட பிரயோசனங்களை அடைந்து கொள்ள பெற்றோர்கள் கூடிய கவனம் செலுத்துவது அவசியம்.



1980ம் ஆண்டு கல்வி அமைச்சராக பதவி ஏற்ற ரணில் விக்ரமசிங்க, மாணவர்கள் கல்வி விடயத்தில் பங்களிப்பு செய்தார். நான் பாடசாலை மாணவர் தலைவராக இருந்த காலத்தில் எமது பாடசாலைக்கு அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன விஜயம் செய்தார். அந்த நேரத்தில் கல்வி அமைச்சராக ரணில் விக்ரமசிங்கவே பணி புரிந்தமை எனக்கு நினைவுக்கு வருகின்றது. அவர் அங்கு எங்கள் மத்தியில் அரசியல் பேசவில்லை. மாணவர்களின் எதிர்காலம் குறித்தே அவர் பேசினார்.

எனவே அன்று முதல் இன்று வரை ரணில் விக்ரமசிங்க மாணவர்களுக்கு எதனையும் அர்ப்பணிக்க தயாராக உள்ளார்.

இந் நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, தென் மாகாண ஆளுனர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, பாராளுமன்ற உறுப்பினர் சம்பத் அது கோரல, காலி மாவட்ட செயலாளர் டப்லியூ.ஏ. தர்மசிறி, மாணவர்கள், பெற்றோர்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.





வட இந்திய மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள சீரடி சாயி பாபா ஆலயத்தின் குரு பூர்ணிமா சமய அனுஷ்டானங்களின் 3ஆம் நாள் நிகழ்வு நேற்று காலை இடம்பெற்றது. நிகழ்வில் கொழும்பு புதுச்செட்டித் தெரு சீரடி சாய்பாபா ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என். உதயநாயகன் தலைமையிலான பக்தர்கள் குழு கலந்து கொண்டு பஜனை நிகழ்த்தினர். இதன்போது, மகாராஷ்டிர சாயி ஆலயத்தின் சார்பில் தலைமை அதிகாரியினால் அறங்காவலர் உதயநாயகன் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

# ஆலங்குடா அன்வாருல் உலூமில் முதலாவது பட்டமளிப்பு விழா

**புத்தளம் தினகரன் நிருபர்**

கல்பிட்டி ஆலங்குடா அன்வாருல் உலூம் அரபுக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா அண்மையில் ஆலங்குடா முஸ்லிம் மகா வித்தியாலய வளாகத்தில் இடம்பெற்றது. அரபுக் கல்லூரியின் ஸ்தாபகத் தலைவரும், உளநல வளத்துறை ஆலோசகருமான ஆசிரியர் எஸ்.எல். எம்.மின்சார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிபர் உஸ்தாதுமார்கள், பெற்றார்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் போது "மரம் வளர்க்க கரம் கொடுப்போம்" அமைப்பின் ஸ்தாபக தலைவர் ஹாமித் எம். சுஹைபினால் மாணவர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# நோயாளிக்கு அவசர உதவி தேவை



இரண்டு மாதங்களுக்கு முன்பு 88 வயது நிரம்பிய எனது தாயார் மேரி மார்கிரட் பர்னாந்து கடும் சுகயீனம் காரணமாக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களது மூளையில் ஒரு பெரிய கட்டி இருப்பது தெரியவந்தது. உடனடியாக அந்தக் கட்டி அகற்றப்படாவிடின் கோமா (COMA) நிலைக்கு போக வேண்டியிருக்கும் என மருத்துவர் தெரிவித்ததால், உடனடியாக 19.06.2024 அன்று 3 மணி நேர அறுவைசிகிச்சை செய்யப்பட்டு கட்டி அகற்றப்பட்டது. தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் (ICU) 2 நாட்கள் வைத்திருந்து, 22.06.2024 அன்று வாட்டுக்கு மாற்றப்பட்டார்கள். தொடர்ந்து மருத்துவமனையிலேயே இருக்கும் அவர்களுக்கு பேசவோ வாயினால் உண்ணவோ, குடிக்கவோ முடியாத நிலையினால், ஆகார பானங்கள் மூக்கின் வழியாக குழாய் மூலமாக நீராகாரமாக உட்செலுத்தப்படுகிறது. அவர்களது நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டிருப்பதால் வலது பக்கம் அப்படியே செலிழந்த நிலையில் இருக்கிறது. அவர்கள் பழைய நிலைக்குத் திரும்புவதற்கு அதிக காலம் எடுக்குமென்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளதால் தாயாரின் மருத்துவ, பராமரிப்பு செலவுகளுக்கு இயலுமானவர்களை நிதி உதவி செய்யுமாறு மிக அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உதவிசெய்ய விரும்புகிறவர்கள் பணத்தை S.G. Fernando, SAMPATH BANK, HENDALA BRANCH, A/C No. 100857528939 என்ற வைப்புக் கணக்கிற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் அனுப்பும் பணத் தொகை சிறிதாக இருந்தாலும் எங்களுக்கு அது பெரிய உதவியாக இருக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம். தொடர்புக்கு 0094711550751

## 'டிஜிட்டல் பொருளாதார வியூகம் 2030':

# டிஜிட்டல் மயமாக்கலை அடிமட்டத்திலிருந்து கொண்டு செல்லும் பணி கேகாலையில் ஆரம்பம்

**றிஸ்வான் சேகு முஹிதீன்**

இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கலை அடிமட்டத்திற்கு கொண்டு செல்வது என்பது தொடர்பான திட்டம் பல வருடங்களாக அவ்வப்போது ஆரம்பிக்கப்பட்டு முடங்குகின்ற தோல்வியடைந்த திட்டங்களின் ஒன்றாக காணப்படுகின்றது. ஆயினும் அயல் நாடான இந்தியாவில் இளநீர் கூட QR மூலம் விற்கப்படுகிறது என்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

இலங்கையில் டிஜிட்டல் மயமாக்கல் இல்லாமைக்கு முக்கிய காரணம் டிஜிட்டல் மயமாக்கலுக்கான நீண்ட கால திட்டம் இல்லாமை மற்றும், சட்ட வரைஞர்களுக்கும் அடிமட்ட மக்களுக்கும் இடையில் காணப்படும் தூரமாகும். அதற்குத் தீர்வாக, தற்போதைய ஜனாதிபதியின் நியமனத்தின் பின்னர், தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தலைமையில், டிஜிட்டல் வியூகம் 2030 அல்லது 'டிஜிட்டல் பொருளாதார மூலோபாயம் 2030' எனும் திட்டம் தொழில்நுட்ப அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் பொருளாதார மூலோபாயம் 2030 இன் முக்கிய அம்சம் இலங்கை முழுவதிலும் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டுவதாகும். அதற்கமைய, நாடு தழுவிய அளவில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான சிறிய மற்றும் நடுத்தர ((SME) தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்கான ஆரம்ப கட்டத் திட்டம் ஜூன் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, தற்போது வரை வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இங்கு, கேகாலை மாவட்டத்திலுள்ள அனைத்து நகரங்களையும் உள்ளடக்கிய சந்தை, கடைத் தொகுதிகளுக்கு சென்று, இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் குழுக்கள் டிஜிட்டல் யுகத்தை உருவாக்கத் தேவையான டிஜிட்டல் அம்சங்களை வழங்குகின்றனர்.

# ஜெர்மனி பரோபகாரிகளினால் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் கையளிப்பு




பேருவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பதனகொட பௌத்த கனிஷ்ட பாடசாலை மாணவர்களுக்கு சுமார் 1,25,000.00 ரூபா பெறுமதியான பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் அண்மையில் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பரோபகாரியான Dr. Andrea Hainer, City of Rodenbach அமைப்பின் நிதியுதவியில் இலவசமாக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இதனை இலங்கை இணைப்பாளர் இர்ஸான் மொஹமட் சார்பில் அமைப்பின் உறுப்பினர் ரிழா பாரூக் பாடசாலை அதிபரிடம் வைபவரீதியாக கையளிப்பதை படத்தில் காணலாம்.

## தொழில்வாய்ப்புக்களை உருவாக்கும்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார். கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரிக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை கல்லூரி இசை வாத்தியக்குழுவினர் சிறப்பாக வரவேற்றதுடன், கல்லூரியின் கெடட் படையினரும் ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தினர்.

அதனையடுத்து கல்லூரி வளாகத்திலிருக்கும் படைவீரர் நினைவுத் தூபிக்கு ஜனாதிபதி மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரியின் 106ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட "Xban" 2024 கல்வி விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக கண்காட்சியும் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது.

அதனையடுத்து கல்லூரி அதிபர் கசுன் குணரத்ன Xban" 2024 நினைவுப் சின்னத்தை ஜனாதிபதிக்கு வழங்கிவைத்தார்.

இதன்போது க.பொ.த. உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதியால் பரிசும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன .

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க:

புதிய தொழிநுட்பத்திற்கு ஏற்ற வகையில் கல்வி முறையை சீர்திருத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதற்கு தேவையான நிதியும் ஒதுக்கப்படுகிறது.

இக்கல்லூரிக்கு கடைசியாக 1992 நான், வருகை தந்திருந்தேன். கல்வி அமைச்சராக இருந்தவேளை

இக்கல்லூரிக்கு கட்டடங்களை வழங்க ஏற்பாடு செய்துள்ளேன். பிறகு 1992இல், தொழில் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சராக இந்தக் கல்லூரிக்கு வந்தேன். அன்று தொழில்நுட்ப வளர்ச்சி பற்றி பேசினோம்.அதனை இன்று கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரியில் காண முடிகிறது. இந்தக் கண்காட்சியும் அதனையே பிரதிபலிக்கிறது. கடந்த 30 ஆண்டுகளில் இந்த நாடு வேகமாக மாறிவிட்டது. ஆனால் நான்கு வருடங்களுக்கு முன்னர், கொவிட் தொற்றுநோய் காரணமாக, எமது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, மிகவும் கடினமான சூழ்நிலையை எதிர்நோக்கியது. சகலரும் இந்த சிரமத்தை எதிர்கொண்டனர். எரிபொருள், மருந்துகள் மற்றும் உணவுப் பொருட்களைப் பெற நாங்கள் வரிசையில் நிற்க வேண்டியிருந்தது.

"கிசா கோதமியா மாம்பழக் கொத்தை தேடிப் போனதை" போல இந்தக் கஷ்டத்தை காணாதவர்களை தேடிக்கொள்ள முடியாமல் இருந்தது. வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டவுடன் எமக்கு வெளிநாட்டு உதவிகளும் கிடைக்கும்.இருந்தும் இன்னும் சில சிக்கல்கள் உள்ளன. எனவே, சரியான திட்டத்துடன் பயணிக்க வேண்டும். அதனால் அடுத்த இரண்டு அல்லது மூன்று வருடங்களில் இந்த பொருளாதார சுமையை படிப்படியாக குறைத்து பொருளாதாரத்தை பலப்படுத்த முடியும். பொருளாதாரத்தை வலுப்படுத்துவதன் மூலம், மக்களுக்கு மேலும் நிவாரணங்களை வழங்க முடியும்.

மேலும், கடந்த 04 வருடங்களாக கல்விக்கான செலவீனங்களை மட்டுப்படுத்தியிருந்தோம். எனவே இப்போது கல்விக்காக பணம் செலவழித்து புதிய தொழில்நுட்பத்துடன் பாடசாலை கட்டமைப்பை ஒழுங்குபடுத்த எதிர்பார்க்கிறோம்.

பாடசாலைகளில் செயற்கை நுண்ணறிவு (AI) குழுக்கள் உருவாக்கப்படுகிறது. இந்த நடவடிக்கைகளுக்கு பணம் தேவைப்படுகிறது. மேலும், பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். கல்வித் துறையில் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கு உதவவும் முன்வருவோமென எலோன் மஸ்கிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். இம்மாத இறுதிக்குள் அவருக்கு இலங்கையில் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான அனுமதிப் பத்திரங்களை வழங்க எதிர்பார்க்கிறோம்.

மேலும், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்யும் இளைஞர் யுவதிகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். எம்மால் 04 வருடங்களாக தொழில்வாய்ப்புகள் வழங்க முடியவில்லை. எதிர்காலத்தில் இவர்களின் தொகை மேலும் அதிகரிக்கும். அதற்கு தீர்வு காண வேண்டும். இப்பிரச்சினைகள் அதிகரித்தால் நாட்டில் மீண்டும் போராட்டங்கள் வெடிக்கலாம். எனவே, தொழில் மற்றும் வருமான வழிகளை உருவாக்க பொருளாதாரத்தில் மாற்றம் செய்ய வேண்டும்.

## IGP ஆக செயற்படுவதற்கு...

நீதியரசர் யசந்த கோதாகொட குறிப்பிட்டார். சாதாரண நீதிமன்ற கடமைகளுக்கு அப்பால் இந்த மனு தொடர்பாக விடயங்களை பரிசீலிக்க நேரிட்டதோடு அதற்காக உதவி செய்த வழக்கறிஞர்கள் அனைவருக்கும். நீதிபதிகள் குழாமின் பாராட்டுகள் உரியது என்று தலைமை நீதிபதி கூறினார்.

இது தொடர்பான உண்மைகளை முன்வைத்ததன் முடிவில், பிரதிவாதியான தேசபந்து தென்னகோனுக்கு எதிராக வலுவான வழக்கு ஆதாரம் இருப்பதாக மனுதாரர் தரப்பு உண்மைகளை முன்வைப்பதில் வெற்றி பெற்றுள்ளதாக நீதியரசர் யசந்த கோதாகொட மேலும் தெரிவித்தார்.

இதன்படி தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மாஅதிபராக நியமிக்கப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை, விசாரிக்க அனுமதி பெற்றுக் கொடுக்க நீதியரசர் குழாம் ஏகோபித்த முடிவு எடுத்ததாக அங்கு குறிப்பிடப்பட்டது.

அத்துடன், பிரதிவாதியான தேசபந்து தென்னகோனை பொலிஸ் மாஅதிபராக நியமித்தமை அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என்ற உண்மையை முன்வைப்பதில் மனுதாரர் வெற்றி பெற்றுள்ளதாக நீதியரசர் யசந்த கோதாகொட குறிப்பிட்டார்.

இதன்படி,தேசபந்து தென்னகோனை பொலிஸ் மாஅதிபராக நியமித்தமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை, விசாரணைக்கு அனுமதிப்பதற்கு நீதியரசர் குழாம் ஏகமனதாக தீர்மானித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுவின் பிரதிவாதியான ஜனாதிபதியின் சார்பில் சட்ட மாஅதிபர், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் தேசபந்து தென்னகோன் ஆகியோருக்கு எதிராக அரசியலமைப்பின் 12(1) பிரிவின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளது தொடர்பாக இந்த மனுவை விசாரணை செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக நீதிபதி யசந்த கோதாகொட அங்கு மேலும் தெரிவித்தார்.

இதன்படி, தேசபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபர் பதவியை வகிக்கவும், கடமைகளை நிறைவேற்றவும், அந்தப் பதவி தொடர்பான அதிகாரங்களைப் பயன்படுத்தவும் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் மனுவின் விசாரணை முடியும் வரை அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் நீதியரசர் குழாமால் ஏகமனதாக உத்தரவிடப்பட்டுள்ளது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட மனுக்கள் தொடர்பான ஆட்சேபனைகளை 06 வார காலத்திற்குள் தாக்கல் செய்யுமாறு எதிர்தரப்புக்கு உத்தரவிடப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை நவம்பர் 11ஆம் திகதி ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை உயர் நீதிமன்ற வரலாற்றில் மற்றும் இலங்கை பொலிஸ் வரலாற்றில் பொலிஸ் மாஅதிபர் ஒருவர் அந்தப் பதவியில் கடமையாற்றுவதைத் தடுக்கும் வகையில் உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருப்பது இதுவே முதல் முறை என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டமைக்கு எதிராக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை , மாற்றுக் கொள்கைக்கான நிலையம், பேராசிரியர் சாவித்திரி குணசேகர, நிரோஷன் பாதுக்க, ஹிருணிகா பிரேமச்சந்திர, இளம் ஊடகவியலாளர் சங்கம் உள்ளிட்ட பலரால் 09 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களில் பிரதிவாதிகளாக சட்ட மாஅதிபர், சபாநாயகர் உள்ளிட்ட அரசியலமைப்பு சபை மற்றும் பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுக்கள் தொடர்பாக மனுதாரரின் பூர்வாங்க வாதங்கள் மூன்று நாட்களாகவும், பிரதிவாதி தேசபந்து தென்னகோன் சார்பில் முன்வைக்கப்பட்ட வாதங்களும், சட்ட மாஅதிபர் சார்பில் முன்வைக்கப்பட்ட வாதங்களும் இரண்டு நாட்களாக மேற்கொள்ளப்பட்டன.

பின்னர் அரசியலமைப்புச் சபை, உறுப்பினர்கள் சார்பில் உண்மை விளக்கமும், மனுதாரர்களின் பதில் விடயங்கள் தெரிவிப்பும் 18ஆம் திகதி இரவு சுமார் 9:00 மணி வரை நடைபெற்றது.

அந்த அனைத்து விடயங்களையும் பரிசீலித்த பின்னர் நீதியரசர்கள் குழாம் மனுக்கள் தொடர்பான உத்தரவை நேற்று (24) அறிவிக்க முடிவு செய்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவில், அன்றைய மேல் மாகாண பிரதிப் பொலிஸ் மாஅதிபரான தேசபந்து தென்னகோன் சாட்சியமளித்ததாக மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான முக்கியத் தகவல்கள் கிடைத்தும் அவர் தனது பணிகளைச் செய்யவில்லை என ஆணைக்குழு அறிக்கையின் 20 ஆவது தொகுதியில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், அப்போது மேல்மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றிய தேஷபந்து தென்னகோன், தனது கடமைகளை புறக்கணித்துள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் அவரின் பதவிக்காலத்தில் காலி முகத்துடலில் தங்கியிருந்த போராட்டக்காரர்கள் கொடூரமான முறையில் தாக்கப்பட்டனர் எனவும் இந்த மனுக்கள் சுட்டிக் காட்டுகின்றன.

நாட்டின் சட்டத்தை அமுல்படுத்தும் நாட்டின் பிரதான திணைக்களமாக விளங்கும் பொலிஸ் திணைக்களத்தின் தலைவர் பொறுப்பு மனிதாபிமான பண்புகளை கொண்ட ஒருவருக்கே வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

அலட்சியமாக செயல்பட்ட ஒருவருக்கு பொறுப்பு வழங்குவது அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகுமென மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றிய போது அரசியலமைப்பு சபையின் அங்கீகாரத்தை பெற்ற விதம் தொடர்பில் சிக்கல் நிலை காணப்படுவதாகவும் மனுக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபராக இருந்த தேசபந்து தென்னகோன் தனது கடமைகளைப் புறக்கணித்துள்ளதால் சட்ட மாஅதிபராக அவரை நியமித்ததன் மூலம் மக்களின் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பப்பட்டுள்ளதாக முடிவு செய்யுமாறு மனுவின் மூலம் தீர்மானிக்குமாறு மனுக்களில் கோரப்பட்டுள்ளது.

## நேபாளத்தில் விமான விபத்து...

சடலங்காளக மீட்கப்பட்டனர். விமானத்தின் விமானி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக விமான நிலையத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரி ஒருவர் பி.ரி.ஐ செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

விமானத்தில் ஏற்பட்ட தீ தற்போது அணைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

விபத்து நடைபெற்ற இடத்தில் பொலிஸார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## விவசாயிகளை தொடர்ந்தும் அரசியல்...

சிறு மற்றும் பெரும்போகத்துடன் இணைந்ததாக பயறை பயிரிட்டு 18,828 மெற்றிக் தொன் அறுவடையை பெறும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதன் கீழ் ஒரு விவசாயிக்கு ஹெக்டெயாருக்கு 25 கிலோ விதைப் பயறு வழங்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். 2023 ஆம் ஆண்டு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் ஊடாக நெல் விளைச்சலின் மூலம் சுமார் 03 மில்லியன் மெற்றிக் தொன் அரிசியை உற்பத்தி செய்ய முடிந்துள்ளதாகவும், இதன் மூலம் நாட்டில் மேலதிக அரிசித் தொகையைப் பேணமுடிந்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## பதிதாக வாங்கிய, விற்ற வாகனங்களின்...

விடயங்களை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு தெரிவிக்க வேண்டும். இந்த நடைமுறையை எளிதாக்கும் வகையில், வாகனத்தின் விபரங்களை உடனுக்குடன் அறிவிப்பதற்காக 0768833300 என்ற Whats App எண் ஒன்றை திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

வாகன விற்பனையாளர் வாகன உரிமைப் பரிமாற்ற சபைக்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினூடாக தகவல்களை அறிவிக்க வேண்டும். அத்தோடு வாங்குபவர் வாகனத்தின் உரிமையை வாங்கிய 14 நாட்களுக்குள் தங்கள் பெயருக்கு மாற்றிக்கொள்ளவதுடன், வாகன உரிமை மாற்றம் தொடர்பான தகவல்களை சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் திணைக்களத்துக்கு அறிவிப்பது அவர்களது பொறுப்பாகும் என, மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார்.

## இந்திய வரவு செலவுத் திட்டத்தில்...

மற்றும் சீஷெல்ஸ் போன்ற அண்டை நாடுகளுக்கு இணைவாக இலங்கைக்கு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு அதிகரிப்பட்டுள்ளதாக இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது. இந்த அதிகரிப்பு ஒவ்வொரு நாட்டினதும் தேவைகளைப் பொறுத்தும் கோரிக்கைகளுக்கு ஏற்பவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## தோட்ட தொழிலாளர் சம்பளத்தை...

முதலாளிமார் சம்மேளனம் வழக்குத் தொடர்ந்ததாலே யே, இதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வேலுகுமார் எம்.பி. தமது கேள்வியின் போது;

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் மே 01 இல், அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது. அத்துடன் கொட்டகலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிப்பதாக உறுதியளித்தார்.

## 'கிளப் வசந்த' படுகொலை:...

இச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.இந்நிலையிலேயே நேற்று முன்தினம் (23) மாலை அதுருகிரிய மற்றும் பத்தரமுல்ல பிரதேசங்களில்,இவ்விருவரும் கைதாகினர். இதில் ஒருவர், கொரத்தோட்டை பிரதேசத்திலிருந்து வெலிஹிந்த பிரதேசத்துக்கு துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களையும் கார் சாரதியையும் வேன் ஒன்றில் ஏற்றிச் சென்று, வேனை புளத்சிங்கள பிரதேசத்தில் மறைத்தவரெனவும், மற்றைய சந்தேகநபர் வெலிஹிந்த பிரதேசத்திலிருந்து தெற்கு அதிவேக நெடுஞ்சாலையூடாக திக்வெல்ல பிரதேசம் வரை சந்தேக நபர்களை பஸ்ஸில் அழைத்துச் சென்று, பஸ்ஸை செல்ல கதிர்காமம் பகுதியில் மறைத்தவரெனவும் பொலிஸார் தெரிவித்தனர். இக்காலப்பகுதியில் சந்தேக நபர் வட்ஸ் அப் ஊடாக வெளிநாட்டில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி ஒருவருடன் தொடர்பில் இருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## பெருந்தோட்டத் தொழிலாளருக்கான...

வர்த்தமானியையும் வெளியிட்டுள்ளார். பெருந்தோட்டத் தொழிலாளரின் நாளாந்த சம்பளம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கடந்த ஏப்ரல் மாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரண்டு சுற்று பேச்சுவார்த்தைகளிலும் முதலாளிமார் சம்மேளனம் பங்கேற்கவில்லை.

இந்நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த சம்பளமாக 1,700 ரூபாவை நிர்ணயித்து தொழில் ஆணையாளரால் கடந்த ஏப்ரல் 30 வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து மே மாதம் 21ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சின் செயலாளர் விமலவீர மற்றுமொரு அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டிருந்தார்.

இந்த வர்த்தமானியில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த அடிப்படை சம்பளமாக 1,350 ரூபாவும் விசேட கொடுப்பனவாக 350 ரூபாவும் வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது.

அதற்கமைய, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த மொத்தக் கொடுப்பனவாக 1,700 ரூபா கிடைக்குமென தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தார்.

மேலதிக கொழுந்து கிலோ ஒன்றுக்கு 80 ரூபா வீதம் வழங்கப்பட வேண்டுமெனவும் மே, 21 வெளியிட்ட அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## புதிய கல்வி முறைக்கு அமைய...

இற்றைப்படுத்தப்படும். சாதாரண தர பரீட்சை நிறைவடைந்ததால், உயர்தர வகுப்புகளுக்கான கல்வி நடவடிக்கைகள் தற்போது வெற்றிகரமாக நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் ஆகிய பாடங்களுக்காக 2,300 ஆசிரியர்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டனர். மாகாண மட்டத்திலும் பரீட்சைகள் நடத்தப்பட்டு சுமார் 16,000 ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

நீதிமன்ற உத்தரவுகளால் ஓராண்டுக்கும் மேலாக தடைப்பட்டிருந்த அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களை அசிரியர் சேவையில் உள்வாங்குவது தொடர்பான விடயத்திற்கு, உயர் நீதிமன்றத்தில் உடன்பாடு காணப்பட்டுள்ளது. பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 23,000 பேரில் 6,000 பேரைத்தவிர ஏனையோருக்கு , அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. அடுத்த இரண்டு வாரங்களில் நடவடிக்கைகள் முடிவடைந்ததும் மீதமுள்ளவர்கள் நேர்முகபரீட்சைக்குப் பின்னர் பயிற்சியாளர்களாக நியமிக்கப்பட்டுவர். இதற்கமைவாக ஒரு சில பாடங்களைத் தவிர மீதமுள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அறிவித்தார்.

# இன்றைய பலன்கள்

(25.07.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**



மூலப்பொருள் விலை அதிகரிப்பதால் திட்டமிட்டபடி முதலீடு செய்வதில் சிறிய தடை ஏற்படும். கூட்டுத் தொழில் சுமாராக நடைபெற்றாலும் எதிர்பார்க்கும் லாபம் குறையாது.

**ரிஷபம் :**



சொந்த தொழிலில் புதிய வாடிக்கையாளர்களின் வருகையும் அவர்களால் தொழில் ரீதியான முன்னேற்றமும் ஏற்படும்.

**மிதுனம்:**



உத்தியோகத்தில் உள்ளவர்கள் அலுவலகத்தில் சலுகைகளை எதிர்பார்க்க முடியாது. பணிச்சுமை அதிகரிக்கும்.

**கடகம்:**



உத்தியோகத்தில் எதிர்பார்க்கும் தேவையை அடைய சிறிது காலம் பொறுமையாக இருப்பது அவசியம்.

**சிம்மம்:**



உறவுகளால் செலவு இருந்தாலும் பயணங்களும் அதிகரிக்கும். சக பணியாளர்கள் அனுகூலமாக நடந்து கொள்ள சொந்த தொழில் சிறப்பாக நடைபெறும்.

**கன்னி:**



புதிய நபர்களின் வருகையால் தொழிலில் முன்னேற்றமும் வருமான உயர்வும் ஏற்படும். கூட்டுத் தொழில் வியாபாரம் இரட்டிப்பு லாபத்தை கொண்டு வந்து சேர்க்கும்.

**துலாம்:**



அலைச்சல் இருந்தாலும் அதற்கே ஆதாயமும் இருக்கும். பிரியமானவர்களுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும். சிறு பாராட்டுக்கள் தேடி வரும்.

**விருச்சிகம்:**



உத்தியோகத்தர்களுக்கு உயர் அதிகாரிகளிடம் எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும். சக நண்பர்களுடன் வீண் வாதங்களை தவிர்ப்பது நல்லது.

**தனுசு:**



சொந்த தொழில் செய்பவர்கள் புதிய வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்த ஓய்வின்றி உழைப்பீர்கள். கூட்டுத் தொழில் லாபம் தருவதாக இருக்கும்.

**மகரம்:**



சொந்த தொழில் பணி சுமை அதிகரித்தாலும் புதிய வருமானம் இருக்காது. கூட்டுத் தொழில் நன்றாக நடந்தாலும் ஆதாயம் எதிர்பார்த்த அளவு கிடைக்காது.

**கும்பம்:**



உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் விருப்பத்தின் பேரில் முக்கிய வேலை ஒன்றை செய்து பாராட்டு பெறுவர்.

**மீனம்:**



உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதிக பொறுப்புடன் செயல்பட வேண்டிய நேரம் இது. ஓய்வின்றி உழைத்தால் தான் ஓரளவு வருமானம் கைக்கு கிடைக்கும்.

## நுவரெலியா... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

நீண்ட நாட்களாக இவ்வீதியூடாக செல்ல முடியாததால் குழந்தைகள் பாடசாலை செல்லவும், மருத்துவமனைக்கு செல்லவும், ஏனைய ஆனால் பொருளாதார நெருக்கடியால் அனைத்து வீதி நிர்மாணங்களும் நிறுத்தப்பட்டுள்ள இவ்வேளையில், இந்த மாகாணத்தின் அமைச்சரவை அமைச்சராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் ஜீவன் தொண்டமான் தொடர்ந்தும் இப்பிரதேசத்தின் அபிவிருத்தித் தேவைகளைப் பற்றிப் பேசினார்.இதன் பலனாகவே இந்த வீதி நிர்மாணிக்கப்படுகிறது.

2022இல் நம் நாடு முற்றாக ஸ்தம்பித்து வங்குரோத்தானது. இதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். உலகில் எந்த நாடும் எங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. எமது கடன் பத்திரத்தை எவரும் ஏற்காத நிலைக்கு வந்தோம்.

அதனால்தான், நாட்டு மக்களுக்கு உணவு கிடைக்காத போது, 1,00,000 கி.மீ., வீதி அமைக்க வழங்கப்பட்ட ஐநூறு மில்லியன் டொலர்களில் 310 மருந்துக ள், எண்ணெய், உரங்கள் மற்றும் எரிவாயு கொண்டு வரப்பட்டது என்றார்.

## அதிக புகை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

கிடைக்கும் முறைப்பாடுகளை கவனத்தில்கொண்ட பின்னர், வாகன உரிமையாளரை வேரஹெர அல்லது மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்களுக்கு ஆய்வுக்காக வாகனத்தை கொண்டுவருமாறு அறிவிக்கப்படும்.

இந்த அறிவிப்புக்கு பதில் கிடைக்காவிட்டால் இறுதி அறிவிப்பு வெளியிடப்படும். இதற்கும் பதில் வரவில்லை என்றால் அந்த வாகனம் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் காற்று உமிழ்வு தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைத் வகுக்கும் நிறுவனமாகும்.1999 ஆண்டில் உயர் நீதிமன்றம் வழங்கிய கட்டளையின் அடிப்படையில், 2000 ஆம் ஆண்டில் வாகனம், காற்று உமிழ்வின் தரநிலைகள் தயாரிக்கப்பட்டன.

## நிலையான வைப்பு, கடன்...

இதன்படி, நிலையான வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் நிலையான கடன் வசதி வீதங்களை முறையே 8.25 சதவீதம் மற்றும் 9.25 சதவீதமாக குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 6,400 வாடிக்கையாளரின் பணம்...

வேளையில் வரையறுக்கப்பட்ட த பினான்ஸ் நிதி நிறுவனம் தொடர்பில் அவர் கேள்விகளை எழுப்பிய அவர், இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நிதி இராஜாங்க அமைச்சர் எனது கேள்விக்கு சபையில் வழங்கிய பதிலில் காப்புறுதி சபையால் வழங்கப்பட்டுள்ள நிதி மற்றும் காப்புறுதி ஊடாக பணம் வைப்பு செய்த வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் தொகை தொடர்பிலேயே கூறப்பட்டுள்ளது.

கோல்டன் கீ போன்ற நிறுவனங்கள் 2009 அரசியல் தலையீடுகளால் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டன. இதன்போது மத்திய வங்கியின் மூலம் த பினான்ஸ் நிதி நிறுவனம் பொறுப்பேற்கப்பட்டது.

அப்போது 1.5 பில்லியன் ரூபா வருமானம் பெற்றுவந்த நிறுவனமாகவே அது காணப்பட்டது. அந்த நிறுவனத்தில் 6400 வாடிக்கையாளர்கள் உள்ளனர். அந்த வகையில் இன்று வரை அவர்களுக்கு அந்நிறுவனத்தினால் ஒரு ரூபாவேனும் வழங்கப்படவில்லை. காப்புறுதி பணம் மட்டுமே கிடைத்துள்ளது.

இலாபத்தில் இயங்கிய நிறுவனத்தை பொறுப்பேற்று அந்த நிறுவனத்தை 10 வருடங்களில் வங்குரோத்து நிறுவனமாக மாற்றி, இன்று வரை வைப்பாளர்களுக்கு பணத்தை வழங்காதுள்ளமை கவலைக்குரியது.

இந்த வைப்பாளர்கள் பெரும் செல்வந்தர்கள் அல்ல. சாதாரணமான வாடிக்கையாளர்களே. இறந்த பின்னரா அவர்களுக்கான பணம் வழங்கப்படப் போகிறது? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதன்போது பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கூறுகையில்,

இது தொடர்பில் பின்பற்ற வேண்டிய முறைமைகள் உள்ளன. வணிக நீதிமன்றத்தில் வழக்கும் விசாரிக்கப்படுகிறது. இதில் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்கள் இருக்கின்றன அதன்படியே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன . இது தொடர்பான நிவாரணங்களை வழங்க அரசாங்கம் என்ற வகையில் தேவையான தலையீடுகளை மேற்கொள்கி றோம் என்றார்.

## கண்டி மாவட்ட மூவின மக்களின்...

# இன நல்லிணக்கத்திற்காக ஒற்றுமையுடன் பணியாற்றிய ஜெம் லைட் இஸ்மாயில் ஹாஜி



## அன்னாரது மறைவு குறித்து கண்டி மாவட்ட பெருந்தகைகள் கருத்து

கண்டியில் மிக நீண்ட காலமாக மகத்தான சமூகப் பணிகளை ஆற்றி வந்த ஜெம்லைட் ஏ. எம். இஸ்மாயில் ஹாஜியார் சமீபத்தில் மரணம் எய்தினார். அன்னாரது ஜனாஸா நல்லடக்கம் கண்டி கட்டுக்கலை பள்ளிவாசலில் இடம்பெற்றது. அதன் போது அன்னார் பற்றி கண்டியிலுள்ள பெருந்தகைகள் ஆற்றிய உரையின் சுருக்கங்கள் இவை.

**சந்தன தென்னகோன்**
**(மாவட்ட செயலாளர், கண்டி மாவட்ட செயலகம்)**



கண்டியில் ஜெம்லைட் ஏ. எம். இஸ்மாயில் ஹாஜியார் எல்லோருக்கும் முன்மாதிரிமிக்க மனிதராக சிறந்து விளங்கினார் என்று கண்டி மாவட்டச் செயலாளர் சந்தன தென்னகோன் அனுதாப உரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அவர் ஏனைய சமூகங்களுடன் கொண்டுள்ள உறவு மிகவும் வலுவானது. அவர் தம் வர்த்தக நடவடிக்கைகளை பிற சமூகங்களுடனேயே கொண்டு செயற்பட்டார். அவருடைய வாழ்க்கை முறை எல்லா சமூகத்திற்கும் முன்மாதிரியாக அமைந்துள்ளன. அவர் தனது வியாபாரத்தை ஒழுக்க மாண்புடன் தான் செய்தார். எந்தவொரு விடயத்தை எடுத்துக் கொண்டாலும் எம்மோடு, எப்பொழுதும் தொடர்பு கொண்டு அவை பற்றிய சரி பிழை எவையென பார்த்து அதன் சட்ட திட்டங்களை அறிந்து செயற்பட்ட ஒருவர்.

அவர் கண்டி மாநகர சபையினால் முன்னெடுக்கப்படும் அனைத்து அரச சேவை விவகாரங்களிலும் எங்களுடன் சேர்ந்து பணியாற்றினார். அது மட்டுமல்ல சகல சமூகங்களுடைய விவகாரங்களிலும் பங்கு கொண்டு பணியாற்றினார். அந்த வகையில் ஒரு முன்மாதிரியான நபராவார். அவர் முதியவயதை அடைந்தபோதும் அவர் ஓய்வாக இருக்கவில்லை. ஒரு தடவை என்னை வந்து சந்தித்து உரிய சட்ட திட்டங்களுடன் அவற்றை எவ்வாறு மேற்கொள்வது என்பதை அறிந்து கொள்வதற்காக வந்திருந்தார். சிலர் யாரிடத்திலும் ஆலோசனை பெற்றுக் கொள்ளாமல் சட்ட திட்டங்களுக்கு மாறாகவே செயற்பட முயற்சி செய்வார்கள். அவர் அவ்வாறு இல்லை. எல்லோருக்கு ஒரு முன்மாதியான நபராக விளங்கினார். முஸ்லிம்களுடைய சமயக் கிரியையின்படி அவர் எதிர் பார்க்கின்ற உரிய இடம் அவருக்கு கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**யசஸ் சந்திரசேகர**
**(தலைவர், சிங்கள வர்த்தக சங்கம், கண்டி)**



காலஞ்சென்ற ஜெம் லைட் இஸ்மாயில் ஹாஜியார் சமூகங்களுக்கிடையே இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக அரும்பாடுபட்டு உழைத்தவர். அவர் எல்லோரும் நல்லமுறையில் சிறப்பாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தை கொண்டு செயற்பட்டவர். தனிப்பட்ட ரீதியாகப் பார்த்தாலும் ஒரு நல்ல பண்புள்ள மனிதராவார். சிங்கள வர்த்தகரோடு மிகுந்த நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தார். அவருடைய திடீர் இழப்பு கண்டி வாழ் முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல அனைத்து வாழ் பல்லின மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும் என்று கண்டி சிங்கள வர்த்த சங்கத்தின் தலைவர் யசஸ் சந்திரசேகர தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

ஜெம்லைட் இஸ்மாயில் ஹாஜியார், கண்டியில் சகல வர்த்தக சமூகத்தின் தேவைகளையும் உணர்வுகளையும் பிரதிபலிக்கும் சமூகப் பணியாளராக மட்டுமின்றி பொதுவாக எல்லா சமூக வர்த்தகர்களுடைய பிரச்சினைகளையும் நிறைவு செய்யக் கூடிய மனிதராகவும் விளங்கினார். அந்த வகையில் சிங்கள தமிழ் வர்த்தக சமூகத்தினர் மத்தியிலும் நல்ல நற்பெயருடன் எல்லோரும் மதிக்கின்றவராக அவர் காணப்பட்டார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**பி. குமாரதாஸ்**
**(தலைவர், தமிழ் வர்த்தக சங்கம், கண்டி)**



கண்டியில் சிங்கள, தமிழ் முஸ்லிம் வர்த்தர்களுக்கிடையே உறவுப்பாலமாகவும் மிகவும் அர்ப்பணிப்புடன் பாடுபட்ட ஒரு நல்ல மனிதர் ஜெம்லைட் இஸ்மாயில் ஹாஜியார் என்று கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் பி. குமாரதாஸ் தெரிவித்தார்.

தொடர்ந்து அவரது மறைவு குறித்து கருத்து தெரிவிக்கையில்; இவர் எல்லா வர்த்தக சமூகத்தினர்களுக்கும் ஒரு முன்மாதிரிமிக்க வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அவரிடம் நிறைய நல்ல நற்பண்புகளை பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்ள முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**அஷ்ஷெய்க் எச். உமர்தீன் (ரஹ்மானி)**
**(உப தலைவர், கண்டி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபை தலைவர்)**



இஸ்மாயில் ஹாஜியார் தனது 97ஆவது வயதில் இறையடி எய்தினார். அவர் ஆளுமையுள்ள தொழில் அதிபர் மட்டுமல்ல ஒரு சமூக சேவையாளர். வியாபாரத் துறையில் ஈடுபட்டு பல்லின மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றவர் என்று கண்டி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபை தலைவர் அஷ்ஷெய்க் எச். உமர்தீன் (ரஹ்மானி) தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; கண்டியில் வர்த்தக சங்கம் அமைப்பதற்கு அவர் மூல கர்த்தாவாக விளங்கினார். பள்ளிவாசல் ஒன்றியம் ஒன்றை தாபித்து அதன் தலைவராகவும் செயற்பட்டுள்ளார். கண்டி ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தை புனர் நிர்மாணம் செய்து ஒரு நல்ல முறையிலே நிர்வாக பணிகளை மேற்கொள்ள ஒரு மூல கர்த்தாவாகவும் இருந்துள்ளார்.

அவர் வணக்க வழிபாடுகளில் எந்தவொரு குறையுமில்லாமல் நேரத்திற்கு ஐந்து நேரத் தொழுகையிலும் கலந்து கொள்வார். வியாபாராத் துறையிலும் ஈடுபட்டுக் கொண்டு குடும்பத்தையும் நல்ல முறையில் கவனத்திற் கொண்டு சமூக சேவையில் ஈடுபட்டது மட்டுமல்ல, கண்டி பேராதனை வீதியில் 108 வது இலக்கத்தில் அமைந்துள்ள ஜவாப் பள்ளியை மூன்று மாடிக் கட்டடமாகக் கட்டுவதற்கும் முழு மூச்சாக நின்று செயற்பட்டு ஆயுட் காலத் தலைவர் என்ற பட்டத்தையும் பெற்று அழகான முறையிலே அந்தப் பள்ளிவாசலைக் கட்டி முடித்தார். அவர் பல தியாகங்களைச் செய்துள்ளார். சொந்தப் பணத்தைக்கொண்டு அதிகமாக சமய சமூகப் பணிக்காக செலவு செய்துள்ளார். இவ்வாறு பல அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்.

அவரைப் பொறுத்தவரையில் எந்தவொரு மரண வீட்டையும் விட மாட்டார். எந்தவொரு திருமண அழைப்பையும் விட மாட்டார். புறக்கணிக்கமாட்டார். அவர் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொள்வார். எந்த சபையாக இருந்தாலும் முன் வரிசையில் அமர்ந்து கொள்வார்கள். அழகான முறையில் இஸ்லாமிய தனித்துவப் பாரம்பரியமான முறையில் மிகவும் அழகான உடை அணிவார். ஓர் கம்பீரமானவர். எதற்கும் அச்சமற்றவர். எங்கேயும் முன்சென்று எடுத்த எந்தக் காரியத்தையும் நிறைவு செய்பவர். அவை மட்டுமல்ல. கண்டியில் 396/17 கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலையும் மீள் புனர்நிர்மாணம் செய்வதற்கும் ஒரு அழகிய பெரிய தோற்றத்தில் காட்சியளிப்பதற்கு இவர் தன் பின்புலமாக இருந்துள்ளார். முன் நின்று உழைத்துள்ளார். தொழிலதிபர் அப்சல் ஹாஜியார் இப்பள்ளிவாசலின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டாலும் கூட அவர்தான் நீண்ட கால பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபையின் நிர்வாகியாக இருந்துள்ளார். அதற்குரிய சொத்து ஜவாப் பள்ளிக்கு அருகாமையில் இருக்கிறது. அந்தச் சொத்தை கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலுக்குப் பெற்றுக் கொடுக்க மும்முரமாக உழைத்தார்.

இவ்வாறு பல வகையிலும் உழைத்த உத்தமர்தான் ஜெம்லைட் இஸ்மாயில் ஹாஜியார் அவர்கள். வல்ல அல்லாஹ் அவருடைய பாவங்களை மன்னித்து மேலான சுவர்க்கத்தை அடைய அல்லாஹ் நல்லருள் புரிய வேண்டும் என்று நாம் பிரார்த்திக்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**அப்சல் மரைக்கார்**
**(தலைவர், கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை, கண்டி)**



கண்டி ஜெம்லைட் ஏ. எம். இஸ்மாயில் ஹாஜியார் துடிப்புள்ள சமூகச் செயற்பாட்டாளராகவும் மனித நேயப்பண்பு சார் விடயங்களில் அதிக அக்கறையோடு செயற்பட்டவர் என்பது மட்டுமல்ல எமது கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் தலைவராக இருந்து பள்ளிவாசல் மீள் நிர்மாணப் பணிகளுக்காகவும் அதன் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றி ஒரு மகத்தான மா மனிதர் ஆவார் என்று அப்சல் மரைக்கார் விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில்; கண்டியில் முஸ்லிம் சமய, சமூக சிவில் அமைப்புக்களில் தலைவராகவும், வேறு முக்கியமான பதவிப் பொறுப்புகளிலே இருந்து செயற்பட்டிருந்த எமது பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் இஸ்மாயில் ஹாஜியார், ஜுலை 15 ஆம் தேதி தனது 97 ஆவது வயதில் மரணம் எய்தினார். முஸ்லிம்களுடைய சமூகப் பணியில் முக்கியத்துவம் கருதி அவர் அடைந்த மரணம் குறித்து கண்டி முஸ்லிம் சமூகத்திற்கு அப்பால் பெரும்பான்மையின சிங்கள வர்த்தக சகோதரர்கள், தமிழ் வர்த்தக சகோதரர்கள் அவருடைய மரண நல்லடக்கத்தின் போது இரங்கல் உரையினை ஆற்றி அவருடைய இழப்புக்கள் குறித்து கவலை வெளியிட்டனர்.

அதில் கண்டியில் பல்லின மக்களிடயே அவர் ஆற்றிய பங்களிப்புக்கள் பொதுவெளியிலே நிறைந்து காணப்படுகிறது. அவர் குறிப்பாக நெருக்கடியான கால கட்டத்தில் பிற சமூகத்தினருடன் சேர்ந்து முஸ்லிம் வர்த்தக சமூகத்தின் இருப்புக்காகவும் பாதுகாப்புக்காகவும் ஆற்றிய பங்களிப்பு முதன்மை பெறுகின்றது. இதனை கண்டி வர்த்தக சமூகம் ஒரு போதும் மறந்து விட முடியாது. அவருடைய தலைமைத்துவப் பண்பும் அலாதியானது. அவரின் தலைமைத்துவ இயல்பை மதிப்பிடுவதனூடாக எதிர்கால வர்த்தகத் தலைவர்கள் படிப்பினையைக் பெற்றுக் கொள்ளக் கூடிய நிறைய குறிப்பிடத்தக்க விடயங்கள் காணப்படுகின்றன.

1993 இல் கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் உப தாபகத் தலைவராகவும் 1999- 2006 வரையிலும் அதன் தலைவராகவும் கடமையாற்றினார். இப்பொழுது இப்பள்ளிவாசல் இலங்கையில் ஏனைய பள்ளிகளில் காண முடியாத வகையிலான சிறப்புக்கள் காணடுப்படுகின்றன. இன ஐக்கியத்திற்கான மத்திய நிலையம், கணினி மைய கூடம், அரபுக் கல்லூரி என்று பரந்தபட்ட கண்டி பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தாபகருமாவார். மத்திய மாகாண முஸ்லிம் லீக் தலைவராகவும் கடமையாற்றியவர். இவர் கண்டி ஜின்னாஹ் ஞாபகார்த்த மண்டபத்தின் புதிய கட்டிட நிர்மாணப் பணிக்காகப் பங்களிப்புச் செய்ததுடன் அதன் நம்பிக்கையாளர் சபையிலும் அங்கத்துவம் வகித்தார், இப்படிப் பல குறிப்பட்டு சொல்லக் கூடிய ஆரோக்கியமான செய்திகள் உள்ளன.

நல்லதொரு தலைமைத்துவத்தின் ஊடாகவே முஸ்லிம் வர்த்தக சமூகத்தின் எழுச்சிகள் அந்தப் பிரதேசத்தின் நலனுக்காக கட்டமைக்கப்படும். கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் தாபகத் தலைவர் நிஸாம் ஹாஜியார் மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த தலைவர் ஜெம்லைட் இஸ்மாயில் ஹாஜியார் முஸ்லிம் வர்த்தக சமூகத்தின் நலனை கட்டுறுதியுடன் பேணியமையாலேயே அத்தகைய புகழுரைகள் மக்கள் மனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனவே, கண்டி நகரைப் பொறுத்தவரையிலும் அன்னாரது இழப்பு பெரும் பேரிழப்பாகும். அவருடைய பிரிவால் துயரத்தில் மூழ்கியுள்ள அவர் குடும்பத்தினர்கள் உற்றார், உறவினர், நலன்விரும்பிகள் ஆகியோர்க்கு எமது கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசல் சார்பாக எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

**கே.ஆர்.ஏ. சித்தீக்**
**(தலைவர், பள்ளிவாசல்கள் சம்மேளனம், கண்டி மாவட்டம்)**



கண்டியில் முதன் முதலில் பள்ளிவாசல்களின் நிர்வாக சபைகளை ஒன்றிணைத்து ஒரு அமைப்பாகச் செயற்பட்ட தாபகத் தலைவர் என்ற வகையிலும் அதே வேளையில் கண்டியில் பல்வேறு சிவில் சமூக அமைப்புகளில் இணைந்து முக்கிய பிரதிநிதியாக நின்று உழைத்த மூத்த சமூகச் செயற்பாட்டாளர் தொழிலதிபர் ஏ. எம். இஸ்மாயில் (ஜெம் லைட் ஹாஜியார்) மறைவு கண்டியில் பல்லின மக்களிடையே பெரும் பேரிழப்பாக மாறியுள்ளது என்று கண்டி மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் கே. ஆர். ஏ. சித்தீக் தெரிவித்தார்.

அவர் மறைவு குறித்து சம்மேளனத்தின் தலைவர் கே.ஆர்.ஏ. சித்தீக் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

அவரது சமூக இயக்கச் செயற்பாடானது மிக நீண்டதானாலும் முஸ்லிம் சமூகத்திற்கு நெருக்கடியான கால கட்டத்தில் முஸ்லிம் சிங்கள மக்களிடையே நல்லிணக்கத்திற்கான முயற்சிகளில் அதி தீவிரமாக ஈடுபாடு கொண்டு அவர் ஆற்றிய பங்களிப்பு விதந்து பாராட்டத்தக்க விடயமாக இருந்து வருகிறது.

அவருடைய இயக்கப் பணியானது தனித்துவமானதும், பிற சமூகத்துடன் சேர்ந்த அவர் சாதித்த காரியங்கள் நினைவு கொள்ளப்பட வேண்டியதாகும். காரணம் கண்டியில் சிவில் சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் வரப்போகும் புதிய சமூகப் பணியாளர்களுக்கும் ஏ. எம். இஸ்மாயிலின் அனுபவம் பகிரப்பட வேண்டும். ஜெம் லைட் இஸ்மாயில் ஹாஜியார் கண்டி முஸ்லிம் சமூகத்தின் மனிதாபிமானச் செயற்பாட்டாளர் என்ற தளத்தில் இருந்து கொண்டு சிங்கள வர்த்தக சமூகத்தோடு, தமிழ் வர்த்தக சமூகத்தோடு மற்றும் பௌத்த, இந்து கிறிஸ்தவ சமயப் பெரியார்களோடு எத்தகைய வகிபாகத்தைக் கொண்டு இயங்கினார் எனத் தேடுதல் செய்வது பொருத்தமானதாக அமையும். அந்த வகையில் கண்டி முஸ்லிம் சமூக சமய இயக்கப் பணியின் தளத்தில் இயங்கிக் கொண்டிருந்த ஜெம்லைட் இஸ்மாயில் ஹாஜியார் இன நல்லிணக்கத்தை கட்டி எழுப்புவதில் பெரும் வகிபாகத்தைக் கொண்டுள்ளார் என்று கூறுவதில் மிகையாகாது.

**ஏ.சி.எம். ரஹ்மான்**
**(பொதுச் செயலாளர், முஸ்லிம் லீக், மத்திய மாகாணம்)**



ஜெம்லைட் ஹாஜியார் என்று கண்டியில் எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படுகின்ற ஏ. எம். இஸ்மாயில் ஹாஜியார் கண்டி ஆரம்ப முஸ்லிம் வர்த்தகப் பிரமுகராக இருந்து வந்தவர். எமது முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால சவால்களைக் கருத்திற் கொண்டு தூர நோக்குச் சிந்தனையோடு கண்டி மாக்களுக்காகச் செயற்பட்டவர் என்று மத்திய மாகாண முஸ்லிம் லீக் பொதுச் செயலாளர் ஏ. சி. எம். ரஹ்மான். தெரிவித்தார்.

1993 இல் வர்த்தகர்கள் எதிர்நோக்கக் கூடிய சில சவால்களை முன் வைத்து கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தை உருவாக்கியவர். அதைத் தொடர்ந்து ஏனைய சமூக வர்த்தக சங்கங்களுடன் ஒன்றிணைந்து ஒருங்கிணைந்த சங்கம் ஒன்றை உருவாக்கி அதன் மூலம் வியாபாரிகளுக்கு இருக்கக் கூடிய நிறையப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க துணை நின்றவர்.

இன்று ஜின்னா ஞாபகார்த்த மண்டபம் நான்கு மாடிக் கட்டடமாக உயர்ந்து நிற்பதற்கும் அதன் மூலம் பல சேவைகளை ஆற்றுவதற்கும் ஒரு முக்கிய காரண கர்த்தாவாக இருந்தவர் ஜெம்லைட் இஸ்மாயில் ஹாஜியார்.

முஸ்லிம் பண்பாட்டு அலுவல்கள் திணைக்கத்திளால் ஆரம்ப காலத்தில் ஜின்னா ஞாபகார்த்த நம்பிக்கையாளர் சபையின் அங்கத்தவராக அப்துல் மரைக்கார். சட்டத்தரணி மஹ்ரூப், சட்டத்தரணி பாரூக், அஷ்ஷெய்க் எச். சலாஹுதீன், ஜெம்லைட் இஸ்மாயில் ஹாஜியார் உள்ளிட்ட ஐந்து பேர் நியமிக்கப்பட்டனர். அந்த ஐந்து பேரில் இவரும் ஒருவர். அதன் மூலம் ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்திற்கு பல சேவைகள் செய்துள்ளார்.



ஆடிச் செவ்வாயை முன்னிட்டு தலவாக்கலை அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் சிவஸ்ரீ மு.வாமதேவ பிரசாந்த் குருக்கள் தலைமையில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்றுமுன்தினம் (23) நடைபெற்றன.

(படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

# பூசகரிடமிருந்து 22 பவுண் நகைகளும் பணமும் மீட்பு

**(யாழ். விசேட நிருபர்)**

யாழ்ப்பாணம், புளியங்கூடல் முத்து விநாயகர் கோவில் நகைகளைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் கைதாகிய பூசகரிடமிருந்து மேலும் 22 பவுண் நகைகளும் பணமும் மீட்கப்பட்டுள்ளன.

ஆலயத்துக்குள் பாதுகாப்பாகப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 62 பவுண் நகைகள் மற்றும் ரூ.8 இலட்சம் பணம் என்பன பெட்டகம் உடைக்கப்படாத நிலையில் காணாமல் போயிருந்தன.

போலி சாவியை பயன்படுத்தி நகைகள் திருடப்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து உதவி பூசகர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

இதன்போது அவரிடமிருந்து 40 பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளன. ஏனைய நகைகள் வங்கியில் அடகு வைக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் மறுநாள் பூசகரை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய பொலிஸார் பூசகரை மூன்று நாட்கள் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதி கோரினர்.

இதன்போதே 22 பவுண் நகைகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.



கைதடி ஸ்ரீ வாலாம்பிகை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை சிறுவர்கள் வினோத தூக்குக்காவ டி எடுத்து நேர்த்திக்கடனை நிறைவேற்றியிருந்தனர். ஆலயத்தின் தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு நேர்த்திக்கடன் நிறைவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படம்: சாவகச்சேரி விசேட நிருபர்)

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

செவ்வாய் 2024.07.23
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5543
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 42,421,048.00
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 9 3 5 9 9 3

**அத சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 118
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 5 9 9 3

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3785
சீட்டிழுப்பு திகதி 2024.07.23
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,234,277.52
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 30 47 48 59
விசேட எழுத்து H
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 69095

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1891
2024.07.23
04404
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 439,749,306.00
ஆங்கில எழுத்து X
சுப்பர் இலக்கம் 01
வெற்றி இலக்கங்கள் 07 56 63 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP**
திகதி 2024.07.23
சீட்டிழுப்பு இலக்கம் 0369
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 8 0 7 4 0 2
L7 எழுத்து J
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 33,348,099.28

**ராசி சுப பலன்**
திகதி 2024.07.23
சீட்டிழுப்பு இலக்கம் 852
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,340,045.60
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 06 28 29 50
தனயோக இலக்கம் 46815
நாளுக்கான விதி எண் 08

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1573
2024.07.23
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 102,499,853.92
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 18 53 59 72
விசேட எழுத்து F
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 21770

# கிழக்கின் குரல்



## பூநொச்சிமுனை பச்சை வீட்டுத்திட்ட பகுதியில் பொலிஸார் சோதனை

**புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்**

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பூநொச்சிமுனை பச்சை வீட்டுத்திட்டப் பகுதியில் நேற்று புதன்கிழமை அதிகாலையில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இந்தப் பகுதியில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் வீடொன்றின் மீது இடம்பெற்ற கைக்குண்டு தாக்குதல் மற்றும் கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர் கைக்குண்டொன்று கண்டெடுக்கப்பட்டு செயலிழக்க செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இந்த சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த சோதனை நடவடிக்கையில் காத்தான்குடி பொலிஸார் மற்றும் இராணுவத்தினர், விஷேட அதிரடிப்படையினர் கூட்டாக இணைந்து சோதனை நடவடிக்கைகளை நடத்தியதுடன், வீடு வீடாக சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன. இதன்போது பொலிஸ் மோப்ப நாயும் பயன்படுத்தப்பட்டது.



குறித்த பச்சை வீட்டுத்திட்டப் பகுதியில் வசிக்கும் வீட்டு உரிமையாளர்கள் மற்றும் குடும்பத்தினர் விபரங்களும் பொலிஸாரால் திரட்டப்பட்டு சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இந்த சோதனை நடவடிக்கையின் போது எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் சந்தேகத்துக்கிடமான பொருட்கள் எதுவும் கண்டெடுக்கப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சுற்றிவளைப்பின் போது பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் விஷேட அதிரடிப்படையினர் சுமூகமாக சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் பாதசாரிகள், பாடசாலை மாணவர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாதவாறும் சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## திருக்கோவிலில் என்புமுறிவு கிளினிக்

**காரைதீவு குறூப் நிருபர்**




திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் என்புமுறிவு கிளினிக் நடத்தப்படவுள்ளது. கல்முனை ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.கலாவேந்தன் இந்த கிளினிக்கை நடத்த முன்வந்துள்ளார்.

இந்நிலையில் இதன் முதலாவது கிளினிக் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நோயாளிகள் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை திருக்கோவில் பிரதேச மக்களுக்கு வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரும் நிர்வாகத்தினரும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், அக்கரைப்பற்று தொடக்கம் பொத்துவில் வரையில் வாழும் மக்களின் நன்மை கருதி திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் என்பு முறிவு கிளினிக் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

## பாலமீன்மடுவில் அவசர சிகிச்சை பிரிவு ஆளுநரால் திறந்துவைப்பு





மட்டக்களப்பு பாலமீன்மடு பிரதேசத்தில் 17 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அவசர சிகிச்சை பிரிவு மற்றும் பல் மருத்துவப் பிரிவை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்துள்ளார்.

பொதுமக்கள் பாவனைக்காக நேற்று புதன்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் இதனைத் திறந்து வைத்துள்ளார்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன், அரச அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மூதூரில் உதவி பிரதேச செயலாளருக்கு வரவேற்பு



**தோப்பூர் தினகரன் நிருபர்**

மூதூர் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் பாத்திமா றொசானா றசீமை வரவேற்கும் நிகழ்வு மூதூர் பிரதேச செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

மூதூர் பிரதேச செயலாளர் எம். எச்.முகமட் கனி தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. இதன்போது மூதூர் உதவிப் பிரதேச செயலாளர் பாத்திமா றொசானா றசீம் அலுவலக உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரால் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டார். இந்நிலையில் மூதூர் உதவிப் பிரதேச செயலாளர் பாத்திமா றொசானா றசீம் இங்கு உரையாற்றினார்.

## சம்மாந்துறை சிறுவர் இல்லத்தை மேம்படுத்துவதற்கு நிதி உதவி

**அம்பாறை மத்திய தினகரன், கல்முனை குறூப் நிருபர்கள்**

சம்மாந்துறை அல் ஸலாம் சிறுவர் இல்லத்தை மேம்படுத்தி நவீன முறையில் அமைக்க பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.முகம்மட் ஹரீஸ் மூலம் நான்கு மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினரின் டி 100 வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை அல் ஸலாம் சிறுவர் இல்ல நிர்வாகிகளின் அழைப்பின் பேரில் முகம்மட் ஹரீஸ் எம்.பி. இந்த சிறுவர் இல்லத்திற்கு விஜயம் செய்து அங்கிருக்கும் சிறுவர்களுடன் கலந்துரையாடியதுடன் நிர்வாகிகளிடமும் கலந்துரையாடினார்.



இதன்போது தனது நிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணத்தை நிர்வாகத்தினரிடம் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கையளித்தார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை சிறுவர் நிலைய பொறுப்பதிகாரி எம்.சி.எம்.சிப்கான், பாராளுமன்ற உறுப்பினரின் வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் நூருல் ஹுதா உமர் உட்பட சம்மாந்துறை அல் ஸலாம் சிறுவர் இல்ல முகாமைத்துவ குழுவினர், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## அக்கரைப்பற்று பிரதேசத்தில் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

**அக்கரைப்பற்று விசேட, அட்டாளைச் சேனை குறூப் நிருபர்கள்**

அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனத்தவர்களிடையே இன நல்லிணக்கத்தை பேணும் வகையில் பிரதேச செயலக அனுசரணையுடன் ஐந்து ஓவர்களை கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி கடந்த மூன்று நாட்களாக பொது விளையாட்டு மைதானத்தில் பிரதேச செயலாளர் ரீ.எம். மொஹமட் அன்ஸார் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம கலந்து கொண்டார். பதினாறு கழகங்கள் பங்குபற்றிய இச்சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற அக்கரைப்பற்று ஆதார



வைத்தியசாலை அணியானது ஐந்து விக்கெட் இழப்புக்கு 76 ஓட்டங்களையும், அக்கரைப்பற்று வீதி அபிவிருத்தி அதிகார சபை அணியானது சகல விக்கெட்டுகளையும் இழந்து 34 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

இதன்போது அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை அணியினர் சம்பியன் பட்டத்தை சுவீகரித்ததோடு 25,000 ரூபா ரொக்கப் பணத்தையும் பெற்றுக்கொண்டனர்.

நேற்று முன்தினம் மாலை (23) இதற்கான பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் பிரதேச செயலாளர் ரீ.எம். எம். அன்ஸார், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் ஐ.எல்.ஜவாஹிர் உட்பட மற்றும் பல உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## சாரண ஆசிரியர்களுக்கான நிகழ்வு

**பாலமுனை தினகரன் நிருபர்**



கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரண ஆசிரியர்களுக்கான ஆணைப்பத்திரம் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் (23) இடம்பெற்றது.

மாவட்ட சாரண ஆணையாளர் எம். ஐ. உதுமாலெவ்வை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட சாரணர் சங்கத்தின் தலைவர் கலாநிதி எஸ்.எல். றியாஸ் பிரதம அதிதியாகவும், ஆலோசகர்களான முன்னாள் வலய கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம்.ஹாசிம், முன்னாள் மாவட்ட ஆணையாளர் எஸ். ரவீந்திரன், ஊடக இணைப்பாளரும் உதவி மாவட்ட ஆணையாளருமான எம்.எப்.றிபாஸ், உதவி மாவட்ட ஆணையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். நான்கு கல்வி வலயங்களிலுமிருந்தும் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட சாரண ஆசிரியர்கள் கலந்து கொண்டதுடன், அவர்களுக்கான சாரண ஆணைப்பத்திரங்களும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.



ஐக்கிய தேசிய கட்சியின் மூதூர் அமைப்பாளராக என்.பி.எம்.சிப்லி அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதம் அண்மையில் ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டாரவினால் வழங்கி வைக்கப்படுவதை படத்தில் காணலாம்.

**(படம்: மூதூர் தினகரன் நிருபர்)**

## மாமனார் கொலை; கைதான 5 பேருக்கு விளக்கமறியல்

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**

தனது மாமனாரை தாக்கி கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட பிரதான சந்தேக நபர் உட்பட ஐவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதவான் நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை (22) உத்தரவிட்டுள்ளது. இவர்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது, பொலிவேரியன் கிராமத்தில் தனது மனைவியின் தந்தையை இச்சந்தேகநபர் தாக்கி கொலை செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. இதில் பிரதான சந்தேக நபர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

## எதிர்வரும் 27, 28ஆம் திகதிகளில்...

# மடவளை மதீனா தேசிய பாடசாலையில் 'மீண்டும் பாடசாலை செல்லல்' நிகழ்வு




மடவளை மதீனா தேசிய பாடசாலையின் 'மீண்டும் பாடசாலை செல்லல்' நிகழ்வு எதிர்வரும் 27, 28 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது. அது நூற்றாண்டு விழாவின் தொடக்க விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. இதன் நூற்றாண்டு விழா 2035 ஆம் ஆண்டும் நடைபெறவுள்ளதாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; இது சமகாலத்தில் இளைஞர்களை ஒன்றிணைப்பதற்கான ஒருபாரிய முயற்சியாகும். இது ஒரு நல்லதொரு செயற்திட்டம். இப்படியான ஒரு நிகழ்வை நடத்துவதற்கான திட்டத்தை சிந்தித்து எமது மடவளை மதீனா தேசிய பாடசாலையைக் கட்டியெழுப்புவதற்காக வேண்டி முன்வந்த எமது பாடசாலையின் அதிபரின் ஆலோசனையுடன் பிரதி அதிபர் ஜிப்ரீன், ஆசிரியர் குழாத்துடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள் சங்கத்தினர் இணைந்து நடத்தவுள்ளனர்.

அதேவேளை, ஒவ்வொரு பழைய வகுப்பினர்களும் இணைந்து குழுக்களாக செயற்படுகின்றனர். பாடசாலையின் வெற்றி, நம்பிக்கை, கல்வி முன்னேற்றத்திற்கான பாதையை வகுத்துக் கொடுப்பதில் 'மீண்டும் பாடசாலை செல்லல்' அதிகளவில் செல்வாக்குச் செலுத்தும் களமாக மாறியுள்ளது. இப்பாடசாலையின் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான உண்மையான நோக்கத்துடன் இவ்விழா பாரியளவில் மிகவும் பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்திருந்தாலும் நாம் கற்ற பாடசாலையின் வளப்பற்றாக் குறைகளையும் பின்னடைவுகளைகளையும் கண்டறிந்து 2035 ஆம் ஆண்டில் அதன் உயரிய இலட்சியத்தை அடைவதற்கான உபாயங்களை வகுத்து தம் பிரதேச எதிர்கால மாணவர்களின் கல்வி எழுச்சிக்காகவும், நல்வாழ்வுக்கும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

இப்பாடசாலை ஆரம்ப தோற்றத்தை நாம் எடுத்துக் நோக்கினால் மடவலை முஸ்லிம்களுக்கு ஒரு பாடசாலை நிர்மாணிக்கப்பட வேண்டும் என்ற எண்ணக் கருத்தை வெளிப்படுத்தியவர்களுள் மர்ஹூம் செய்யத் முகம்மது என்பவர் குறிப்பிடத்தக்கவராவார். இவர், மாத்தளை விதானே லாகே கெதர அபூ பக்கர் லெப்பை செய்யது முகம்மது என வம்சப்பெயரோடு அழைக்கப்படுகின்றார்.

இவரும், ஊரின் நலன் விரும்பிகளும் சிந்தனையாளர்களும் ஒன்று சேர்ந்து மடவலை முஸ்லிம்களின் கல்வித்துறையை மேம்படுத்தும் நோக்கில், 'மடவலை முஸ்லிம் கல்வி அபிவிருத்திச் சங்கத்தை' உருவாக்கினார்கள்.

1934ம் ஆண்டில் மடவலையில் நடைபெற்ற இக்கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் கூட்டத்தில் மர்ஹூம்களான செய்யத் முகம்மது ஏ.ஆர். பஹாவுத்தீன், ஏ.முகம்மது ஹனிபா (டொப்நானா) ஆகியோர் பாடசாலையொன்றின் அவசியம் பற்றி எடுத்துரைத்தனர். அங்கு, மடவளை முஸ்லிம்களுக்காக ஒரு கல்விக்கூடம் அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. அவ்வாறு கட்டடம் அமைப்பதற்காக தற்காலிகமாக தமது நிலத்தை தருவதாக செய்யது முஹம்மது இணக்கம் தெரிவித்தார். இந்த இடம் தற்போது 'மதீனா பேனிசர்ஸ்' வியாபார ஸ்தாபனம் அமைத்திருக்கும் இடமாகும். இந்த இடத்தில் 45 அடி நீளமும் 16அடி அகலமும் கொண்ட கட்டிடமொன்று செய்யது முகம்மது என்பவரின் முயற்சியால் கட்டப்பட்டது.



ஓட்டினால் கூரை வேயப்பட்டிருந்த இக்கட்டடம் பலத்தொட்ட ஓடைக்கு மேற்புறமாக மடவளை வத்தேகம பாதையின் ஓரத்தில் அமைந்திருந்தது. இக்கட்டத்திலேயே மடவளை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படத்தக்க வகையில் 1935 டிசம்பர் மாதம் 2ஆம் திகதியில் மடவலை பாடசாலை ஆரம்பமானது.

மடவளை பாடசாலையின் வரலாற்றில் முதற் தலைமை ஆசிரியராக ஏ.கே. சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டார். இவர் பாடசாலை ஆரம்பித்த அதே நாளிலேயே தமது பொறுப்புக்களை ஏற்றார். அவ்வமயம் இப்பாடசாலையில் 114 மாணவர்கள் இருந்தனர். அதேமாதத்தில் 16ம் திகதி 100 மாணவர்களின் பெயர்கள் பதியப்பட்டன.

அதில் முதல் மாணவராக எஸ்.எம்.ஏ. ஜெப்பார் என்பவரது பெயர் பதிவாகியுள்ளது. மடவளை முஸ்லிம் மகளிர் கல்விக்கு உற்சாக மூட்டும் வகையில், செய்யது முகம்மத் அவர்கள் தமது புதல்வி உம்மு ஸலீமாவை முதல் மாணவியாக இப்பாடசாலையில் சேர்த்தார்.

1936 ஜனவரி மாதத்தில் திரு. ஏ. கந்தப்பு எனும் உதவி ஆசிரியர் நியமனம் பெற்றார். அவ்வருடம் மே மாதமாகும் போது ஆசிரியர் தொகை நான்காக உயர்ந்தது. ஜனாப் ஏ சாஹுல் ஹமீத். திரு. வீ. தம்பிராஜா என்போர் புதிதாக நியமனம் பெற்றார்கள். அவ்வருடத்தில் மாணவர் தொகை 215ஆக அதிகரித்திருந்தது. அதனால் மேற்பிரிவு எனவும் கீழ்பிரிவு எனவும் மாணவர்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தனர்.

தலைமையாசிரியர் ஏ.கே. சுப்பிரமணியத்தின் தன்னலமற்ற சேவையும் அயராத உழைப்பும் இப்பாடசாலையின் ஆரம்ப வளர்ச்சிக்கு உந்து சக்தியாக விளங்கியது. ஊர் மக்கள் இவரை அன்போடு நடாத்தினார்கள். இதன் விளைவாக, 1936ம் ஆண்டில் இப்பாடசாலை அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலையாகியது. அதற்கு 'மடவளை தமிழ் பாடசாலை' எனப் பெயர் சூட்டப்பட்டது.

இவ்வாண்டில் மடவளையில் மலேரியாக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு பலர் மரணமடைந்தார்கள். இப்பாடசாலை அமைய ஆதாரமாக இருந்த, செய்யத் முகம்மத் அவர்களும் இதன் மூலம் வபாத்தாகியது பெரும் கவலையை அளித்தது.

1934ம் ஆண்டில் இப்பாடசாலைக் கட்டடம் கட்டப்படுவதற்கு முன்பு இங்கு ஒரு மத்ரஸா அமைக்கப்படுவதற்கான ஆலோசனை ஊர் பள்ளிவாசலில் முன்வைக்கப்பட்டது. அதனால் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் காலையில் பாடசாலைக் கல்வியும் பின்னேரத்தில் அரபு மொழி குர்ஆன் வகுப்புகளும் நடாத்தப்பட்டன. இங்கு முதற் தடவையாக லதிப் லெப்பை என்பவர் குர்ஆன் வகுப்புகளை நடாத்தி வந்தார். அவருக்கான ஊதியத்தை செய்யது முகம்மது வழங்கி வந்தார்கள். பின்னர் முஹம்மது ஹனிபா (டொப்நானா) இப்பணியைத் தொடர்ந்தார்கள். இவர் வத்தேகமையில் ஹசன் என்பவரைக்கொண்டு தம் செலவிலேயே வகுப்புகளை நடாத்தினார். இவர்கள் மடவளை முஸ்லிம்களின் கல்வியின் முன்னோடிகளாவர்.

இவ்வாண்டில் மாணவர் தொகை 249 ஆக இருந்தமையால், இப்பாடசாலைக் கட்டடத்தில் வகுப்புகளை நடாத்த முடியாதளவுக்கு இடநெருக்கடி காணப்பட்டது. அதனால் இரண்டு தடவைகளில் இக்கட்டடத்தோடு இணைத்து தற்காலிக கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. முதலில் பாடசாலையின் கட்டடத்தோடு சேர்த்து, பாதை ஓரமாகவே பலகையால் ஒருபகுதி விஸ்தரிக்கப்பட்டது. இதற்கு தகரத்தினால் கூரைப்போடப்பட்டது. அதன் பிறகு ஓலையினால் மற்றுமொரு பகுதி, பலத்தொட்ட ஓடைப்பக்கமாக பாடசாலையுடன் இணைத்து அமைக்கப்பட்டது. ஆனால், 16.05.1940ல் ஏற்பட்ட வெள்ளத்தினால் இப்பாடசாலை கட்டடம் சேதம் அடைந்தது. அதனால் அந்தவாரமே பாடசாலை மூடப்படவேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. இதற்கு இதன் அருகே பலத்தொட்ட ஓடை ஓடுவதே காரணமாகும். இதனால் மாணவர் தொகையின் அதிகரிப்பிற்கேற்ப, புதிய கட்டடங்கள் அமைக்கப்படுவதன் அவசியம் உணரப்பட்டது. அத்தோடு அவை நிலையான உறுதியான கட்டடங்களாக நிர்மாணம் பெறவேண்டு மென்பதையும் பெற்றோர் உணர்ந்துகொண்டனர்.

பாடசாலைவ ரலாற்றில் பதியப்படத்தக்க இரு நிகழ்வுகள் நிகழ்ந்தன. 1961 ஒக்தோபர் 23ம் திகதி இப்பாடசாலை மகா வித்தியாலயமாக்கப்பட்டு, அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட கலாநிதி பதியுத்தீன் மஹ்முத் இவ்வித்தியாலயத்தை 'மதீனா மகாவித்தியாலயம்' எனப் பெயர்ச் சூட்டுமாறு கூறியது ஒன்றாகும். அத்துடன் தற்போது பாடசாலை வளவில் நிமிர்ந்தபடி இந்த நிகழ்வுகளை நினைவுகூரும் இரு மாடிக்கட்டடத்தையும் இவர் மனமுவந்து தந்துதவினார். அன்றிலிருந்து 'மதீனா' என்ற பெயருடன் இப்பாடசாலை மேலும் முன்னேற்றப் பாதையை நோக்கி நகர்ந்தது.

இந்த முன்னேற்றங்களை அப்பாடசாலை அடைந்து கொள்ள பலரது அயராத உழைப்பும் ஒரு காரணமாகியது. 1961ம் ஆண்டு காலப் பகுதியில் இப்பாடசாலையின் ஒரு பகுதியாக இயங்கி வந்த பெண்கள் பாடசாலை, கிராம அதிகாரி எம்.ரகீபின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. அக்காலத்தில் இவரே அதனை பராமரித்து வந்தார். ஆரம்பகால பாடசாலைக் கட்டடத்தை அதன் உரிமையாளர் பொறுப்பேற்றுக் கொண்டார். அது பின்னர் உடைக்கப்பட்டு 'மதீனா' பேணிசர்ஸ்' என்ற வியாபார ஸ்தாபனமாக இன்று இருப்பததைக் காணலாம்.

பெண்கள் பாடசாலையாக இயங்கிவந்த பாடசாலை, 1967ம் ஆண்டளவில் மதீனா மகா வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டது. 1968ம் ஆண்டில் இப்பாடசாலையின் முதலாம் வகுப்பிற்கு ஆண்களும் பெண்களும் சேர்க்கப்பட்டனர். 2ம் வகுப்பிற்கு வகுப்பேற்றப்பட்ட மாணவியர் மடவளை மகாவித்தியாலயத்திற்கு சேர்க்கப்பட்டனர். இதனால் இப்பாடசாலை மடவளை மகா வித்தியாலயத்தின் கனிஷ்ட பிரிவாக இயங்கியது. இது ஆரம்ப பாடசாலை என இன்றும் அழைக்கப்படும் வழக்கம் உள்ளது.

1971ம் ஆண்டில் முதற் தடவையாக பல்கலைக்கழக அனுமதி இப்பாடசாலை மாணவனொருவனுக்கு கிட்டியது. அவர் ஏ.எச்.எம். சித்தீக் என்பவரேயாவார்.




அவரே தற்போது இக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலையின் அபிவிருத்தி திருப்புமுனை என்றால் தேசிய மீலாத் விழாவாகும். இத்திட்டத்திற்காக 100 நாள் செயற்திட்டத்தின் கீழ் இப்பிரதேசத்திற்கு 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அது இன்றைக்கு 50 கோடி அல்லது 150 கோடி ரூபா பெறும். அது ஒரு பாரிய அபிவிருத்திதிட்டம். இதன் போது எமது பாடசாலைக்கு கேட்போர் கூடம் தேவை என்ற கோரிக்கையும் முன் வைக்கப்பட்டது. அதற்கு ஒன்றரைக்கோடி நிதி ஒதுக்கீடுகள் கிடைத்தன. பணம் போதாது என்றநிலை இருந்தபோது, திறைசேரியில் அன்று சரித்த ரத்வத்தை என்பவர் இருந்தார். அன்று அமைச்சராக இருந்த ரவூப் ஹக்கீம் என்னை பாராளுமன்றம் அழைத்துச் சென்று அங்கு பலருடன் கலந்துரையாடி அதற்கான முழு நிதியினையும் பெற்றுக் கொடுத்தார். இதன் அங்கசம்பூரணமான அஷ்ரப் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தை நிர்மாணித்துக் கொண்டமை இப்பாடசாலையின் வரலாற்றில் ஒருமைல் கல்லாகும். இதில் உயிர்நீத்த 10 இளைஞர்களுடைய பெயர்களும், அதிதிகளுடைபெயர்களும் எனது பெயரும் இடம்பெற்றிருப்பது என்பதுடன் இது பாடசாலையின் அபிவிருத்திற்குப் பெரும் பங்கு வகிக்கின்றன. மேலும் தேசிய மீலாத் விழா எந்தளவுக்கு எமது ஊருக்கும் பாடசாலைக்கும் வரப்பிரசாதமாக அமைந்ததோ அதேபோன்று 'மீண்டும் பாடசாலைக்குச் செல்லல்' என்ற இந்த நிகழ்வு ஒரு வரப்பிரசாதமாகும் என்பதில் சந்தேகமில்லை.

இந்நிகழ்வை எமது பாடசாலையின் நூற்றாண்டை நோக்கிய பயணம் என்ற காரணத்தினால் இப்பாடசாலை புதிய திருப்புமுனையை நோக்கி பயணம் செல்லப் போகின்றது. இப்பிரதேசத்தில் வாழும் அனைத்துமக்களுக்கும் இப்பாடசாலை ஓர் அங்கமாகும். இந்த நிகழ்ச்சித் திட்டம் அடுத்த தலைமுறையினர்களுக்கு ஓர் ஆவணமாகப் பதிவு செய்யப்படவேண்டும்.

இந்தநிகழ்வில் 1979 1975 குழுவினர்கள் கல்வி கற்றவர்கள் சிரேஷ்ட பழைய மாணவர்கள் என்று கருதப்பட்டாலும் இதற்கு முன் கல்வி கற்றவர்கள் இன்னும் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்தக் காலகட்டத்தில் உள்ளவர்களை இணைத்துக் கொள்வதற்கான பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டிருக்கிறது. முடியுமான வரையில் நாங்கள் எமது நண்பர் குழாத்தினரை இணைத்து இருக்கின்றோம்.

இதில் கலந்துகொள்வது மட்டுமல்ல 2035 நாம் எல்லோரும் உயிரோடு இருக்கும் காலத்தில் இப்பாடசாலையின் அபிவிருத்திற்காக வேண்டிய இந்த ஒன்றுகூடல் நிகழ்வை ஒரு வாய்ப்பாக வைத்துக் கொண்டு பாடசாலையின் அபிவிருத்திக்கு பௌதீக வளங்களை மாத்திரம் அல்லாமல் கல்வி அடைவு மட்டத்தையும் திட்டமிட்டு நாங்கள் ஒவ்வொரு குழாத்தினரும் எங்களால் முடியுமான வரையில் பொறுப்புக்களை ஏற்று எமது இலங்கையில் ஒரு முன்னணிப் பாடசாலையாக மாற்றம் செய்வதற்கு நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு செயற்படுதலுக்கு இந்த நிகழ்வு ஒருபெரும் வாய்ப்பாக அமையும்.

நான் இறுதியாகவேண்டிக் கொள்வது என்னவென்றால் மதீனாவின் பழைய மாணவன் என்றவகையில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவராகவும், மாகாண உள்ளூராட்சி மன்ற அமைச்சின் கீழ் உள்ள இலங்கை உள்ளூராட்சி ஆளுகை நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நாயகமாகவும் இவை போன்ற உயர் பதவிகளில் வகித்தவர்கள் நாடளாவியரீதியில் இப்பாடசாலையில் கல்விகற்ற பழையமாணவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் அனைவரையும் ஒன்றுசேர்ப்பதற்கு இந்த 'மீண்டும் பாடசாலை செல்லல்' நிகழ்வு நல்லதொரு சந்தர்ப்பமாக அமைகின்றது. மதீனியன் யாராக இருந்தாலும் இந்த நிகழ்வில் மிகுந்த ஆர்வத்தோடு கலந்துகொண்டு ஒத்துழைப்பையும் நல்லாதரவையும் பங்களிப்பையும் நல்கவேண்டும் என்பது எனது அவாவாகும்.

இறுதியாக, மதினா தேசிய பாடசாலையின் முன் வாயிலுள்ள காணியை பாடசாலையின் தேவைக்காக ஆரம்பத்தில் பெற்றுக் கொண்டாலும் அந்தக் காணியில் அப்பாடசாலையின் தேவையைக் கருத்திற் கொண்டு புதியதொரு கட்டட நிர்மாணப் பணியை எதிர்காலத்தில் நிறைவேற்றிக் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம். இப்பாடசாலை நூற்றாண்டைகொண்டாடும் வேளையில் அதில் அழகிய கட்டிடம் ஒன்று காட்சியளிக்கும். இதன் பங்குதாரார்களாக நான், ஏ. எம். பாசில், ஏ.எல். எம்.ரிஸாட், ஏ. எம். பைஸல், ஏ. எம். சலாஹுதீன், ஏ. எச். எச். எம். இஸ்மாயில், ஹலீம் மரியான் ஆகியோர் முக்கியத்துவம் பெறுகின்றனர் என தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இக்பால் அலி...**

# ஹம்பாந்தோட்டை வலய பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

## அமைச்சர் அமரவீர, சமல் ராஜபக்ஷ பங்கேற்பு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின்பேரில் தரம் 01 இலிருந்து 11 வரையிலான மற்றும் உயர்தர வகுப்புக்களில் கல்வி பயிலும் வசதி குறைந்த மாணவர்களுக்காக வழங்கப்பட்ட ஜனாதிபதி புலமைப் பரிசில் ஹம்பாந்தோட்டை வலய பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு வழங்கும் நிகழ்வு ஹம்பாந்தோட்டை சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள ஹம்பாந்தோட்டை, தங்காலை மற்றும் வலஸ்முல்லை ஆகிய மூன்று வலயங்களிலிருந்தும் தரம் 01 தொடக்கம் 11 வரையிலான தரங்களிலிருந்த வசதி குறைந்த 2742 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்ததோடு, இவர்களுக்கு 98.71 மில்லியன் ரூபாவும் உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்கும் வசதி குறைந்த 180 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்ததோடு இவர்களுக்கு 25.92 மில்லியன் ரூபாவுமாக மாவட்டத்தின் மூன்று வலயங்களுக்கும் 124.63 மில்லியன் ரூபா அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் தரம் 01 தொடக்கம் 11 வரையிலான தரங்களில் கல்வி கற்கும் வசதிகுறைந்த தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மாதத்திற்கு 3000 ரூபாவீதம் 12 மாதங்களுக்கு புலமைபரிசில் வழங்கப்படவுள்ளதோடு உயர் தர வகுப்பில் கல்விகற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு மாதத்திற்கு 6000 ரூபாவீதம் 24 மாதங்களுக்கு புலமை பரிசில் வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, ஹம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான சமல் ராஜபக்ஷ, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ ஆகியோருடன் பிரதேச அரசியல் தலைவர்கள், கல்வி அதிகாரிகள் பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுடன் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஏற்பாட்டில் மாணவர்கள் கௌரவிப்பு

**(பேருவளை விசேட நிருபர்)**

தர்கா நகர் ஸாஹிரா, அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை மற்றும் அல்ஹம்ரா மகா வித்தியாலயம் ஆகியவற்றில் இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தர்கா நகர் லோட்டஸ் வீதியில் உள்ள நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

கல்வி நிலைய ஸ்தாபகரும் பிரபல சமூக சேவையாளருமான கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொருளாளருமான எம்.எஸ்.எம். அஸ்லம், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் எம்.எம்.எம். அம்ஜாத், இலங்கை மருந்தாக்கக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் டாக்டர் ரூமி ஹாஷிம் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொள்வர்.




'மீரிபன்னை சுப்பர் லீக் கிரிக்கட் போட்டிகள்' தர்கா நகர் ஸாஹிறா கல்லூரி மைதானத்தில் அண்மையில் வெகுவிமர்சையாக நடைபெற்றன. இறுதிப்போட்டியில் "மீரிபன்னை ஸ்ட்ரைகர்ஸ்" மற்றும் "மீரிபன்னை லயன்ஸ்" அணிகள் இறுதிப்போட்டியில் மோதி, அர்ஹம் தலைமையிலான மீரிபன்னை ஸ்ட் ரைகர்ஸ் அணி தொடரின் அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்று சாம்பியன் கிண்ணத்தை பெற்றுக்கொண்டன. வெற்றிபெற்ற அணியை படத்தில் காணலாம்.

# சுலைமானியா அரபுக் கல்லூரி பட்டமளிப்பு

**புத்தளம் தினகரன் நிருபர்**

குருநாகல் பண்டாரகொஸ்வத்த சுலைமானியா அரபுக் கல்லூரியின் மூன்றாவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 28 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் ஸ்தாபகரும், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை உப தலைவருமான அஷ்ஷெய்க் எச். உமர்தீன் (ரஹ்மானி) தலைமையிலும், கல்லூரியின் தலைவர் எம்.ஜே.எம். மன்ஸூர் அவர்களது ஏற்பாட்டிலும் நடைபெறவுள்ள விழா நிகழ்வுகளில் விசேட பேச்சாளராக நிதா பஃவுண்டேஷன் தலைவர் ஹஸன் பரீத் (பின்னூரி) அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார்.

# விவசாய அமைப்பு செயலாளர் துப்பாக்கிச் சூட்டில் படுகாயம்

## முல்லைத்தீவு வீதியில் சம்பவம்

**புதுக்குடியிருப்பு விசேட , மாங்குளம் குரூப் நிருபர்கள்**



முல்லைத்தீவு மாவட்டத்தில் அறுவடை செய்த நெல்லினை வீதியில் காயப்போட்டு காவல் காத்து உறங்கிக்கொண்டிருந்த விவசாயியொருவர் மீது நேற்று துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேசத்தில் கல்விளான் பகுதியில் நேற்று அதிகாலை துப்பாக்கிசூடு நடத்தப்பட்டுள்ளது.

இதில் காயமடைந்த கமக்கார அமைப்பின் செயலாளர் மேலதிக சிசிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி தெரியவருகையில்,

தனது நெல்லினை அறுவடை செய்து வீதியில் காயவைத்துவிட்டு இரவு காவல் காத்து வந்தமையால் வீதி ஓரமாக உறங்கியுள்ளார்.

இவர் மீது நேற்று அதிகாலை 3.00 மணியளவில் இனம் தெரியாத நபர்களால் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்விளான்குளம் பகுதியை சேர்ந்த கமக்கார அமைப்பின் செயலாளரான 42 வயதுடைய செல்லையா கிருஸ்ணராஜா என்பவரே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் மல்லாவி ஆதாரமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். சட்டவிரோத மணல் அகழ்வில் காணப்படும் போட்டி காரணமாகவே இந்த துப்பாக்கிசூடு நடத்தப்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலய பொன்விழா



கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வுகள் அதிபர் கி. விக்னராஜா தலைமையில் எதிர்வரும் 26, 27, 28 ஆம் திகதிகளில் காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

எதிர்வரும் வெள்ளி காலை நடைபவனி நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி. சின்னராசா கலந்து கொள்வார்.

அன்றைய தினம் மதியம் சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் க. சிவேந்திரம் பிரதம விருந்தினராக பங்கேற்கும் மரநடுகை நிகழ்வும் நடைபெறும்.

அன்று மாலை கிளிநொச்சி தெற்கு கல்வி வலய உடற்கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப. பார்த்திபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் பெண்களுக்கான உதைப்பந்தாட்டப் போட்டி நடைபெறும்.

மறுநாள் சனிக்கிழமை இலங்கையின் நிலவுருவ அமைப்பு பாடசாலையில் நிறுவப்பட்டுக் கையளிக்கப்படும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மருத்துவர்களான சாந்தகுணாகரன் தம்பதியினர் கலந்து கொள்வர். அன்று மதியம் விஞ்ஞான ஆய்வு கூடத் திறப்பு விழா நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண விஞ்ஞானபாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. நிருபராணி கலந்து கொள்வார்.

அன்றுமாலை வைத்தியர் வி. ஜெக்கப்சன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் பரிசளிப்பு விழா நடைபெறும். நிறைவுநாள் ஞாயிற்றுகிழமை (28.07.2024) காலை பொன்விழா மலர் வெளியீடு நடைபெறும். இதன் பிரதம விருந்தினராக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் பிரதீபா காயத்திரி கஜபதி கலந்து கொள்வார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் மலரின் வெளியீட்டுரையை ஆற்றுவார். இதனைதொடர்ந்து கௌரவிப்பு நிகழ்வு நடைபெறும். இதன் பிரதம விருந்தினராக கிளிநொச்சி தெற்கு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந. காண்டீபன் கலந்து கொள்வார். அன்றையதினம் சிறப்பு நிகழ்ச்சியாக செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனை நடுவராகக் கொண்டு சொற்சமர் விவாத நிகழ்ச்சியும் நடைபெறும்.

# பொதுமக்கள் சட்ட ரீதியான ஆவணங்களை உரிய முறையில் பாதுகாக்க வேண்டும்

## தெல்லிப்பளை உதவி பிரதேச செயலாளர்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

பொதுமக்கள் சட்டரீதியான ஆவணங்களை உரிய முறையில் பேணிப்பாதுகாப்பதன் ஊடாக சிரமங்களைத் தவிர்க்க முடியுமென தெல்லிப்பளை உதவி பிரதேச செயலாளர் திருமதி கோ.சங்கீதா தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பளைப் பிரதேச செயலகத்தில் சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இலவச நடமாடும் சேவை நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

பிறப்பு, திருமணம், இறப்புச் சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியன முக்கிய ஆவணங்களாக காணப்படுகின்றன. பெரும்பாலான பொதுமக்கள் தேசிய அடையாள அட்டை சிதைவடைந்திருந்தாலும் அதனை மாற்றுவது கிடையாது.

இதனால் அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்ட நலன்புரி திட்டங்களை கூட பெற்றுக்கொள்ள முடியாமல் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

எனவே பொதுமக்கள் சட்டரீதியான ஆவணங்களில் காணப்படும் பிழைகள் திருத்தி அவற்றை சரியான விதத்தில் பாதுகாப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

பொதுமக்கள் ஆவணங்களை பெறுவதற்கு சிறிய பணத்தை செலவிட நேரிடுகின்றது.

இதனைக் கருத்திற் கொண்டு சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தினர் நடமாடும் சேவை ஊடாக இலவசமாக ஆவணங்களை பெற்றுக் கொடுக்கவும் சட்ட ஆலோசனைகளை வழங்கவும் முன்வந்துள்ளனர்.

நிறுவனத்தினர் தொடர்ச்சியாக இவ்வாறான சட்ட உதவிகளை முன்னெடுத்து வருவது பாராட்டத்தக்க விடயமாகும்.

# வடக்கின் உதயம்

## அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான ஆடிப்பூர அலங்கார உற்சவம்

மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் அமைந்துள்ள அன்னை ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனுக்கு பத்து நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறவுள்ளது.

ஆடி மாதம் 13 ஆம் நாள் (29/07) திங்கட்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 20 ஆம் நாள் (05/08) திங்கட்கிழமை சப்பரம், வேட்டைத்திருவிழா (06/08) ஆடி மாதம் 21 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை தேர், ஆடிமாதம் 22 ஆம் நாள் (07/08) புதன்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெறும்.

ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறி நின்று துர்க்காதேவியுடன் சேர்ந்து வீதியுலாவரும் காட்சியும் நடைபெறும்.

தினமும் காலை 10.00 மணி தொடக்கம் ஸ்நபன அபிஷேகம், பூஜை, வசந்த மண்டப பூஜை, அம்பாள் வீதியுலாவும், மகேஸ்வர பூஜையும் (அன்னதானம்) நடைபெறும். தொடர்ந்து 09/08 வெள்ளிக்கிழமை பைரவர்சாந்தி உற்சவமும் நடைபெறும்.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆடிப்பிறப்பு விழா







கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கவின்கலை மன்றம் முன்னெடுத்த ஆடிப்பிறப்பு விழா நேற்று காலை கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஷ், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச கலாசார உத்தியோகத்தர் பா.ஜெயதாசும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வுகளை ஆரம்பக் கல்விநெறி ஆசிரிய மாணவி திருமதி மைதிலி கோகுலக்கண்ணன் நெறிப்படுத்தினார். வரவேற்புரையை விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவி கிட்டா தவராசாவும் பிரதி அதிபர் க.செந்தில்குமரன் வாழ்த்துரையையும் விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவன் இ.செந்தூர்செல்வன் ஆசிரிய மாணவர் உரையையும் விரிவுரையாளர் வேல் நந்தகுமார் ஆடிப்பிறப்புப் பற்றிய சிறப்புரையையும் ஆற்றினர். கவின்கலைமன்றக் காப்பாளர் ரஜிதா சின்னதுரை பிரதம விருந்தினரை அறிமுகம் செய்து வைத்ததோடு தொடக்கவுரையையும் ஆற்றினார்.

நன்றியுரையை கிறிஸ்தவகல்விநெறி ஆசிரிய மாணவி கமலினி சுதாகர் ஆற்றினார். இந்நிகழ்வின் நிறைவில் கலாசாலை சமூகத்தினர் அனைவருக்கும் ஆடிக்கூழ் பரிமாறப்பட்டது.

## ரூ.1700 சம்பள விவகாரம்

# வர்த்தமானி அறிவித்தல் வாபஸ் பெறப்பட்டமை வருத்தமளிக்கின்றது



பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ரூ.1700 நாளாந்த சம்பளமாக வழங்கப்பட வேண்டும் என தொழில் அமைச்சு வெளியிட்டிருந்த வர்த்தமானி அறிவித்தல் வாபஸ் பெறப்பட்டுள்ளமை வருத்தமளிப்பதாக இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்க பொதுசெயலாளரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ.1700 சம்பளம் வழங்கப்பட வேண்டுமென தொழில் அமைச்சு இரண்டு வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டிருந்தது.

இருந்த போதிலும் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் சவாலுக்கு உட்படுத்தப்பட்டு பெருந்தோட்ட நிறுவனங்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தன.

இந்நிலையில் தொழில் அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த ரூ.1700 சம்பளம் தொடர்பான வர்த்தமானி வழக்கின் இரண்டாம் விசாரணையை நடத்திய உயர்நீதிமன்றம் வர்த்தமானிக்கு எதிராக இடைக்கால தடை உத்தரவை அண்மையில் பிறப்பித்திருந்தது.

அதேநேரத்தில் தொழில் அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த இந்த வர்த்தமானி அறிவித்தலில் சட்ட சிக்கல் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் தோட்டத்தொழிலாளர்களுக்கு ரூ.1700 சம்பளத்தை வழங்க வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானி தொடர்பில் புதிய வேலைதிட்டமொன்றை கொண்டு வருவதற்காகவே தொழில் அமைச்சின் வர்த்தமானி அறிவித்தலை மீள்பெறப்பட்டுள்ளதாக அறிந்தேன். இருந்த போதிலும் ரூ.1700 சம்பள விடயத்தில் யார் நெல் குத்தினாலும் பரவாயில்லை எம் மக்களுக்கு அரிசி கிடைத்தே ஆக வேண்டும். அதே நேரத்தில் ரூ.1700 என்ற அரிசி கிடைக்காவிட்டால் என்னுடைய சுயரூபத்தை காட்ட வேண்டி வருமென வடிவேல் சுரேஷ் எம்.பி சுட்டிக்காட்டினார்.

மேலும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ரூ.1700 சம்பள விடயம் தொடர்பில் கையாளப்பட்ட வடிவங்கள் வேறாக இருக்கலாம், அணுகுமுறையும் வித்தியாசமாக இருக்கலாம். எல்லா விதத்திலும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் என்ற வகையில் தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் குரல் கொடுத்து அதை செயற்படுத்த எல்லா ஆதரவும் வழங்கியுள்ளதுடன், சம்பள நிர்ணய சபைக்கும் ஆதரவு வழங்கியிருந்தேன்.

**ஆ.ரமேஸ்.**

# மலைச்சாரல்



## வெளிநாட்டு தூதரக அதிகாரிகளுடன் இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் கலந்துரையாடல்



கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், மலேசிய உயர்ஸ்தானிகர் பட்லீ ஹிஸாம் எடம், எகிப்திய நாட்டின் தூதுவர் மஜீத் மொஸ்லே, இந்தோனேஷிய நாட்டின் தூதுவர் திருமதி. தேவி கஸ்டினா தோபிங் ஆகியோரை கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் சந்தித்து அண்மையில் கலந்துரையாடினார். இச்சந்திப்பின் போது பாடசாலை அபிவிருத்திப் பணிகளுக்கான நிதியை பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன. அத்தோடு இலங்கை மாணவர்கள் இந்நாடுகளில், இலவச பட்டப்படிப்பை மேற்கொள்வது தொடர்பாகவும் இதன் போது ஆராயப்பட்டது. இச்சந்திப்பு, காத்திரமானதாகவும், பல்வேறு அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அடித்தளமாகக் காணப்பட்டதாகவும் இராஜாங்க அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# சந்தேகநபரை கைது செய்ய முயன்ற பொலிஸ் கான்ஸ்டபிள் மீது தாக்குதல்

கதிர்காமம் வள்ளியம்மா ஆலயத்திற்கு அருகில் பெண்ணொருவரின் தங்க சங்கிலியை அறுத்த சந்தேகநபரரை பிடிக்க முற்பட்ட போது, சந்தேகநபர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் கையை கத்தியால் வெட்டி தப்பிச் சென்றுள்ளதாக கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர். கதிர்காமம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் கான்ஸ்டபிளே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார். அவர் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. அவரின் இடது கை முழங்கை முதல் மணிக்கட்டு வரை வெட்டுக்காயங்கள் ஏற்பட்டுள்ளதகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# இரத்தினக்கல் அகழ்வு; ஏலவிற்பனை இடைநிறுத்தம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி பெரடைஸ் குளத்தை இரத்தினக்கல் அகழ்வுக்காக ஏலவிற்பனைக்கு விடும் முயற்சி கைவிடப்பட்டுள்ளது.

இரத்தினபுரி அபிவிருத்தி குழுவின் தீர்மானத்துக்கிணங்க இம்முயற்சி கைவிடப்பட்டுள்ளது.

இரத்தினக்கல் அதிகார சபையின் அனுமதியுடன் சுமார் 7 ஏக்கர் பரப்பளவுடைய இக்குளத்திலுள்ள சகதியை அகற்றும் போர்வையில் ஒரு சிலரின் நன்மைக்காக இக்குளத்தை ஏலவிற்பனை செய்ய முயல்வதாக பிரதேசமக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வந்தது.

பிரதேசமக்கள் மக்கள், பிரதிநிதிகளின் ஊடாக இரத்தினபுரி அபிவிருத்தி குழுவுக்கு அறிவித்ததையடுத்து இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திக் குழு இந்த ஏல விற்பனையை இடைநிறுத்துமாறு இரத்தினக்கல் அதிகாரசபைக்கு பணிப்புரை விடுத்துள்ளது. அதற்கிணங்க இம்முயற்சி இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மருதமுனை யுனிவர்ஸ் விளையாட்டு கழகத்தால் விழிப்புணர்வு திட்டங்கள்

பெரியநீலாவணை விசேட நிருபர்



மருதமுனை யுனிவர்ஸ் விளையாட்டுக் கழகம் விளையாட்டுத் துறையில் ஈடுபட்டு வரும் இளைஞர்களுக்கு பல்வேறு சமூகப் பணிகளை வழங்கி வருகின்றன. இதன் ஒரு கட்டமாக விளையாட்டு துறையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்ற இளைஞர்களுக்கு புதிய விழிப்புணர்வு செயல் திட்டங்களை அறிமுகப்படுத்த அக்கழகம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஐவா கெம்பஸ் நிறுவனத்தின் நிறைவேற்று முகாமைத்துவ பணிப்பாளர் டாக்டர் எம். எச். எம். முனாசிக்குடன் அண்மையில் மருதமுனையில் நடைபெற்றது.

இதன்போது விளையாட்டுக் கழகத்தின் வீரர்களை கொண்டு புதிய பல திட்டங்கள் ஆரம்பிப்பது தொடர்பில் யுனிவர்ஸ் கழகத்தின் உயர்பீட உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட உள்ள புதிய வேலைத்திட்டங்கள் குறித்து யுனிவர்ஸ் விளையாட்டுக் கழகத்தினரும் பல்வேறு முன்மொழிவுகளை இதன்போது தெரிவித்தனர்.

கழகத்தின் மாபெரும் சுற்றுப் போட்டி மற்றும் இளைஞர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு என்பனவற்றை விரைவில் நடத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில் யுனிவர்ஸ் விளையாட்டு கழகத்தின் செயலாளர் ஏ.எம்.முஹம்மட் றஜி, முகாமையாளர் எஸ். எம். அன்ஸார், இணைப்பாளர் ஏ.எச்.எம்.சியாம் உட்பட கழக முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். இளைஞர் சமுதாயம் தற்போது போதைப் பொருள்பாவனை, சமூக முரண்பாடான விடயங்களில் ஈடுபடுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் இளைஞர்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு சமூக நிறுவனங்களுக்கு உண்டு. நாட்டின் அபிவிருத்திக்கு இளைஞர்களை சமூகப் பொறுப்புள்ளவர்களாக மாற்றும் நோக்கத்தின் அடிப்படையில் இந்த புதிய திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

# நற்பிட்டிமுனை பொது நூலகம் புனரமைப்பு

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

நற்பிட்டிமுனை பொது நூலகம் தற்போது புனரமைக்கப்படுகின்றது. இதற்கான நிதி கல்முனை மாநகர சபையால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பத்து இலட்சம் ரூபா நிதியை கொண்டு சுற்றுமதில் உயர்த்தப்பட்டு பள்ளமான பகுதிகள் செம்மண்ணால் நிரப்பப்பட்டும் வருகின்றன.

இதேவேளை இந்த நூலகத்துக்கு இரண்டாண்டுகளாக நூல்கள் வழங்கப்படாததை சுட்டிக்காட்டும் பொது மக்கள், இந்தக் குறைபாட்டை நீக்குமாறும் கல்முனை மாநகர சபை ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். நற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்பு மக்கள், வாசகர்கள், மாணவர்கள் இந்நூலகத்தினை பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



# ரிவோல்வர் ரக துப்பாக்கி மீட்பு

மாமாங்க பிள்ளையார் ஆலயத்தை அண்டிய கடற்கரையில் பிளாஸ்டிக் குழாயில் கிறீஸ் திரவம் இட்டு புதைத்து வைக்கப்பட்டிருந்த ரிவோல்வர் ரக துப்பாக்கியொன்று மீட்கப்பட்டு கல்முனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடலரிப்பினால் இத்துப்பாக்கி வெளியாகியுள்ள நிலையில் அங்கு விளையாட்டில் ஈடுபட்டவர்களால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (23) மாலை கண்டெடுக்கப்பட்டது. இத்துப்பாக்கி 2 தோட்டாக்களுடன் (ரிவோல்வர்) இயங்கு நிலையில் காணப்படுவதுடன் ஜேர்மனி நாட்டு தயாரிப்பில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் குறிப்பிட்டனர். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கல்முனை தலைமையக பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# கல்முனை நூலக கீழ் தளத்தில் பத்திரிகை வாசிப்பு பிரிவு

(கல்முனை விசேட நிருபர்)



கல்முனை பொது நூலக கட்டடத்தின் கீழ் தளத்தில் கடந்த சில வருடங்களாக தற்காலிகமாக இயங்கி வந்த கல்முனை மாநகர சபையின் அலுவலகப் பகுதி அங்கிருந்து இடமாற்றப்பட்டதை தொடர்ந்து குறித்த கீழ் தளத்தில் நூலகத்தின் பத்திரிகை வாசிப்புப் பிரிவும் இயங்கத் தொடங்கியுள்ளது.

கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸின் பணிப்புரைக்கு அமைவாக இதற்கான நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டிருந்தன.

கல்முனை பொது நூலக கட்டடத்தில் கல்முனை மாநகர சபை இயங்கி வந்ததால் பொது நூலகத்தில் இடப்பற்றாக்குறை நிலவுவதாகவும் இதனால் வாசகர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் குறிப்பாக மேல் தளத்தில் இயங்கும் பத்திரிகை வாசிப்புப் பிரிவை வயோதிபர்கள் பயன்படுத்துவதில் கடும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது.

இந்நிலையில் கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸ் இவ்விடயத்தில் கூடிய கரிசனை செலுத்தி வாசகர்களின் நலன் கருதி அவ்விடத்தை நூலகத்திற்கு கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

இதையடுத்தே கல்முனை பொது நூலகத்தின் வாசிப்புப் பிரிவு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (23) முதல் நூலக கட்டடத்தின் கீழ் தளத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. இதன்போது ஆணையாளர் என். எம்.நௌபீஸ் அங்கு பிரசன்னமாகி நூலக ஒழுங்குகளை பார்வையிட்டதுடன் நூலகர் முஹம்மட் முஸ்தாக் மற்றும் உத்தியோகத்தர்களிடம் நூலகப் பணிகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார்.

சாய்ந்தமருது

# அல் ஹிலால் பாடசாலைக்கு மாடி கட்டட நிர்மாணம்



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடம் மற்றும் பெட்மிண்டன் பயிற்சி நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவருமான சட்டத்தரணி எச்.எம். எம்.ஹரீஸின் முயற்சியின் பயனாக பாராளுமன்ற உறுப்பினரின் டி100 வேலைத்திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

மேற்படி வித்தியாலய அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முகம்மட் ஹரீஸ் எம்.பி. பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், அம்பாறை மாவட்ட பொறியியலாளர் ஏ.எம்.ஸாஹீர் உட்பட கல்முனை வலய கல்வி அலுவலக பிரதி கல்விப் பணிப்பாளர்களான யூ.எல். றியால், எம்.எம். முதர்ரிஸ், அஸ்மா மலிக் ஆசிரிய ஆலோசகர்கள், சாய்ந்தமருது கோட்டக் கல்வி பணிப்பாளர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் கல்முனை ஸாஹிரா கல்லூரி அதிபர் எம்.ஐ. ஜாபீர், பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ. பாபா, வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் நூருல் ஹுதா உமர், ஆலோசகர் எம்.ஏ. கலீலுர்ரகுமான், பாடசாலை முன்னாள் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் பொறியியலாளர் கமால் நிஷாத் உட்பட உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்கத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# உலக கை கழுவுதல் தின நிகழ்வு

(காரைதீவு குறூப் நிருபர் )

உலக கை கழுவுதல் தினத்தினை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிறப்பான நிகழ்வு நேற்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வு வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் டாக்டர் எஸ்.எல்.தாஹிரா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன், தாதிய பரிபாலகர்கள் மற்றும் பொறுப்பு தாதிய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



ஆலய நிர்வாகத்தினர், திருப்புகழ் மாநாட்டுக்கு வழங்கிய மகத்தான ஒத்துழைப்புக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர். (படம்: காரைதீவு குறூப் நிருபர்)


## பெறுகை அறிவித்தல்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

**கேள்விமனுக்கோரல் (IFB)**

**இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு 17 நிழற்பட பிரதியெடுப்பு இயந்திரங்களை (PHOTOCOPY MACHINES) வழங்குவதற்கும் நிறுவுவதற்குமான பெறுகை**

1. இலங்கை மதுவரித் திணைக்களத்தின் சார்பில், திணைக்கள பெறுகைக்குழுத் தலைவரினால் தேசிய போட்டிக் கேள்விமனு நடைமுறையைப் பயன்படுத்தி இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு நிழற்பட பிரதியெடுப்பு இயந்திரங்களை வழங்குவதற்கும் நிறுவுவதற்குமான பெறுகை அறிவித்தலுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விமனுக்கள் கோரப்படுகின்றன. தேவைகள் மற்றும் விவரக்குறிப்புகள் பற்றிய விரிவான விளக்கம் கேள்விமனு ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.
2. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான கேள்வி மனுதாரர்கள் இல.353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 4 ஆம் மாடியில் உள்ள பிரிவின் பிரதம கணக்காளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன், கேள்விமனுக்கோரல் ஆவணங்களை 2024.07.25 ஆம் திகதி முதல் வார நாட்களில் (தேசிய விடுமுறை நாட்கள் தவிர்ந்த) அலுவலக நேரத்தில் (மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை) பார்வையிடலாம். தொலைபேசி இலக்கம் : 011-2045073.
3. ஆர்வமுள்ள கேள்வி மனுதாரர்கள், வியாபாரப் பதிவுச் சான்றிதழுடன் மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்துமூல வேண்டுகோளொன்றை 2024 ஆகஸ்ட் 12 அன்று பிற்பகல் 3.00 மணி வரை அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்து இல.353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 4 ஆம் மாடியில் உள்ள கணக்குப் பிரிவிற்கு மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா ஏழாயிரத்து ஐநூறு (ரூ.7,500/-) இனைச் செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்விமனுக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு இல.353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 4 ஆம் மாடியில் உள்ள கணக்குப் பிரிவின் பிரதம கணக்காளர் அறையில் கேள்விமனுவுக்கு முந்தைய கூட்டம் நடைபெறும்.
5. கேள்விமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவருக்கு பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2024.08.14 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இத்திணைக்களத்தை வந்தடையக் கூடிய விதத்தில் அனுப்ப வேண்டும். அல்லது இல 353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள மதுவரி திணைக்களத்தின் நான்காம் மாடியிலுள்ள கணக்குப் பிரிவில் பிரதம கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விமனுக்கள் சேகரிக்கும் பெட்டியில் 2024.08.14 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இட வேண்டும். தாமதமான கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும். வேறு முறைகளில் அல்லது இலத்திரனியல் முறையில் அனுப்பப்படும் கேள்விமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
6. அனைத்து கேள்விமனுக்களும், கேள்விமனு ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள வங்கி உத்தரவாத படிவத்தின் வடிவிலான ரூபா 60,000/- பெறுமதியான "மனுப்பாதுகாப்புடன்" அனுப்பப்பட வேண்டும். மனுப்பாதுகாப்பானது கேள்விமனுக்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதியிலிருந்து 105 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருக்க வேண்டும். (2024.11.27 வரை)
7. கேள்விமனுக்கள், அவற்றைப் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதியிலிருந்து 77 நாட்களிற்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். (2024.10.30 வரை)
8. கேள்விமனுக்கள், அவற்றை சமர்ப்பிப்பதற்கான காலம் நிறைவடைந்தவுடனேயே மேலே பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நேரில் கலந்துகொள்ள விரும்பும் கேள்விமனுதாரர்கள் மற்றும் / அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விமனுக்களை தயாரிப்பது அல்லது வழங்குவது தொடர்பாக மனுதாரர்களுக்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்கும் மதுவரித் திணைக்களம் பொறுப்பேற்காது.

தலைவர்
திணைக்கள பெறுகைக் குழு
இலங்கை மதுவரித் திணைக்களம்,
இல 353, கோட்டை வீதி, இராஜகிரிய.
25/07/2024

SELACINE



## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

N.T.C

**அரசு உதவி பெறும் "சிசு செரிய" மாணவர் பேருந்து சேவைக்காக முறைபாடுகளை அனுப்புதல்**

சிசுசெரிய மாணவர் பேருந்து சேவையில் காணப்படும் அடிப்படை நிபந்தனைகள்

- சிசுசெரிய மாணவர் பேருந்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மட்டுமே பயணம் செய்ய முடியும்.
- இந்தப் பாதையில் அனைத்துப் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மட்டுமே பயணிக்க முடியும்.
- பேருந்தில் தொலைக்காட்சிப் பெட்டி, திரைச்சீலைகள், கருப்பு ஸ்ட்டிக்கர் ஒட்டப்பட்ட ஜன்னல்கள் இருத்தல் கூடாது.
- மாதாந்த கட்டணம் எதுவும் வசூலிக்கப்படக்கூடாது. பயணத்தின் போது நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும்
- பேருந்து கட்டணம்.
  - 12 வயதுக்கு மேல் - முழு கட்டணத்தில் - 50% ஆகும்.
  - 12 வயதுக்கு குறைவான - முழு கட்டணத்தில் - 25% ஆகும்.
- நடத்துனரொருவர் அல்லது பெண்ணொருவர் கட்டாயமாக பேருந்தில் பணியமர்த்தப்பட்டிருக்க வேண்டும்.
- நிர்ணயிக்கப்பட்ட இடத்திலிருந்து பயணிக்கவேண்டிய பாடசாலை வரை பயணிக்க வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை மீறி "சிசு செரிய" சேவையில் பேருந்துகள் பயணிப்பதை நீங்கள் அவதானித்தால், பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு முறைபாடு செய்யவும்.

துரித அழைப்புகள் 1955

WhatsApp 071 259 5555

தலைவர்
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,
இல-241, பார்க் வீதி, கொழும்பு 05.

SELACINE



## வாகன பாகங்களுக்கான டெண்டர்

| Accessories | Vehicle Type |
|---|---|
| ஸ்பாய்லர்கள் | Alto 800, KDH, Noah |
| இலக்க தகடு ஹோல்டர்கள் | Number Plate Normal Rear, Surf Rear |
| ஏனைய தகடுகள் | Alto 800 Front Shell, Suzuki Every Rear Handle |
| | Leaf D/V-Right Front, Right Back, Left Front, Left Back |
| | Inwells Car Keyless Entry System, Roof Light, Roof Light Round |
| | Wagon R Body Moulding Steel, Rear Ganish Steel |
| கார் கவர்கள் | Outlander, Pajiro, Prius, Prado, Harrier, Small Size |
| கவர்கள் | Wagon R Day Light Cover, Wagon R Headlight Cover,Wagon R Fog Light Cover, Alto 800 Seet Cover, Ford 2013 ECO Tire Cover, Wagon R Reflector Cover, Alto K10 Seat Cover - Black / Beige, Every Front Bonet Cover |
| காட்டன் கார்பெட்கள் | Alto 800, Vezel, Suzuki 2016, Suzuki 2018, Freed, Aqua, Wigo, Fit, Prius |
| இறப்பர் கார்பெட்கள் | Alto800, Datsun, Grace, Nissan, Outlander, Renault, Land Cruiser (Toyoto) ,Allion, Axela(Mezda), Prado, Kwid, Fit 2013, Hilux, Hyunda, Harrier |
| கதவு வைசர்கள் | X-Trail, Glory 2 Door,Japan Alto 2017, Injection Door Visor 2013 Outlander, Prius, L200 Door Visor-Right , Left, L200 Door Visor-Right , Left, Alto 2010 Visor-Left , Right |

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள இலக்கத்திற்கு எம்மை தொடர்புகொள்ளவும்

| | | |
|---|---|---|
| சுதர்ஷன | மாலபே களஞ்சியசாலை | 075-3851904 |
| லங்கா | மாலபே களஞ்சியசாலை | 071-6547122 |
| கசுன் | மாலபே களஞ்சியசாலை | 071-6699647 |

வாகன பாகங்கள் 2024 ஜூலை 26 மற்றும் 27ஆம் திகதிகளில் காலை 9.00 மணியிலிருந்து 4.00 மணிவரை பார்வையிடலாம்.

2024 ஜூலை 29ம் திகதி மதியம் 12.00 மணிக்கு டெண்டர் முடிவடையும்

2024 ஜூலை 29ம் திகதி வரை மீளப்பெறமுடியாத ரூ. 300 ஐ செலுத்தி டெண்டர் படிவங்களை ஏசிய எசெட் தலைமை அலுவகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தாமதமாக சமர்பிக்கப்படுபவை ஏற்றுக்கொள்ள படமாட்டாது.

முன்னறிவித்தலின்றி எந்த வாகனம் / வாகனங்களையும் மீளப்பெற நிறுவனத்திற்கு உரிமையுண்டு.

ASIA ASSET FINANCE PLC
A Finance Company with a Golden Heritage
Muthoot Group Company

இல. 76, பார்க் வீதி, கொழும்பு 02. தொடர்பு: 011-7-699000

# வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

LECO

# மின் விநியோகத் தடை

பின்வரும் இடங்களில் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் அத்தியாவசிய நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் நிமித்தம் மின்சார விநியோகம் தடைப்படுமென வாடிக்கையாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். பொதுவான மின்சாரத் தடைக்கான நேரம் மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 5.00 மணி வரையாகும். எவ்வாறாயினும் ஒவ்வொரு பகுதிகளுக்கான நேரங்கள் வெவ்வேறாகக் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

## 2024 ஆகஸ்ட் மாதத்திற்கான மின்சாரத் தடை அட்டவணை

### திகதிகள் மற்றும் மின் கம்பியிணைப்புள்ள இடங்கள்

#### காலி

1 **ஆகஸ்ட் 05 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

மடவலமுல்ல, அசோக்கா மாவத்தை, கஹதுவவத்த சந்தி, ஹிரிம்புர வீதி, கராப்பிட்டிய வீதி, கோர்டன், டெரஸ், கிறீன் பார்க், ஜஸ்டின் கந்த, கித்துலன்பிட்டிய வீதி, தர்மராஜ மாவத்தை, கலுசிறி உயன மற்றும் கிளை வீதிகள்

2 **ஆகஸ்ட் 08 நப. 12.00 முதல் பி.ப. 1.30 வரை**

பியத்திகம, ஜின்தொட்ட, கொழும்பு வீதி (பகுதி), போபே வீதி, தாதெல்ல குறுக்கு வீதி, வெலிபிட்டிமோதர, சுதர்மாராம மாவத்தை, கோவில மாவத்தை, ஜின்தொட்ட, IDH வத்த மற்றும் கிளை வீதிகள்

3 **ஆகஸ்ட் 10 பி.ப. 4.00 முதல் பி.ப. 5.00 வரை**

அப்பர் டிக்சன் வீதி, லோவர் டிக்சன் வீதி (பகுதி), மகுளுவ புதிய ஒழுங்கை, வெல்சன்புர, சைனா கார்டன், வக்வெல்ல வீதி (பகுதி). தல்போர்ட் டவுன் 1ம் மற்றும் 2ம் ஒழுங்கைகள், பிரதான வீதி (பகுதி), ஒருப்புவத்த, ஒல்கட் மாவத்தை, காமினி மாவத்தை (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

4 **ஆகஸ்ட் 10 பி.ப. 4.00 முதல் பி.ப. 5.00 வரை**

காலி கோட்டை, பராவ வீதி, பட்லர் வீதி, வைத்தியசாலை வீதி, குயீன் வீதி, ரம்பார்ட் வீதி, லைட் ஹவுஸ் வீதி, குடா மோதர குறுக்கு வீதி, மத்திய வீதி, லன்பன் வீதி மற்றும் கிளை வீதிகள்

5 **ஆகஸ்ட் 26 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

காலி வீதியில் லைட் ஹவுஸ் ஹோட்டலிலிருந்து புகையிரத நிலையம் வரை, கலுவெல்ல, மல்வத்தை வீதி, ஜெயில் வீதி, டெம்பிளஸ் வீதி, மஹமோதர, ரிச்மன்ட் ஹில் வீதி (பகுதி), அபேசுந்தர வீதி, மஹமோதரவத்த, கந்தேவத்த வீதி, புத்தசிங்க வீதி, ஓசனாகொட (பகுதி), சியம்பலகஹவத்த மற்றும் கிளை வீதிகள்

#### ஹிக்கடுவ

1 **ஆகஸ்ட் 07 பி.ப. 2.00 முதல் பி.ப. 3.30 வரை**

காலி வீதியில் தொட்டகமுவ சந்தியிலிருந்து பஹியன் புத்தர் சிலை வரை, கலுபே, அலுத்வெல வீதி, நவகன்ன கொலனி வரை, சீனிகம டெம்பள் வீதி, மலவன்ன குறுக்கு வீதி, கலுபே வீதி, முனுகொட வீதி மற்றும் கிளை வீதிகள்

2 **ஆகஸ்ட் 29 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

காலி வீதியில் சுனில் பீச் ஹோட்டலிலிருந்து குமாரகந்த சந்தி வரை, கொஹுஅம்பே வீதி மற்றும் கிளை வீதிகள்

3 **ஆகஸ்ட் 29 பி.ப. 3.30 முதல் பி.ப. 5.00 வரை**

வேவலமில்ல வீதி, காலி வீதியில் சுனில் பீச் ஹோட்டலிலிருந்து கொரல் கார்டன் ஹோட்டல் வரை, நரிகம, வீ.சீ. வீதி, லீனவத்த, வேவல்கொட வீதி, பன்னன்கொட வீதி, மில்ல வீதி (பகுதி) மற்றும் கிளை வீதிகள்

#### அம்பலாங்கொட

1 **ஆகஸ்ட் 27 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

இடம்தொட, தேவகொட மத்திய வீதி, தேவகொட, மிஹிந்து மாவத்தை, பொன்னதுவ, அந்தரவத்த, வெல்லபொட, சுதுவெலிக்கட, குலீகொட வீதி, குலீகொட, மஹருப்ப, வளவ்வத்த, மாதம்பகம, வெனமுல்ல, மாதம்பே வீதி, திம்புல்துவ மற்றும் கிளை வீதிகள்

#### பயாகல

1 **ஆகஸ்ட் 07 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

காலி வீதியிலிரிந்து தளுவத்த சந்தி வரை, ஏத்தகமயிலிருந்து சுமனாராம வீதி புனித மரியா மாவத்தை, ஐயா மாவத்தை, நைனாவத்த, பயாகல வடக்கு புகையிரதநிலைய வீதி, கோல்டன் பிளேஸ், விஹாரகந்த, மலேகொட வீதி, சமுத்திரா மாவத்தை ஜனத்தா மாவத்தை, ஜனபிரிய மாவத்தை, புனித அந்தோணி வீதி, சாகர மாவத்தை, சுஹந்தரராச்சிமுள்ள, ஜனபிரபோத மாவத்த மற்றும் கிளை வீதிகள்

2 **ஆகஸ்ட் 07 பி.ப. 1.00 முதல் பி.ப. 5.00 வரை**

தொடர்பு:
**தினேஷ் - 0718 751 995**
**0711 624 559**

## சர்வதேச போட்டிரீதியான விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சுத்திகரிப்புப் பிரிவு)**

**பகிரங்க கேள்விமனு 4510T**

***A/C* நீர் குளிரூட்டல் இரசாயனப் பொருள் (*A/C WATER TREATMENT PROGRAM*)**

**வழங்கல் 2024-2026**

விலைமனு ஆவணத்தின் கீழ் தரப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளை உறுதி செய்த மேல் குறிப்பிடப்பட்ட வழங்கல்களுக்கான புகழ்பெற்ற உற்பத்தியாளர்கள், அவர்தம் அதிகாரம் பெற்ற வெளிநாட்டு ஏற்றுமதி முகவர்கள் அல்லது (உற்பத்தியாளர்களின் அல்லது ஏற்றுமதி முகவர்களின்) அவர்தம் அதிகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடம் இருந்து இலங்கை, களனி, சபுகஸ்கந்த. சுத்திகரிப்புப் பிரிவு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

விலைமனு ஒன்றை சமர்ப்பிக்கும் எந்த ஒரு விலைமனுதாரரும், 2024 ஓகஸ்ட் 26 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் 1500 மணிக்கு முன்னர் கொழும்பு – 09, டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இல. 609, இ.பெ.கூ. தலைமை அலுவலகம், 5ஆவது மாடி, காசாளருக்கு அல்லது களனி, சபுகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவு, காசாளருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றுடன் 1,000.00 ரூபா மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும் என்பதோடு கட்டணத்தை கேள்வி இலக்கம் மற்றும் விலைமனுதாரர் பெயரை சுருக்கமாக குறிப்பிட்டு 004100110208633 என்ற இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மக்கள் வங்கி கணக்கு இலக்கத்திற்கு ரொக்கப்பணத்தில் வைப்புச் செய்ய முடியும்.

கேள்விமனு நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்பினைக் கொண்ட விலைமனு ஆவணம் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com என்ற இணையதளங்களில் கிடைக்கப்பெறும்.

மாற்றாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் இருந்தும் விலைமனு ஆவணங்களை பெற முடியும்.

விலைமனுக்கள் 2024 ஓகஸ்ட் 28 ஆம் திகதி 1430 மணி வரை திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் ஏற்கப்படும் என்பதோடு அதன் பின்னர் சுத்திகரிப்பு மாநாட்டு அறையில் உடன் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருட்கள்)**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சபுகஸ்கந்த, களனி,**
**இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

## சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**

**117 வேன்கள் விற்பனைக்கு**

JY-6836 HYUNDAI GRACE 2000, VAN அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொலைபேசி. 0714542958. 049601

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

SG - GG-9205 - ISUZU ELF - MOTOR LORRY - 1996 - BLUE - கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 08 12-081033. 049513

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**பிரைலி அச்சகத்திற்கு அச்சடிக்கும் தாள்களின் கொள்வனவு – 2025**

(ஒப்பந்த இல.: **EPD/F08/06/2024**)

1. ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவத்தையுடைய தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பிரைலி அச்சகத்திற்காக அச்சடிக்கும் தாள்களை கொள்வனவு செய்வதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களில் அடக்கப்பட்டுள்ளன. எதிர்பார்க்கப்படும் ஒப்படைக்கும் காலப்பகுதியானது 06 இலிருந்து 08 வாரங்களாகும். அனைத்து விலைமனுக்களும் கீழே குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான விலைமனு உத்தரவாதமொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| விளக்கம் | விலைமனுப்பிணை |
|---|---|
| அச்சடிக்கும் தாள்கள் | 75,000.00 ரூபா |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையைப் பின்பற்றி நடத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கல்வி வெளியீட்டுத் திணைக்கள (தொலைபேசி: 011-2787515) நிதிப் பிரிவின் (6 ஆம் மாடி) பிரதான கணக்காளரிடமிருந்து பெற்று வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 2000 ரூபாவை செலுத்திய பின்னர், 2024 ஓகஸ்ட் 13 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
5. 2024 ஓகஸ்ட் 14 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பத்தரமுல்லை, 'இசுறுபாய', கல்வி வெளியீட்டுத் திணைக்கள 6 ஆம் மாடியின் நிதிக் கிளையில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அதன் பின்னர் உடனடியாகவே மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**கொள்வனவுக் குழுத் திணைக்களம்,**
**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,**
**நிதிக் கிளை (6 ஆம் மாடி),**
**''இசுருபாய'', பத்தரமுல்ல.**
**24.07.2024.**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

**விலைக்கோரலுக்கான அழைப்பு**

| ஒப்பந்தத்தின் பெயர் |
|---|
| பாண்டிருப்பு வெள்ளாவெளி வீதி மீது கொங்கிறீட் மேற்பரப்பை பயன்படுத்தி தற்போதுள்ள மேற்பரப்பை மேம்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் Ch (0+984 - 1+284)km |
| பாண்டிருப்பு வெள்ளாவெளி வீதி மீது கொங்கிறீட் மேற்பரப்பை பயன்படுத்தி தற்போதுள்ள மேற்பரப்பை மேம்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் Ch (1+284 - 1+434)km |
| திருகோணமலை புல்மோட்டை வீதி மீது அஸ்போல்ட் மேலடுக்கு மற்றும் அடித்தளத்தை நிர்மாணித்தல் (B424) (54+360- 54+920) km |
| திருகோணமலை புல்மோட்டை வீதியில் Built Up Drain நிர்மாணித்தல் (B424) (4+500- 5+000) km |
| முல்லிபொத்தானை சூரன்கல் வீதியை மேம்படுத்துதல் (B618) (6+530-6+980) km |
| முல்லிபொத்தானை சூரன்கல் வீதி மீது அஸ்போல்ட் மேலடுக்கு மற்றும் அடித்தளத்தை நிர்மாணித்தல் (B618) (1+000- 1+550) km |

மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-07-25ஆம் திகதி முதல் 2024-08-02 திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**மாகாண பெறுகைக் குழு (கி.மா),**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**மட்டக்களப்பு.**

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 39(அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2021, பெப்ரவரி மாதம் 17 ஆந் திகதிய 2215/24 ஆம் இலக்க, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்பவாக்கம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கக் கட்டளையில் குறிப்பிட்ட காணித் துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் காணித்துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ள. எனினும் அச் சட்டத்தின் (1979ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39(அ) ஆம் பிரிவின் (I) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்துநீக்குகின்றேன்.

**ஹரின் பெர்னாண்டோ,**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்**

**எனது இல. : 4-3/8/2020/UDA/251**
**காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல :** ශ්‍රීජපුර/ඉඅ/82/UDA
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,**
**"மிஹிகதமெதுர", காணிச் செயலகம்,**
**இல. 1200//6**
**ரஜமல்வத்தை வீதி,**
**பத்தரமுல்லை**
**2024. மே 28**

**அட்டவணை**

மேல்மாகாணம், கொழும்பு மாவட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 514 B, ராஜகிரிய கிராம அலுவலர் பிரிவில் வெலிகட (ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட Co/KTT/2020/609, 2021.02.01 ஆந் திகதிய வரைபடத்தில் விபரமாகக் காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டின் எல்லைகள்

01. **துண்டு இல. 1 - வரிமதிப்பீட்டு இல. 300, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை - விஸ்தீரணம் 1.0012 ஹெக்டயார்**

வடக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தையின் வரிமதிப்பீட்டு இல. 294 ஐக் கொண்ட காணி மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை தெற்கு கோட்டேகால்வாய், சீமெந்து வடிகால் மற்றும் துண்டு

இல.2; மேற்கு சீமெந்துவடிகால், துண்டு இல. 2 மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தையின் வரிமதிப்பீட்டு இல. 294 ஐக் கொண்டகாண்.

02. **துண்டு இல.1 - 1 வரிமதிப்பீட்டு இல. 953/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை - விஸ்தீரணம் 0.1336 ஹெக்டயார்.**

வடக்கு ரோயல்கார்டன் வீதி, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தையின் இல.1 - கிழக்கு ; ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தையின் வரிமதிப்பீட்டு இல. 294 ஐக் கொண்ட காணி மற்றும் துண்டு இல. 1 ; தெற்கு; துண்டு

இல. 2 மற்றும் சீமெந்து வடிகால் ; மேற்கு ; ரோயல்கார்டன் வீதி

## இலங்கை மக்களிடம் மன்னிப்புக்கோரல்

டேசிமவுன்ட் தோட்டம், பிலெஸ்ஸ வில் அமைந்துள்ள ஹோட்டலின் உரிமையாளரான **அநுர லக்ஸ்மன் தயாரத்ன** ஆகிய நான் மேற்படி ஹோட்டலில் துப்புரவு செயற்பாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் நிலைமையின் கீழ் ஹோட்டலை நடத்திச் செல்லல், பொதுமக்கள் சுகாதாரத்திற்கு பாதிக்கும் வகையில் உணவு களஞ்சியப்படுத்தல், மருத்துவ பரிசீலனை அறிக்கையின்றி ஊழியர்களைச் சேவையில் ஈடுபடுத்தல், அதிகாரமுள்ள அதிகாரியினால் உணவு மாசடைதலைத் தடுப்பதற்கு வழங்கியுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றாமை போன்ற குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக பிலெஸ்ஸ நீதவான் நீதிமன்றத்தின் பி.லெ/மஹெ/அதி வழக்கு இல. 1404/2024/PHI இன் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டுக்களுக்கு குற்றத்தை ஏற்றுக்கொண்டதனால் கௌரவ நீதிமன்றம் 2024.06.25ம் திகதி எனக்கு ரூபா பத்தாயிரம் (ரூ. 10,000/=), ரூபா பத்தாயிரம் (ரூ. 10,000/=), ரூபா பத்தாயிரம் (ரூ. 10,000/=), ரூபா பத்தாயிரம் (ரூ. 10,000/=), முறையே தண்டத்தொகை விதிக்கப்பட்டதாக பொதுமக்களுக்கு அறிவித்துக்கொள்கிறேன்

**மாவட்ட செயலகம் - பதுளை**

## பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கெப் வாகனத்தை விற்பனை செய்தல்

பதுளை மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான விபத்திற்கு உள்ளாகி பாவனையிலிருந்து அகற்றப்பட்ட இல.250 - 2069 என்ற நிசான் டபிள் கெப் வாகனத்தை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. 2024.07.24 முதல் 2024.08.07 ந.ப. 12.00 வரை மாவட்ட செயலக கட்டிடத்தொகுதியின் 03ம் மாடியில் அமைந்துள்ள நிதி முகாமைத்துவப் பிரிவில் மீளளிக்கப்படாத ரூ.1000.00 தொகையைச் செலுத்தி கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

03. கேள்விகள் திறத்தல் 2024.08.07 பி.ப. 3.00 இற்கு மாவட்ட செயலக கட்டிடத்தொகுதியின் ஐந்தாம் மாடியில் அமைந்துள்ள மாவட்ட செயலாளர் உத்தியோகபூர்வ கலந்துரையாடல் அறையில் நடைபெறும்.

04. மேலதிக விபரங்களை தொ.பே.இல. 055 - 2222048 மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலகம் - பதுளை**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### அநுராதபுர மாநகர சபை அநுராதபுரம்

### அநுராதபுரத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள மலர்ச்சாலையின் (நிசல நிம்னய) நிர்மாணம்

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் 60மில்லியன் இலங்கை ரூபாவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் அநுராதபுரத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள மலர்ச்சாலையை (நிசல நிம்னய) நிர்மாணிப்பதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அநுராதபுர, அநுராதபுர மாநகர சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார். நிர்மாணக் காலப்பகுதியானது 360 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் கட்டிட நிர்மாண ஒப்பந்தக்காரர் விஷேடத்துவத்தில் சி-4 அல்லது மேற்பட்ட CIDA பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தகவலானது விலைமனுக்கோரல் ஆவணத்தின் 04 ஆம் பிரிவிலும் 05 ஆம் பிரிவிலுள்ள அட்டவணையிலும் வழங்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை அநுராதபுரம், மாநகர சபை, மாநகர ஆணையாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 0252222275. மின்னஞ்சல்: planning2020@gmail.com)
6. 2024.07.29 ஆம் திகதியிலிருந்து 2024.08.20 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 5000 ரூபாவை செலுத்திய பின்னர், அநுராதபுர மாநகர சபை மாநகர நிதித் திணைக்கள கணக்காளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்முதல் செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2024.08.21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. 2024.08.14 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அநுராதபுர மாநகர சபையின் கேட்போர் கூடத்தில் அனைத்து விலைமனுதாரர்களுக்குமாக நடைபெறும். (எந்தவொரு மேலதிக விபரங்களுக்கும் 0255555575 என்ற இலக்கத்தினூடாக மாநகர சபையின் நிதிக் கிளையுடன் தொடர்பு கொள்ளவும்)
9. விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. அனைத்து விலைமனுக்களும் 750,000 இலங்கை ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2024.12.11 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**மாநகர ஆணையாளர்,**
**அநுராதபுர மாநகர சபை,**
**அநுராதபுரம்.**




* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch
Acc. No. 000000377



# இந்திய தொடரில் துஷ்மந்த நீக்கம்

இந்தியாவுக்கு எதிரான இலங்கையின் டி20 குழாத்தில் சேர்க்கப்பட்டிருந்த வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர உபாதை காரணமாக நீக்கப்பட்டுள்ளார். அவர் இந்தியாவுக்கு எதிரான தொடர் முழுவதிலும் பங்கேற்க மாட்டார் என்று இலங்கை அணி தேர்வுக் குழுத் தலைவர் உபுல் தரங்க குறிப்பிட்டார்.

இலங்கை கிரிக்கெட் சபை தலைமையகத்தில் நேற்று (24) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே தரங்க இதனைத் தெரிவித்தார். 'சமீரவின் மருத்துவ அறிக்கை எமக்கு நேற்றுத் தான் கிடைத்தது. எதிர்வரும் இந்தியாவுக்கு எதிரான தொடரில் அவரால் விளையாட முடியாதுள்ளது. அவருக்கு மாற்று வீரர் ஒருவர் பற்றிய விபரத்தை நாம் எதிர்காலத்தில் தெரிவிப்போம்' என்று உபுல் தரங்க தெரிவித்தார்.

துஷ்மந்த சமீர நடந்து முடிந்த லங்கா பிரீமியர் லீக் தொடரின் இறுதிப் போட்டிகளில் உபாதை காரணமாக ஆடவில்லை. இதனை அடுத்தே அவர் இந்தியாவுக்கு எதிரான டி20 மற்றும் ஒருநாள் தொடர்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.



படம்: சுதத் மலவீர

அடிக்கடிக்கு உபாதைக்கு உள்ளாகி வரும் சமீர கடந்த ஆண்டு நடைபெற்ற ஒருநாள் உலகக் கிண்ணத்திலும் காயத்தால் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சமீரவுக்கு பதில் வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோ 16 பேர் கொண்ட இலங்கை அணியில் இணைக்கப்பட வாய்ப்பு இருப்பதாக தெரியவருகிறது.

இலங்கை அணி இந்தியாவுக்கு எதிராக தலா மூன்று டி20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் ஆடவுள்ளது. இந்தப் போட்டிகள் எதிர்வரும் ஜூலை 27 ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் 07 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை அணி இந்தியாவுக்கு எதிராக கடைசியாக ஆடிய இரு போட்டிகளிலும் நூறுக்கும் குறைவான ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்து தோல்வியை சந்தித்த நிலையில் எதிர்வரும் தொடரில் இலங்கை அணியின் திட்டம் பற்றி இடைக்காலப் பயிற்சியாளர் சனத் ஜனசூரிய நேற்று நடந்த ஊடக சந்திப்பில் கூறியதாவது,

'எமது வீரர்கள் கிரிக்கெட் விளையாடிய அனுபவம் பெற்றவர்கள். அதனைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தால் எம்மால் ஒரு போதும் அதில் இருந்து மீண்டு வர முடியாது. கடந்த காலத்தில் நாம் சந்தித்த மோசமான தோல்விகள் பற்றி நான் அவர்களுடன் பேசவில்லை. அதனை பற்றி மறந்து நானும் அதனை மறக்கும் வகையிலேயே பயிற்சிகளை நடத்தி வருகிறேன்.

எனவே, நாம் எமது நாட்டில் எமது ஆடுகளத்தில் விளையாடும் நிலையில் கடந்த காலத்தை மறந்து திறமையை வெளிப்படுத்தும்படியே நான் வீரர்களுக்கு கூறி வருகிறேன்' என்றார்.

# விவேகன்ஸ் பிரீமியர் லீக்கில் சம்பியனானது நைட் ரைடர்ஸ்



கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடுசெய்த Kish விவேகன்ஸ் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் தெமட்டகொடை நைட் ரைடர்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

கொழும்பு மூவர்ஸ் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் மொத்த 21 அணிகள் பங்கேற்றிருந்தன. இதன் இறுதிப் போட்டியில் எலக்கந்த ஜேடி போய்ஸ் அணியை எதிர்கொண்ட நைட் ரைடர்ஸ் அணி 27 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாகவும், தொடரின் சிறந்த வீரராகவும் தெமட்டகொடை நைட் ரைடர்ஸ் அணியின் ஆர். வேலுசாமி தெரிவானார். சிறந்த துடுப்பாட்ட வீரராக ஜேடி போய்ஸ் அணியின் டி. விக்னேஸும் சிறந்த பந்துவீச்சாளராக ரட்ணம் செலஞ்சர்ஸ் அணியின் அஜித்தும் தெரிவாகினர்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஈஸ்வரன் பிரதர்ஸ் தலைவர் கணேஷன் தெய்வநாயகம் தெமட்டகொடை நைட் ரைடர்ஸ் அணிக்கு சம்பியன் கிண்ணத்தையும் ஒரு இலட்சம் ரூபா பணப் பரிசையும் வழங்கினார்.

# பாரிஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்க இலங்கை மெய்வல்லுனர் பயணம்



பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்காக ஈட்டி எறிதல் வீராங்கனை டில்ஹானி லேகம்கே தலைமையிலான இலங்கை மெய்வல்லுனர் குழாம் நேற்று (24) பிரான்ஸ் பயணமாகியது.

33ஆவது ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் ஜூலை 26 ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் 11 ஆம் திகதி வரை பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்கும் இலங்கை குழாத்தில் மூன்று மெய்வல்லுனர், இரு நீச்சல் மற்றும் ஒரு பூப்பந்து வீர, வீராங்கனைகள் இடம்பெற்றுள்ளனர்.

இதில் பூப்பந்து வீரர் விரேன் நெத்தசிங்க மற்றும் நீச்சல் போட்டிகளில் பங்கேற்கும் கைல் அபேசிங்க மற்றும் கங்கா செனவிரத்ன ஆகியோர் ஏற்கனவே தமது பயிற்சியாளர்களுடன் பாரிஸ் சென்றுள்ளனர். இந்நிலையில் இலங்கை மெய்வல்லுனர்களில் டில்ஹானி லேகம்கே (பெண்களுக்கான ஈட்டி எறிதல்), தருஷி கருணாரத்ன (பெண்களுக்கான 800 மீ.) மற்றும் அருண தர்ஷனவுடன் (ஆண்களுக்கான 400 மீ.) அவர்களின் பயிற்சியாளர்களான பிரதீப் நிஷாந்த, சுசந்த பெர்னாண்டோ மற்றும் அசங்க ராஜகருணா ஆகியோரே நேற்று பிரான்ஸ் பயணமாகினர்.

தமது போட்டி நிகழ்ச்சிகளில் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறுவதே இலங்கையின் பிரதான இலக்காக உள்ளது என்று இந்த தடகள வீரர்களின் பயிற்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பாரிஸ் ஒலிம்பிக் மெய்வல்லுனர் போட்டிகள் எதிர்வரும் ஒகஸ்ட் 1 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

## சர்வதேச செய்திகள்

# தொடர்ந்து இரு நாட்களில் உலகின் சாதனை வெப்பம்



உலகின் அதிக வெப்பமான தினம் என்ற சாதனை அடுத்தடுத்து இரண்டாவது நாளாக கடந்த ஜுலை 22 ஆம் திகதி முறியடிக்கப்பட்டிருப்பதாக ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பு நிறுவனத்தின் ஆரம்பக் கட்ட தரவுகள் காண்பிக்கின்றன. உலகின் அதிக வெப்பமான காலநிலை ஜுலை 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பதிவானதாக கொப்பனிகஸ் காலநிலை மாற்ற சேவை அறிவித்திருந்தது. எனினும் அதற்கு அடுத்த தினத்தில் அதனை விடவும் 0.06 பாகை அதிகமாக உலகளாவிய சராசரி மேற்பரப்பு காற்று வெப்பநிலை 17.15 பாகை செல்சியஸ் பதிவாகியுள்ளது.

இந்த சாதனை 2023 ஜுலையில் தொடர்ந்து நான்கு நாட்கள் முறியடிக்கப்பட்டதோடு அதற்கு முன்னர் 2016 ஒகஸ்ட் மாதத்திலேயே உலகின் அதிக வெப்பமான தினம் பதிவாகி இருந்தது. அண்மைய நாட்களில் ஜப்பான், இந்தோனேசியா மற்றும் சீன நகரங்களில் சாதனை அளவு வெப்பம் பதிவாகி இருந்தது. வளைகுடா நாடுகளில் வெப்பம் புதிய உச்சத்தை தொட்டதோடு ஐரோப்பாவின் சில பகுதிகளில் வெப்பநிலை 45 பாகை செல்சியஸை விஞ்சி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நேபாளத்தில் சிறிய விமானம் விபத்துக்குள்ளாகி 18 பேர் பலி



நேபாளத் தலைநகர் காத்மாண்டுவில், சிறிய விமானம் ஒன்று புறப்பட்டபோது விபத்துக்குள்ளாகி தீப்பிடித்ததில் விமானத்தில் இருந்த 18 பேர் பலியாகியுள்ளனர்.

இந்த விபத்தில் விமானி மாத்திரம் உயிர் தப்பி இருப்பதோடு அவர் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

காத்மாண்டுவில் உள்ள திரிபுவன் விமான நிலையத்தில் இருந்து, பிரபல சுற்றுலா தளமான போகராவுக்கு புறப்பட்ட சவுர்யா ஏர்லைன்ஸ் விமானத்தில் 19 பேர் இருந்தனர்.

தீப்பற்றிய பின்னர், விமானம் கணிசமான அளவு கரும்புகையை வெளியிட்டதாகக் கூறப்பட்டது.

விமான பாதுகாப்பு விவகாரத்தில் மிகவும் மோசமாக நடந்து கொள்வதாக நேபாளத்தின் மீது அடிக்கடி விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு, ஜனவரி மாதம் யேத்தி ஏர்லைனிஸில் பயணித்த 72 பேர் விமான விபத்தில் சிக்கி உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. விசாரணை முடிவில், விமானிகள் தவறுதலாக மின்சார இணைப்பை துண்டித்ததன் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டது என்பது தெரிய வந்தது.

கொரிய பதற்றம்:

# தெற்கின் ஜனாதிபதி வளாகத்தில் விழுந்த வடக்கின் குப்பை பலூன்



வட கொரியா அனுப்பிய குப்பைகளைச் சுமந்த பலூன்கள் தென் கொரிய தலைநகர் சோலில் அந்நாட்டு ஜனாதிபதி அலுவலக வளாகத்திற்குள் விழுந்துள்ளன.

விமானங்கள் பறக்கத் தடை வலயத்தில் உள்ள தென் கொரியத் தலைவரின் அலுவலகத்தில் இந்த பலூன்கள் விழுந்திருப்பது இது முதல்முறையாகும்.

இந்த பலூன்களை சேர்க்க இரசாயன, உயிரியல் மற்றும் கதிரியக்க நடவடிக்கை குழு ஒன்று அமர்த்தப்பட்டிருப்பதாக ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை தெரிவித்துள்ளது. எனினும் மாசுப் பொருட்கள் அல்லது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று அது தெரிவித்துள்ளது.

இந்த பலூன்களில் இருப்பவை மேலும் பரவக்கூடும் என்பதால் இராணுவத்தினர் அதனை சுடவில்லை என்று உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்வாறான குப்பை பலூன்கள் சோல் நகரின் ஏனைய பகுதிகளில் விழுந்துள்ளன. அவைகளை அணுகுவதை தவிர்த்துவரும் குடியிருப்பாளர்கள் அது தொடர்பில் அருகில் இருக்கும் இராணுவ பிரிவு அல்லது பொலிஸ் நிலையத்திற்கு முறையிட்டு வருகின்றனர்.

1950களில் கொரியப் போர் ஆரம்பித்தது தொடக்கம் வட மற்றும் தென் கொரியா தமது பிரசார நடவடிக்கைகளுக்கு பலூன்களை பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# காசாவின் கான் யூனிஸில் இஸ்ரேல் பயங்கர தாக்குதல்: 150,000 பேர் வரை வெளியேற்றம்

## வொசிங்டனில் நெதன்யாகுவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

காசாவின் தெற்கு நகரான கான் யூனிஸ் மீதான இஸ்ரேலின் புதிய படை நடவடிக்கையில் இதுவரை 120க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு புதிய வெளியேற்ற உத்தரவினால் 150,000 பேர் வரை வெளியேறிச் சென்றுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை சுமார் 90 பேர் வரை கொல்லப்பட்டு கான் யூனிஸில் அதிக உயிரிழப்புகள் பதிவானதோடு அங்கு பலஸ்தீன போராளிகளோடு உக்கிர மோதல் நீடித்து வருகிறது.

ஹமாஸ் போராளிகள் மீண்டும் ஒருங்கிணைவதாகக் கூறியே கான் யூனிஸில் இஸ்ரேல் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் கான் யூனிஸில் இருந்து 150,000 பேர் வெளியேறி இருப்பதாக ஐ.நா. குறிப்பிட்டுள்ளது. 'காசாவில் 80 வீதத்துக்கும் அதிகமான பகுதி தற்போது இஸ்ரேல் இராணுவத்தின் வெளியேற்ற உத்தரவுக்கு அல்லது மக்கள் செல்லத் தடை விதிக்கப்பட்ட பகுதியாக உள்ளது' என்று பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய டாங்கிகள் நகருக்குள் முன்னேறி வரும் நிலையில் சில குடியிருப்பாளர்கள் கான் யூனிஸின் கிழக்கு பகுதியில் உள்ள இடம்பெயர்வு முகாம்களுக்கு தப்பிச் செல்ல முயன்றதோடு மேலும் சிலர் மருத்துவமனைகளில் அடைக்கலம் தேடி குவிந்துள்ளனர். பானி சுஹைல் பகுதியைச் சேர்ந்த 37 வயது அபாஹ் அப்துல் கபூர் நாசர் மருத்துவமனையில் அடைக்கலம் பெற்றுள்ளார்.

'(போர் ஆரம்பித்த) ஒக்டோபர் 7 தொடக்கம் நான் 12 தடவைகள் இடம்பெயர்ந்துள்ளேன். நாம் எமது வாழ் நாளில் கடினமான இரவில் இருக்கிறோம். குண்டுவெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் ஒரு நொடி கூட நிற்பதில்லை. நேற்று போர் ஆரம்பித்தது போல் அது இருக்கிறது' என்று அவர் பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு குறிப்பிட்டுள்ளார்.

காசாவின் மற்ற பகுதிகளிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் 292 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. வடக்கு காசாவில் அல் ஜார்ன் பகுதியில் வீடு ஒன்றின் மீது நேற்றுக் காலை இடம்பெற்ற வான் தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்தது.

மத்திய காசா மற்றும் எகிப்து எல்லையை ஒட்டிய தெற்கு முனை நகரான ரபாவிலும் இஸ்ரேல் பிரங்கி மற்றும் வான் தாக்குதல்களை நடத்தியதாக அங்கிருந்த வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 55 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 110 பேர் காயமடைந்ததாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 39,145 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 90,257 பேர் காயமடைந்துள்ளனர்.

காசா கழிவு நீரில் போலியோ வைரஸ் தொற்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் நிலையில் அங்கு அந்த நோய்ப் பாதிப்பு ஏற்படுவதற்காக வாய்ப்பு கடுமையாக இருப்பதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்திருக்கும் சூழலிலேயே இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை அமெரிக்க பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்காக வொசிங்டன் சென்றிருக்கும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகும் அங்கு கடும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை சந்தித்து வருகிறார். இதில் அமெரிக்க பிரதிநிதிகள் சபை அலுவலக கட்டடத்தில் இடம்பெற்ற ஆர்ப்பட்டத்தில் பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அமைதிக்கான யூதர்களின் குரல் என்ற அமைப்பு ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில், 'எமது பெயரால் வேண்டாம்' என்று எழுதப்பட்ட சிவப்பு நிற டீசேர்ட் அணிந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், குறித்த அலுவலத்தை சூழ்ந்துகொண்டு அங்கேயே அமர்ந்து 'காசாவை வாழவிடு' என்று கோசமெழுப்பினர்.

சர்வதேச நீதிமன்றத்தின் பிடியாணையை எதிர்கொண்டிருக்கும் நெதன்யாகு நேற்று அமெரிக்க பாராளுமன்றத்தில் உரையாற்றியதோடு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜுலை மாதம் 25ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# இலங்கை வங்கி வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்

## கைவிடப்பட்ட சொத்துக்கள்

- வங்கியியல் சட்டத்தின்படி பிரிவு 72க்கமைய வங்கியிலிருக்கும் வாடிக்கையாளர்களின் கணக்குகளும் உருப்படிகளும் பின்வரும் இரண்டு பிரிவுகளாக கைவிடப்பட்ட சொத்துக்களில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன.
  - ✓ பத்துவருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு எத்தகைய செயற்பாடுமின்றி காணப்படும் வங்கிக் கணக்குகளிலுள்ள பணம் அல்லது ஏனைய பண வைப்புக்கள்
  - ✓ வாடகைக்காலம் முடிவடைந்தது பற்றிய அறிவித்தல் கொடுத்தும் மூன்றுவருட காலத்தினுள் எத்தகைய பதிலையும் வழங்கத்தவறிய வாடிக்கையாளர்களது, பத்துவருடங்களாக செயற்பாடின்றி காணப்படும் வங்கிகளிலுள்ள பாதுகாப்பு பெட்டகங்களில் உள்ளடக்கப்பட்டிருப்பவைகள்.
- வங்கியியல் சட்டத்தின் பிரிவு 73(1)ன் கீழ் கோரப்பட்டவாறு இவ் வங்கியால் கைவிடப்பட்ட சொத்து என வகைப்படுத்தப்பட்டதும் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்பட்டதுமான வாடிக்கையாளர்களின் கணக்குகள் உருப்படிகள் தொடர்பான தகவல்களை கீழே குறிப்பிடுகின்றோம்.
- கீழே நிரற்படுத்தப்பட்டுள்ள எவையேனும் கிளைகளில் தமது கைவிடப்பட்ட சொத்து உண்டு என நம்பும் யாரேனும் வாடிக்கையாளர்கள் சம்பந்தப்பட்ட கிளையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
- வாடிக்கையாளர் ஒருவர் அவ்வாறான கணக்குகளுக்கு வைப்பொன்றினை மேற்கொள்வதன் மூலமோ அல்லது மீளப்பெறுதலை மேற்கொள்வதன் மூலமோ, முகவரி மாற்றம் பற்றி அறிவிப்பதன் மூலமோ, அல்லது செயற்படும் சொத்தாக மீள்வகைப்படுத்தும்படி வங்கியைக் கோரும் கடிதம் போன்ற ஏதாவது எழுத்து மூலமான தொடர்பாடல்கள் மூலமாகவோ, அல்லது வங்கிக் கணக்கு புத்தகத்தை சமர்ப்பித்து பதிவுகளை உரியபடி இற்றைப்படுத்தியும், மற்றும் பாதுகாப்பு பெட்டகங்களைப் பொறுத்தவரை அதற்குரிய வாடகை நிலுவையினைச் செலுத்துவதன் மூலமும் அத்தகைய சொத்தினை மீளச் செயற்படுத்திக் கொள்ளலாம்.
- கைவிடப்பட்ட சொத்து என வகைப்படுத்தப்பட்ட, வாடிக்கையாளர்களின் கணக்குகள் உருப்படிகள் தொடர்பான தனிப்பட்ட விபரங்கள் கைவிடப்பட்ட சொத்துக்களின் பாதுகாப்பிற்காகவும் மற்றும் உரித்தற்றவர்கள் அவற்றிற்கு உரிமை கோரக்கூடும் என்பதாலும் அவை பிரசுரிக்கப்படமாட்டாது.
- கைவிடப்பட்டது என அறிவிக்கப்பட்ட சொத்துக்களின் உடைமையாளர்களான எல்லா வாடிக்கையாளர்களுக்கும் அவை பற்றிய விபரங்களைக் குறிப்பிட்டு அறிவுறுத்தல்களையும் வழங்கி வாடிக்கையாளரின் இறுதியாக அறிந்து கொண்ட முகவரிக்கு வங்கி தனியான அறிவித்தலொன்றை ஏற்கனவே அனுப்பிவைத்துள்ளது.

| இல | கிளைக் குறியீடு | கிளை | தொலைபேசி இல. | கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 448 | அட்டாளைச்சேனை | 067-2279303 | 16 |
| 2 | 657 | அகலவத்த | 034-2243980 | 36 |
| 3 | 774 | அங்குணகொலபெலெஸ்ஸ | 047-2229120 | 02 |
| 4 | 276 | அஹுங்கம | 091-2283977 | 11 |
| 5 | 754 | அகுங்கல்ல | 091-2264107 | 7 |
| 6 | 590 | அக்கரைப்பற்று | 067-2279242 | 30 |
| 7 | 613 | அகுரஸ்ஸ | 041-4922380 | 53 |
| 8 | 449 | ஆலங்கேணி | 026-2236500 | 6 |
| 9 | 498 | அலவ்வ | 037-2278032 | 34 |
| 10 | 680 | அளுத்கம | 034-2271413 | 14 |
| 11 | 47 | அம்பலாங்கொடை | 091-2256307 | 46 |
| 12 | 537 | அம்பலாந்தோட்டை | 047-2223180 | 66 |
| 13 | 329 | அம்பன்பொல | 037-2254099 | 4 |
| 14 | 21 | அம்பாறை | 063-2222981 | 20 |
| 15 | 330 | ஆனவிலுந்தாவ | 032-2259050 | 7 |
| 16 | 494 | ஆண்டியம்பலம | 011-2258184 | 1 |
| 17 | 490 | அங்கும்புர | 066-2240399 | 1 |
| 18 | 22 | அநுராதபுரம் மேற்தரக் கிளை | 025-4580974 | 7 |
| 19 | 551 | அநுராதபுரம் பஸார் | 025-2225932 | 25 |
| 20 | 98 | அநுராதபுரம் புதிய நகரக் கிளை | 025-2050737 | 128 |
| 21 | 599 | அரலகங்வில | 027-2257135 | 45 |
| 22 | 566 | அரநாயக்க | 035-2258102 | 4 |
| 23 | 778 | அச்சுவேலி | 021-2058011 | 6 |
| 24 | 530 | அவிசாவளை | 036-2233423 | 10 |
| 25 | 401 | அயகம | 045-2250088 | 13 |
| 26 | 540 | படல்கும்புர | 055-2250279 | 59 |
| 27 | 525 | பத்தேகம | 091-3093255 | 11 |
| 28 | 11 | பதுளை | 055-2222980 | 52 |
| 29 | 662 | பதுரலிய | 034-2244167 | 30 |
| 30 | 652 | பகமுன | 066-2256580 | 31 |
| 31 | 688 | பலாங்கொடை | 045-2289390 | 275 |
| 32 | 320 | பல்லகட்டுவ | 055-2285160 | 17 |
| 33 | 37 | பம்பலப்பிட்டி | 011-2583350 | 13 |
| 34 | 665 | பண்டாரகம | 038-4290079 | 8 |
| 35 | 515 | பண்டாரவளை | 057-2230014 | 30 |
| 36 | 522 | பட்டபொல | 091-2260405 | 7 |
| 37 | 679 | பத்தரமுல்லை | 011-2877646 | 24 |
| 38 | 12 | மட்டக்களப்பு | 065-2227410 | 16 |
| 39 | 708 | பட்டுவத்தை | 011-2960892 | 7 |
| 40 | 539 | பெலியத்த | 047-2251780 | 67 |
| 41 | 58 | பேருவளை | 034-2279899 | 5 |
| 42 | 579 | பிபிலை | 055-2265480 | 23 |
| 43 | 554 | பிங்கிரிய | 032-2246999 | 6 |
| 44 | 732 | பியகம | 011-2468617 | 26 |
| 45 | 699 | போகஹகும்புர | 057-2280088 | 2 |
| 46 | 491 | பொகவந்தலாவ | 052-2267599 | 9 |
| 47 | 464 | BOI பல்லேகல | 081-2052219 | 1 |
| 48 | 465 | பொக்காவல | 081-2461056 | 10 |
| 49 | 38 | பொரளை மேற்தரக் கிளை | 011-2694701 | 93 |
| 50 | 311 | புலத்கொஹுப்பிட்டிய | 036-2247780 | 2 |
| 51 | 673 | புலத்சிங்கள | 034-2282111 | 17 |
| 52 | 560 | புத்தள | 055-2273980 | 5 |
| 53 | 15 | மத்திய அலுவலகம் | 011-2203940 | 2 |
| 54 | 573 | மத்திய பஸ் தரிப்பு நிலையம் | 011-5385118 | 10 |
| 55 | 792 | சங்கானை | 021-2250015 | 4 |
| 56 | 501 | சாவகச்சேரி | 021-2270060 | 98 |
| 57 | 382 | செட்டிக்குளம் | 024-2260017 | 31 |
| 58 | 630 | செங்கலடி | 065-2240492 | 30 |
| 59 | 20 | சிலாபம் | 032-2222335 | 46 |
| 60 | 436 | சீனக்குடா | 026-2242327 | 5 |
| 61 | 53 | சுண்ணாகம் | 021-2242495 | 42 |
| 62 | 1 | நகர அலுவலகம் | 011-2438457 | 31 |
| 63 | 672 | கொழும்பு தங்க மையம் | 011-5357573 | 5 |
| 64 | 660 | தொகுதிக் கிளை | 011-2345428 | 27 |
| 65 | 715 | தலுகம | 011-2909929 | 30 |
| 66 | 331 | தம்பதெனிய | 037-2266144 | 8 |
| 67 | 576 | தம்புல்லை | 066-2285270 | 7 |
| 68 | 497 | தங்கொட்டுவ | 031-2261265 | 31 |
| 69 | 466 | தந்துரே | 081-2575228 | 6 |
| 70 | 686 | தெஹியத்தகண்டி | 027-2250487 | 12 |
| 71 | 634 | தெஹியோவிட்ட | 036-2262030 | 3 |
| 72 | 51 | தெஹிவளை மேற்தரக் கிளை | 011-2712075 | 50 |
| 73 | 717 | தெமன்ஹந்திய | 031-2228730 | 6 |
| 74 | 561 | தெமட்டகொட | 011-2684170 | 12 |
| 75 | 528 | தெனியாய | 041-2273870 | 25 |
| 76 | 642 | தெரணியகல | 036-2249199 | 23 |
| 77 | 592 | திக்வெல்ல | 041-2257128 | 6 |
| 78 | 273 | திகன | 081-2374376 | 18 |
| 79 | 433 | திவுலபிட்டி | 031-4921640 | 10 |
| 80 | 389 | தியசென்புர | 027-2248061 | 8 |
| 81 | 260 | தியத்தலாவை | 057-3580181 | 3 |
| 82 | 293 | தொடங்கொடை | 034-2281628 | 73 |
| 83 | 580 | தும்மலசூரிய | 032-3021383 | 15 |
| 84 | 701 | எல்ல | 057-2228899 | 20 |
| 85 | 619 | எல்பிட்டிய | 091-4387524 | 47 |
| 86 | 535 | எம்பிலிபிட்டி | 047-2230980 | 97 |
| 87 | 313 | எந்தான | 045-2050640 | 32 |
| 88 | 674 | என்டேரமுல்ல | 011-2937240 | 28 |
| 89 | 790 | ஏறாவூர் | 065-2241012 | 20 |
| 90 | 476 | எட்டம்பிட்டிய | 055-2294080 | 8 |
| 91 | 60 | 5ம் நகரக் கிளை | 011-2438457 | 44 |
| 92 | 101 | கலஹா | 081-7223488 | 12 |
| 93 | 391 | கலமுன | 027-2245990 | 6 |
| 94 | 122 | கலென்பிந்துனுவெவ | 025-2258031 | 8 |
| 95 | 549 | கல்கமுவ | 037-2253533 | 4 |
| 96 | 653 | கல்கிரியாகம | 025-2052850 | 18 |
| 97 | 3 | காலி மேற்தரக் கிளை | 091-4933120 | 23 |
| 98 | 89 | காலி நகரக் கிளை | 091-2227804 | 51 |
| 99 | 514 | கல்னேவ | 025-3855484 | 28 |
| 100 | 45 | கம்பஹா மேற்தரக் கிளை | 033-2234404 | 49 |
| 101 | 575 | கம்பளை | 081-2350108 | 97 |
| 102 | 470 | கம்பளை நகரம் | 081-2354214 | 3 |
| 103 | 524 | கெலிஓயா | 081-2314777 | 2 |
| 104 | 392 | அநுராதபுரம் வைத்தியசாலை | 025-3778400 | 3 |
| 105 | 669 | கிராந்துருக்கோட்டே | 027-2254380 | 130 |
| 106 | 553 | கிரியுல்ல | 037-2288082 | 25 |
| 107 | 786 | கொடகவெல | 045-2240085 | 3 |
| 108 | 438 | கொனாகொல்ல | 063-2050806 | 8 |
| 109 | 721 | கொதட்டுவ புதிய நகரக் கிளை | 011-2411018 | 11 |
| 110 | 628 | கிரான்ட்பாஸ் | 011-2448202 | 28 |
| 111 | 393 | ஹபரணை | 066-2270048 | 8 |
| 112 | 691 | ஹக்மன | 041-2286280 | 39 |
| 113 | 463 | ஹல்துமுல்ல | 057-2050202 | 2 |
| 114 | 785 | ஹாலி-எல | 055-2295080 | 10 |
| 115 | 85 | அம்பாந்தோட்டை | 047-2220180 | 3 |
| 116 | 741 | ஹன்வெல்ல | 036-2253520 | 5 |
| 117 | 35 | ஹப்புத்தளை | 057-2268706 | 3 |
| 118 | 40 | ஹட்டன் | 051-2225015 | 14 |
| 119 | 570 | ஹெட்டிபொல | 037-2291494 | 39 |
| 120 | 609 | ஹிக்கடுவை | 091-2275249 | 11 |
| 121 | 601 | ஹிங்குராங்கொடை | 027-2246574 | 67 |
| 122 | 509 | ஹிங்குரானை | 063-2240037 | 27 |
| 123 | 569 | ஹிரிபிட்டி | 037-2264304 | 10 |
| 124 | 568 | ஹோமாகம | 011-2895280 | 6 |
| 125 | 54 | ஹொறணை | 034-2260428 | 141 |
| 126 | 32 | ஹல்ஸ்ரொப் | 011-2422770 | 23 |
| 127 | 770 | இப்பாகமுவ | 037-2259970 | 9 |
| 128 | 135 | இமதுவ | 091-2286773 | 11 |
| 129 | 453 | சுதந்திர சதுக்கம் | 011-2678073 | 5 |
| 130 | 87 | சர்வதேசப் பிரிவு | 011-2445794 | 612 |
| 131 | 604 | இங்கிரிய | 034-4921714 | 30 |
| 132 | 39 | ஜா-எல | 011-2236494 | 9 |
| 133 | 5 | யாழ்ப்பாண மேற்தரக் கிளை | 021-2224018 | 8 |
| 134 | 500 | யாழ்ப்பாணம் இரண்டாம் நகரக் கிளை | 021-2222598 | 17 |
| 135 | 600 | ஜயன்திபுர | 027-2222266 | 27 |
| 136 | 59 | கடவத்தை | 011-2920687 | 7 |
| 137 | 502 | கதுருவெல | 027-2225942 | 16 |
| 138 | 507 | கஹவத்தை | 045-2271177 | 5 |
| 139 | 370 | கைதடி | 021-2057121 | 2 |
| 140 | 427 | கல்லாறு | 067-2225421 | 13 |
| 141 | 589 | கல்பிட்டிய | 032-2297200 | 7 |
| 142 | 16 | களுத்துறை மேற்தரக்கிளை | 034-2229804 | 45 |
| 143 | 611 | களுவாஞ்சிக்குடி | 065-2250012 | 18 |
| 144 | 529 | கம்புறுப்பிட்டி | 041-2292213 | 41 |
| 145 | 771 | கந்தானை | 011-2232398 | 9 |
| 146 | 633 | கந்தபொல | 052-2229636 | 139 |
| 147 | 2 | கண்டி மேற்தரக் கிளை | 081-2223697 | 26 |
| 148 | 649 | கண்டி 2ம் நகரக்கிளை | 081-2234292 | 10 |
| 149 | 623 | கந்தளாய் | 026-2234008 | 22 |
| 150 | 266 | கரந்தெனிய | 091-3932627 | 26 |
| 151 | 280 | கராபிட்டிய | 091-2227090 | 10 |
| 152 | 295 | கரவிட்ட | 045-2279070 | 4 |
| 153 | 616 | கதிர்காமம் | 047-2235280 | 11 |
| 154 | 648 | காத்தான்குடி | 065-2248463 | 5 |
| 155 | 30 | கட்டுபெத்தை | 011-2625438 | 88 |
| 156 | 666 | கட்டுகஸ்தோட்டை | 081-2498948 | 5 |
| 157 | 625 | கட்டுகுருந்த | 034-2221364 | 4 |
| 158 | 658 | கட்டுநாயக்கா IPZ | 011-2259583 | 20 |
| 159 | 333 | கட்டுப்பொத்த | 037-2247471 | 39 |
| 160 | 261 | கட்டுவான | 047-3621005 | 2 |
| 161 | 621 | கெப்பித்திகொல்லாவ | 025-2298680 | 16 |
| 162 | 27 | கேகாலை மேற்தரக் கிளை | 035-2230600 | 6 |
| 163 | 536 | கேகாலைநகர் | 035-2223015 | 13 |
| 164 | 703 | கெப்பெற்றிபொல | 057-2280043 | 10 |
| 165 | 620 | கெஸ்பெவ | 011-2602517 | 13 |
| 166 | 617 | கெசல்வத்தை | 038-2288888 | 21 |
| 167 | 93 | கிளிநொச்சி | 021-2283949 | 4 |
| 168 | 735 | கிண்ணியா | 026-2236270 | 15 |
| 169 | 430 | கிரான் | 065-2054868 | 22 |
| 170 | 543 | கிரிபத்கொடை | 011-2911123 | 228 |
| 171 | 334 | கிரிமெட்டியான | 031-2249960 | 3 |
| 172 | 571 | கிரிந்திவல | 033-2269944 | 15 |
| 173 | 282 | கிதுல்கல | 036-2287747 | 6 |
| 174 | 172 | கொபெய்கனே | 037-2293101 | 4 |
| 175 | 375 | கொடிகாமம் | 021-2050315 | 5 |
| 176 | 750 | கொக்கல | 091-2283385 | 34 |
| 177 | 34 | கொள்ளுப்பிட்டி மேற்தரக்கிளை | 011-2573714 | 7 |
| 178 | 670 | கொள்ளுப்பிட்டி 2ம் நகரக் கிளை | 011-2565380 | 25 |
| 179 | 283 | கொலொன்ன | 045-2260280 | 7 |
| 180 | 595 | கொலன்னாவை | 011-5557286 | 36 |
| 181 | 787 | கோப்பாய் | 021-2230084 | 11 |
| 182 | 629 | கொஸ்லந்த | 057-2257780 | 32 |
| 183 | 455 | கொட்டகலை | 051-2244107 | 1 |
| 184 | 663 | கொட்டாஞ்சேனை | 011-2393635 | 11 |
| 185 | 284 | கொட்டியாக்கும்புர | 035-2289712 | 4 |
| 186 | 773 | கொட்டாவ | 011-2783313 | 19 |
| 187 | 52 | குளியாப்பிட்டி மேற்தரக் கிளை | 037-2283901 | 55 |
| 188 | 09 | குருணாகல் | 037-2233880 | 36 |
| 189 | 513 | குருநாகல் 2ம் நகரக் கிளை | 037-2231472 | 60 |
| 190 | 636 | லேக் ஹவுஸ் | 011-5863723 | 5 |
| 191 | 612 | லேக் வியு | 011-5859693 | 14 |
| 192 | 603 | லங்கா ஹொஸ்பிட்டல் | 011-2369535 | 4 |
| 193 | 577 | லுணுகல | 055-2263980 | 8 |
| 194 | 265 | லுனுகம்வெஹர | 047-2238180 | 1 |
| 195 | 647 | லுணுவத்த | 057-2232742 | 11 |
| 196 | 544 | மாதம்பே | 032-2247680 | 114 |
| 197 | 654 | மடாடுகம | 025-2264283 | 6 |
| 198 | 378 | மடு | 023-2280079 | 5 |
| 199 | 565 | மதுரங்குளிய | 032-2268123 | 79 |
| 200 | 55 | மஹரகம | 011-2746146 | 221 |
| 201 | 319 | மஹவெவ | 032-2054255 | 1 |
| 202 | 542 | மஹியங்கனை | 055-2258195 | 23 |
| 203 | 26 | பிரதான வீதி | 011-2393541 | 7 |
| 204 | 299 | மாகந்துர | 031-2299521 | 8 |
| 205 | 763 | மாலபே | 011-2760753 | 81 |
| 206 | 268 | மாலிம்பட | 041-2240447 | 1 |
| 207 | 255 | மல்கடுவாவ | 037-2052405 | 2 |
| 208 | 605 | மல்லாகம் | 021-2241024 | 10 |
| 209 | 281 | மானிப்பாய் | 021-2255580 | 21 |
| 210 | 574 | மாங்குளம் | 021-2060009 | 1 |
| 211 | 46 | மன்னார் | 021-2263354 | 14 |
| 212 | 41 | மருதானை | 011-2684219 | 39 |
| 213 | 456 | மாரஸ்ஸன | 081-2405105 | 13 |
| 214 | 300 | மாரவில | 032-2252675 | 4 |
| 215 | 506 | மஸ்கெலியா | 052-2277280 | 9 |
| 216 | 24 | மாத்தறை மேற்தரக் கிளை | 041-2229280 | 50 |
| 217 | 614 | மாத்தறை நகரக் கிளை | 041-2231633 | 9 |
| 218 | 556 | மத்துகம | 034-2243590 | 59 |
| 219 | 559 | மாவனல்லை | 035-2246297 | 49 |
| 220 | 257 | மாவத்தகம | 037-2299385 | 5 |
| 221 | 238 | மெதகம | 055-2266580 | 5 |
| 222 | 162 | மதவாச்சி | 025-2245865 | 64 |
| 223 | 641 | மெதிரிகிரிய | 027-3279802 | 21 |
| 224 | 728 | மீகலேவ | 025-2281102 | 8 |
| 225 | 567 | மீகொட | 011-2831589 | 2 |
| 226 | 458 | மீப்பிலிமான | 052-2237410 | 8 |
| 227 | 555 | மெல்சிறிபுர | 037-2250088 | 9 |
| 228 | 618 | மெட்ரொபொலிட்டன் | 011-2329419 | 84 |
| 229 | 518 | மித்தெனிய | 047-2247280 | 40 |
| 230 | 335 | மிகிந்தலை | 025-2266023 | 23 |
| 231 | 593 | மிலாகிரிய | 011-2504627 | 1 |
| 232 | 394 | மின்னேரியா | 027-2245333 | 1 |
| 233 | 545 | மினுவாங்கொடை | 011-2280782 | 112 |
| 234 | 88 | மீரிகம | 033-2276844 | 37 |
| 235 | 417 | மொல்லிபொத்தானை | 026-2246220 | 1 |
| 236 | 82 | மொனராகலை | 055-2276080 | 58 |
| 237 | 557 | மொறட்டுமுல்ல | 011-2652178 | 8 |
| 238 | 61 | மொறட்டுவை | 011-2644161 | 82 |
| 239 | 418 | மொறவெவ | 026-2225825 | 10 |
| 240 | 766 | கல்கிசை | 011-2721060 | 33 |
| 241 | 355 | முல்லைத்தீவு | 021-2290002 | 3 |
| 242 | 511 | முள்ளியவளை | 021-2061020 | 4 |
| 243 | 356 | முருங்கன் | 023-2050364 | 3 |
| 244 | 118 | மூதூர் | 026-2238327 | 53 |
| 245 | 724 | நய்வல | 033-2297777 | 3 |
| 246 | 359 | நானாட்டான் | 023-2050696 | 9 |
| 247 | 762 | நாராஹென்பிட்டி | 011-2368514 | 11 |
| 248 | 534 | நாரம்மல | 037-2248771 | 57 |
| 249 | 50 | நாத்தாண்டியா | 032-2250877 | 9 |
| 250 | 92 | நாவுல | 066-2246808 | 11 |
| 251 | 598 | நாவலப்பிட்டி | 054-2224181 | 25 |
| 252 | 18 | நீர்கொழும்பு மேற்தரக் கிளை | 031-2239433 | 15 |
| 253 | 572 | நீர்கொழும்பு நகரக் கிளை | 031-2232133 | 24 |
| 254 | 638 | நெல்லியடி | 021-2061720 | 29 |
| 256 | 547 | நிக்கவரட்டிய | 037-2260922 | 6 |
| 257 | 420 | நிலாவெளி | 026-2232290 | 7 |
| 258 | 591 | நிந்தவூர் | 067-3696117 | 18 |
| 259 | 675 | நிட்டம்புவ | 033-2297280 | 15 |
| 260 | 597 | நிவித்திகல | 045-2279086 | 2 |
| 261 | 656 | நொச்சியாகம | 025-2257088 | 10 |
| 262 | 779 | நுரைச்சோலை | 032-2268877 | 15 |
| 263 | 737 | வடமேல்மாகாண அலுவலகம் | 037-2223618 | 22 |
| 264 | 49 | நுகேகொடை | 011-2825612 | 222 |
| 265 | 29 | நுவரெலியா | 052-2224047 | 40 |
| 266 | 402 | ஓட்டமாவடி | 065-2258111 | 6 |
| 267 | 706 | ஓக்கம்பிட்டிய | 055-2272092 | 5 |
| 268 | 362 | ஓமந்தை | 024-2052740 | 4 |
| 269 | 127 | பதவி பராக்கிரமபுர | 025-2254118 | 1 |
| 270 | 492 | படியபெலெல்ல | 052-3536628 | 40 |
| 271 | 348 | பதியதலாவ | 063-2246003 | 9 |
| 272 | 678 | பாதுக்க | 011-2859112 | 369 |
| 273 | 301 | பாலவிய | 032-2269210 | 10 |
| 274 | 302 | பள்ளம | 032-2224945 | 3 |
| 275 | 404 | பலுகாமம் | 065-2251622 | 4 |
| 276 | 7 | பாணந்துறை மேற்தரக் கிளை | 038-2243323 | 3 |
| 277 | 607 | பாணந்துறைநகரக் கிளை | 038-2243324 | 73 |
| 278 | 377 | பண்டத்தரிப்பு (இளவாலை) | 021-2211979 | 1 |
| 279 | 546 | பன்னலை | 037-2245071 | 60 |
| 280 | 303 | பரகஹதெனிய | 037-2296085 | 4 |
| 281 | 503 | பசறை | 055-2288865 | 31 |
| 282 | 42 | பேலியகொடை | 011-2980025 | 18 |
| 283 | 683 | பெல்மடுல்ல | 045-2274420 | 20 |
| 284 | 707 | பெலவத்தை | 055-2271120 | 2 |
| 285 | 152 | பேமடுவ | 025-2053430 | 16 |
| 286 | 588 | பேராதனை | 081-2388954 | 75 |
| 287 | 681 | தனியாள் கிளை | 011-2446821 | 61 |
| 288 | 4 | புறக்கோட்டை | 011-2434478 | 151 |
| 289 | 587 | பிலிமதலாவை | 081-3753517 | 9 |
| 290 | 736 | பிலியந்தலை | 011-2619970 | 57 |
| 291 | 272 | பிட்டபெத்தர | 041-2281081 | 12 |
| 292 | 533 | பிட்டகோட்டை | 011-2820311 | 1 |
| 293 | 610 | பிட்டிகல | 091-2291205 | 1 |
| 294 | 28 | பருத்தித்துறை | 021-2060820 | 149 |
| 295 | 526 | பொல்கஹவெலை | 037-2243550 | 22 |
| 296 | 83 | பொலன்னறுவை புதிய நகரம் | 027-2223010 | 16 |
| 297 | 783 | பொல்பித்திகம | 037-2273103 | 28 |
| 298 | 405 | பொல்வத்த | 063-2242128 | 10 |
| 299 | 346 | பூவரசன்குளம் | 024-3248002 | 3 |
| 300 | 664 | பொத்துஹெர | 037-2239419 | 13 |
| 301 | 318 | பொத்துவில் | 063-2248021 | 10 |
| 302 | 099 | முதன்மை வணிகர் பிரிவு | 011-2203740 | 19 |
| 303 | 765 | பூகொட | 011-2404821 | 3 |
| 304 | 441 | பூஜாப்பிட்டிய | 081-2301718 | 9 |
| 305 | 406 | புல்மோட்டை | 026-2256200 | 3 |
| 306 | 425 | பூண்டுலோயா | 051-2233205 | 11 |
| 307 | 337 | புஸல்லாவ | 081-2478642 | 32 |
| 308 | 342 | புதுக்குளம் | 024-2053499 | 4 |
| 309 | 48 | புத்தளம் | 032-2265255 | 138 |
| 310 | 687 | ரத்தொலுகம | 011-2289977 | 5 |
| 311 | 442 | ராகல | 052-2265660 | 16 |
| 312 | 764 | றாகம | 011-2960290 | 13 |
| 313 | 746 | ராஜகிரிய | 011-2887637 | 3 |
| 314 | 397 | ரஜின சந்தி | 025-2275057 | 4 |
| 315 | 594 | றக்வான | 045-2246880 | 64 |
| 316 | 782 | ரம்பாவ | 025-2054538 | 7 |
| 317 | 582 | றம்புக்கணை | 035-2264534 | 15 |
| 318 | 767 | ரண்ண | 047-2227280 | 499 |
| 319 | 259 | ரத்கம | 091-2267791 | 1 |
| 320 | 689 | இரத்மலானை | 011-2719735 | 30 |
| 321 | 31 | இரத்தினபுரி மேற்தரக் கிளை | 045-2222100 | 6 |
| 322 | 639 | இரத்தோட்ட | 066-2255280 | 18 |
| 323 | 627 | ரிஜன்ட் வீதி | 011-2690540 | 7 |
| 324 | 532 | ரிதிகம | 037-2252079 | 26 |
| 325 | 167 | ரிகில்லகஸ்கட | 081-2365314 | 20 |
| 326 | 585 | ருவான்வெல்ல | 036-2266281 | 10 |
| 327 | 421 | சீதுவை | 011-2259590 | 13 |
| 328 | 408 | சேருநுவர | 026-2251010 | 20 |
| 329 | 399 | செவனப்பிட்டிய | 027-2050280 | 6 |
| 330 | 183 | சேவாகம | 027-3279803 | 76 |
| 331 | 339 | சிறுப்பிட்டி | 021-2231092 | 3 |
| 332 | 416 | சியம்பலாண்டுவை | 055-3555360 | 57 |
| 333 | 797 | தென் மாகாண அலுவலகம் | 091-2234214 | 2 |
| 334 | 751 | சூரியவெவ | 047-2288280 | 24 |
| 335 | 650 | தலாதுஓயா | 081-2406343 | 47 |
| 336 | 531 | தலவாக்கலை | 052-2258892 | 34 |
| 337 | 596 | தல்கஸ்வெல | 091-2296102 | 9 |
| 338 | 056 | தங்காலை | 047-2240280 | 40 |
| 339 | 250 | தவலம | 091-3783030 | 3 |
| 340 | 781 | தெல்தெனிய | 081-2376820 | 2 |
| 341 | 380 | தெள்ளிப்பளை (அளவெட்டி) | 021-2059656 | 2 |
| 342 | 336 | தலைமன்னார் இறங்குதுறை | 023-2281085 | 12 |
| 343 | 400 | தலாவ | 025-2275090 | 6 |
| 344 | 322 | தணமல்வில | 047-2234080 | 8 |
| 345 | 761 | திருநெல்வேலி | 021-2219570 | 2 |
